உணவுப் பஞ்சம்

காசி ஹிந்து விசுவ வித்தியாலய ஆசிரியர்,

மு. அருணாசலம்

எழுதியது

சக்தி காரியாலயம்

சென்னை : மதுரை : கோயமுத்தூர் : திருநெல்வேலி

முதல் வெளியீடு 25—6—1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை ரூபாய் ஒன்றரை
தபால் செலவு தனி

Printed at the Sadhu Press, Royapettah
P. I. C. No. M. S. 115
for Shakti Karyalayam
P. I. C. No. M. S. 202—C. 1,000—25-6-46

பதிப்புரை

தமிழ்நாட்டில், உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடுமென்ற பேரச்சம், என்றுமில்லாதபடி இப்போது ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் மந்திரி சபையார் இதைப் போக்க ஆவன செய்வார்கள் என்றே நாம் எதிர்பார்ப்போம். அரசாங்கத்தாரும் பொது மக்களும் இது சம்பந்தமாய் அறியத்தக்க சில கருத்துக்களை ஆசிரியர் மு. அருணாசலம் அவர்கள் இச்சிறு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். பயிர்த் தொழிலிலும் தோட்டத் தொழிலிலும் நிறைந்த அனுபவம்பெற்ற அவர்கள் கூறும் கருத்துக்கள் அரசியலாரும் அறிவாளிகளும் சிந்திக்கத்தக்கனவாகும். இவற்றில் சிலவேனும் நடைமுறைக்கு வருமாயின், மக்களுக்குப் பயனுண்டு. இச் சிறு புத்தகம், காங்கிரஸ் மந்திரி சபையார் பதவி யேற்குமுன் (பிப்ரவரி 1946) எழுதப்பெற்ற தென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

சக்தி காரியாலயம்.

அன்னத்தை நிந்திக்கக் கூடாது ;

அதுவே விரதம்.

அன்னத்தை எறியக் கூடாது ;

அதுவே விரதம்.

அன்னத்தை மிகுதியாக உண்டுபண்ண வேண்டும்.

அதுவே விரதம்.

வீட்டுக்கு வந்தவர் யாரா யிருந்தாலும் மறுக்கலாகாது ;

அதுவே விரதம்.

ஆகையால்,-எந்த விதமாகவேனும்

அதிக அன்னத்தை அடைய வேண்டும்.

— தைத்திரீயோபநிஷத்

உணவுப் பஞ்சம்

தமிழ் நாட்டிலிருந்து நெடுந் தொலைவில் வாழ்ந்துகொண்டிருக்கும் எனக்கு, தமிழ் நாட்டில் பெருத்த உணவுப் பஞ்சம் ஏற்படப் போகிறது என்ற செய்தி அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. பத்திரிகைகள் மூலமாக நாட்டில் இப்போதுள்ள நிலைமையையும், மழைக் குறைவால் ஏற்பட்ட விளைவுக் குறைவையும், மக்களும் சர்க்காரும் பஞ்சத்தைச் சமாளிக்க மேற்கொள்ளும் முயற்சிகளையும் அறியும்போது நெஞ்சம் திடுக்கிடுகிறது.

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு

என்று பாரதியார் பாடினார். அப்படிப் பல ஆறுகள் ஓடி மேனி செழித்த தமிழ்நாட்டில் இவ்வாண்டு மழையும் குறைந்து விளைவும் குறைந்து பஞ்சம் ஏற்படக்கூடும் என்ற செய்தியை எண்ணிய போது, மனத்தில் எத்தனையோ சிந்தனைகள் எழுந்தன. அந்தச் சிந்தனைகளின் கோவையே இங்குக் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் யாவும்.

இவற்றுள் தனி மனிதர் செய்வதற்குரியனவும் பல வுள்ளன, அரசாங்கத்தார் செய்வதற்குரியனவும் பல வுள்ளன. தனி மனிதர் செய்தற்குரியனவற்றை, நகர மக்களும் நாட்டு மக்களும் அனுசரித்து நடந்தால், பஞ்சம் விசேஷ அளவுக்குக் குறையும். அங்ஙனமே அரசாங்கத்தார் தங்கள் பொறுப்பை யுணர்ந்து, செய்யவேண்டியவற்றைச் சீக்கிரத்திலும், நல்ல எண்ணத்தோடும் செய்வார்களாயின் எவ்வளவோ மேலான பயன் விளைய இடமுண்டு. நல்லெண்ணமே முக்கிய அம்சமாகும். வங்கப் பஞ்சத்தில் இறந்தோர் தொகை மிக்க அதிகம் என்று பேச்சு வந்தபோது, பிரிட்டிஷ்காரர் ஒருவர், (இங்கே கவர்னரா யிருந்தவ ரென்று ஞாபகம்) "ஜெர்மன் குண்டுகள் விழுந்து வெடித்ததனால் பிரிட்டனில் சேதமடைந்த மக்கள் தொகை எவ்வளவோ அதிகமானது. அப்படியெல்லாம் எங்கள்

தேசத்தில் நாங்கள் உயிரைத் தியாகம் பண்ணியிருக்கும்போது உங்கள் தேசத்தில் சிலபேர் பட்டினியால் செத்துப்போவது பற்றிப் பிரமாதப்படுத்த வேண்டியதில்லை" என்று சொன்னாராம். இதன் மேல், நம் நாட்டில் நேர்ந்த பட்டினிச் சாவுகள்பற்றிப் புள்ளி விவரம் சேர்த்தவர்கள், பிரிட்டனில் குண்டுவீச்சால் இறந்தவர்கள் மட்டு மல்லாமல், எல்லாப் போர்முனைகளிலும் இறந்த பிரிட்டிஷ் போர் வீரர்களை விட, இந்தியாவில் பட்டினியால் வங்கப் பஞ்சத்தில் மடிந்தவர்களின் தொகை மிகவும் அதிகம் என்று திட்டமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

எல்லா அதிகாரிகளும் இந்தப் பிரிட்டிஷ்காரர் போன்ற மனப் பான்மையுடையவர்களென்று சொல்ல முடியாது. நல்ல எண்ணம் கொண்டவர்களும் அத்தி பூத்தாற்போல் இருக்கிறார்கள். தவிர, இக்காலம், பெருத்த அரசியல் மாறுதல்கள் நிகழப்போகிற காலமாகும். எனவே, இங்குக் கூறியுள்ள கருத்துக்கள் பரவினால் பயன் விளையும் என்று எதிர்பார்க்க இடம் உண்டு.

2

'சகத்தினை அழித்திடுவோம்'

முன்னெல்லாம் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில், பிரிட்டிஷ் ஆட்சியினால் விளைந்த நன்மைகள் என்ற ஒரு விரிவான பாடம் இருக்குமாம், அதில், பிரிட்டிஷார் இந்தியாவில் ரயில் போட்டார்கள், தந்தி போட்டார்கள், தபால் ஏற்படுத்தினார்கள், உடன்கட்டையேறும் வழக்கத்தை நிறுத்தினார்கள் என்றெல்லாம் பெரிய சகஸ்ர நாம பாராயணமே இருக்குமாம். அந்தப் பாராயணத்தில், "வங்கப் பஞ்சத்தில் சுமார் 35 லட்சம் ஜனங்கள் மடியச் செய்தார்கள்; 1946-ம் வருஷம், தென் தமிழ்நாட்டிலும் கொடிய பஞ்சமாகிய வரப்பிரசாதத்தை அருளினார்கள்" என்று புதிய பாடலை இக் காலத்தில் சேர்த்துக்கொள்வது பெரிதும் பொருத்தமாகும்.

தமிழ்நாட்டில் உணவுப் பஞ்சம் என்பது இதற்குமுன் எப்போதுமே கேட்டிராத கொடிய பயங்கரமான செய்தியாயுள்ளது. வங்கப் பஞ்சம் பற்றிய பரிதாப மரணங்களை யறிந்த நமக்கு, இச் செய்தி சொல்லவொண்ணாத திகிலை விளைவிக்கத்தான் செய்யும். பொதுவாக இந்திய மக்கள் அனைவருக்கும், சிறப்பாகத் தமிழ் மக்களுக்கும், "பசித்தோர் முகம் பார்", "இவ்வளவேனும் அன்னமிட்டுண்" என்பன போன்ற மூதுரைகளே வாழ்க்கையில் முக்கியமான குறிக்கோளாயிருந்து வந்துள்ளன. பசிப்பிணியால் ஒருவன் மாண்டான் என்ற சொல் கேட்கத் தமிழ் மக்கள் பொறுக்கமாட்

டார்கள். ஔவையார் பாடலொன்று இந்தக் குறிக்கோளை மிகவும் அழகுபட எடுத்துக் கூறுகிறது ;

வையக மெல்லாம் வளவயலா வானோர்
தெய்வமா முகடு சேரிய தாகக்
காணமும் முத்தும் மணியும் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினும், ஒருநாள்
ஒருபொழு தொருவன் ஊண்ஒழிதல் பார்க்கும்
நேர் நிறை நில்லா தென்னுமென் மனனே,
நேர் நிறை நில்லா தென்னும் மனனே

என்பது பாட்டு. 'ஒருநாள் ஒருபொழுது ஒருவன் ஊண் இல்லாது போதலைப் பார்க்க என் மனம் தாங்காது' என்பது இதன் கருத்து. இப்படிப்பட்ட சிறப்பான குறிக்கோள் கொண்டிருந்த தமிழகத்தில்தான், இன்று பெரிய உணவுப் பஞ்சம் வரப்போகிறது என்று பத்திரிகைகளும் அரசாங்கத்தாரும் பிறரும் கூறிவருகிறார்கள். என்ன விபரீதம் !

மேற்கூறிய உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருந்த தமிழர் பரம்பரையில் வந்தவர், பாரதியார். 'தனி யொருவனுக் குணவிலை யெனில், சகத்தினை யழித்திடுவோம்' என்கிறார் அவர். மனம் பொறுக்காது என்று சொல்லுவதோடு மட்டும் அவர் திருப்தி யடையாமல், 'உலகையே அழிக்கத் தலைப்படுவோம்' என்று அவர் வீர முரசறைகிறார். 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பது உண்மை. உணவுப் பஞ்சம் மெய்யாகவே வந்து குடிகொண்டு, பசி நிலவுமானால், பத்தும் பறந்து போகும்போது, 'பிரிட்டிஷாருக்கு அடிமை' என்ற உணர்ச்சியும் அச்சமும் கூடவே பறந்து போகவும் கூடும். எல்லாம் நன்மைக்காகவே என்பதுபோல, அப்படிப்பட்ட நிலைமை வரும்போது என்ன நடக்குமென்பதை யாரே இப்போது கூற முடியும் ?

3

பஞ்சத்தின் காரணங்கள்

உணவுப் பஞ்சத்துக்கு முதல் காரணம், பெரிய வியாபாரிகளாயுள்ளவர்கள் நெல், கோதுமை முதலியவற்றைப் பெருவாரியாக வாங்கிச் சேமித்து வைத்துத் திருட்டுத்தனமாக விலைக்கு விற்பதே யாகும். உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதே விவசாயிகளின் தருமம். ஆதலால், சர்க்காருடைய பராமுகத்தையும்

ஆதரவுக் குறைவையும் பொருட்படுத்தாமல், இன்னல்களின் மத்தியிலேயே வாழ்ந்தும் அவற்றுக் கஞ்சாமல், மனம் சோர்ந்து போகாமல் விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டே வருகிறார்கள். நம் நாட்டில் எந்த இடத்திலுமே விவசாயியானவன், இடையிலுள்ள தரகனாயிருந்து, மற்ற விவசாயிகளிடமிருந்து நெல்லை வாங்கிச் சேமித்துச் சர்க்காருக்கும் ராணுவத்தாருக்கும் பிற ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கும் வேலையை மேற்கொண்டதில்லை. லாபம் சம்பாதிக்கும் எண்ணம் விவசாயிகளுக்கு இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை. லாபம் தேடவேண்டுமென்றால், உற்பத்தியான பொருளைப் பதுக்கி வைத்திருந்து உச்சவிலை விற்கும் காலம் பார்த்திருந்து விற்கிற பொறுமை வேண்டும். இந்தப் பொறுமையும் அதற்கவசியமான பணவசதியும் விவசாயிகளிடம் இல்லை.

விவசாயிகள் லாபத்தைப் பற்றிச் சிந்தனை செய்யலாகாது என்பதே நம் காருண்ய சர்க்காரின் எண்ணம் என்று தெரிகிறது. அவர்களுடைய வரிவசூல் முறையும், வசூல் செய்யும் காலமும் நம்மை இவ்வாறு எண்ணச் செய்கின்றன. கிஸ்திப் பணத்தைச் சர்க்கார், மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மூன்று மாதங்களில் முதல் வாரத்தில் வசூல் செய்கிறார்கள். தைமாதம் விவசாயிக்கு அறுவடை காலம். மாசியில் அறுவடை பாதி நடந்ததும் பாதி நடவாததுமாக இருக்கும். இந்த நிலையில்தான் அவர் நெல்லில் ஒரு பகுதியை விற்று வரி செலுத்தவேண்டும். 'நல்லோ ரென்றான் தீயோ ரென்றான், தரியான் ஒருகணம் தறுகணாளன்' என்று பாட்டில் கூறியதுபோல, குறித்த தேதியில் கிஸ்தி கட்டித்தான் ஆகவேண்டும். இதை நெல்லாகக் கட்டுவதென்றால், உடனே கட்டுவதில் விவசாயிக்குக் கஷ்டமிராது. ஆனால் பணமாய்க் கட்டுவதனால், எவ்வளவோ கஷ்டம். 'கிஸ்தி முடை' என்பது காரணமாக, நெல் வியாபாரிகள் எப்போதும் நெல்லைக் கலத்துக்கு நாலணா குறைவாகத்தான் கேட்பார்கள். கிஸ்தி கட்டவேண்டிய நிர்ப்பந்தமுடைய விவசாயி, அந்தக் குறைந்த விலைக்கு நெல்லை விற்காமல் என்ன செய்யமுடியும்? விற்றுத்தான் கிஸ்தி கட்ட வேண்டியிருக்கிறது. சிறிது காலம் பொறுத்து, ஓரணா இரண்டணா அதிக விலை கிடைக்கும் சந்தர்ப்பத்தில் விற்கலா மென்று எண்ணினால், இந்தக் கிஸ்தி நிர்ப்பந்தம் அது முடியாதபடி செய்துவிடுகிறது. இப்போதுள்ள நிலைமையில் நெல்லில் பாதியை விற்றால்தான் முழுக் கிஸ்தியையும் கட்டலாம்; யுத்தத்துக்கு முந்திய காலமென்றால், நெல்லின் முக்கால் பங்கை விற்றால்தான் கிஸ்தியைக் கட்ட முடியும்.

இவ்விதமாக, விவசாயிகளின் கிஸ்தி முறையை நன்றாய்ப் பயன்படுத்திக்கொண்டு, கூடியவரையில் விலையைக் குறைத்து வாங்கி, வியாபாரிகள் நெல்லைச் சேர்த்தார்கள். இப்படிச் சேர்த்த நெல்லை ராணுவத்தார் தேவைக்கு ஏற்றபடி அங்கங்கே கொடுத்து வந்தார்கள். இவர்கள் எவ்வளவு வாங்கினார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என்பதுபற்றி விசேஷமாய்க் கணக்கு உண்டென்றோ சரியான கணக்கு உண்டென்றோ சொல்ல முடியாது. லட்சக்கணக்கான மூட்டைகளை வாங்கி விநியோகம் செய்யும் போது, இவர்கள் எத்தனை லட்சம் மூட்டைகளை எங்கே எப்படிப் பதுக்கி வைத்தார்கள் என்பதை யாரும் சொல்லவும் முடியாது, கண்டு பிடிக்கவும் முடியாது. வங்கப் பஞ்சத்துக்குப் பாதிப் பொறுப்பு இவர்களுடையது என்று பத்திரிகைகளெல்லாம் எழுதி வந்தன. வங்கத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுமே இப்படித்தான்.

விவசாயிகளிடம் தங்கள் சாப்பாட்டு நெல், விதை நெல், சாகுபடிச் செலவுக்கு வேண்டிய 'தசுக் கூலி' நெல் ஆகியவை கணக்காகவே இருக்கும். யாருமே அதிகமாய் இருத்திக்கொள்ளும் நோக்கத்தோடு வைத்திருப்பதில்லை. கிஸ்தி என்ற பெருமுடையை எதிர்நோக்கியும், மாடு வாங்குவது, தீனி வாங்குவது என்பன போன்ற பெருஞ் செலவுகளைக் கருதியும், அவர்கள் தங்கள் நெல் அவ்வளவையும் விற்றுவிடுவார்கள். ஒரு வேலி அல்லது ஆறு ஏகராவுக்குக் குறைந்த நிலமுடைய ஏழை விவசாயிகள் பலர், தசுக்கூலி நெல்லையும் விற்றுவிட்டுப் பின்னால் பெருங்கஷ்டப் அடையும் பரிதாபத்தையும் நாம் பார்த்திருக்கிறோம்.

எனவே, பதுக்கல் என்பது இவர்களிடமில்லை. மற்று நடுவே யுள்ளவர்களான பெரிய வியாபாரிகளிடம் பதுக்கல் எவ்வளவு இருக்கிறதென்று கண்டுபிடிக்க ஒருவராலும் முடியாது. சில்லறை வியாபாரிகளிடமும் பதுக்கல் இருக்க முடியாது. அதிகமாய்ப் பதுக்கிவைக்க இவர்களுக்கு வசதிக்குறைவு, அதிகாரிகளிடம் பயம், எப்போது அகப்பட்டுக் கொள்வோமோ என்ற நினைப்பு, கொஞ்ச லாபம் போதும் என்ற திருப்தி ஒருபுறம்—இக்காரணங் களால் இவர்கள் அதிகம் பதுக்கமுடியாது. தவிர, கொடுக்கல் வாங்கல் கணக்கும் இவர்கள் விஷயத்தில் அதிகக் கெடுபிடியா யிருக்கும். கணக்குத் தயாரிக்கிற பழக்கம் இல்லாதபடியால், இவர்கள் இருப்பு உள்ளதெல்லாம போட்டுவிட்டு, அதிகாரிகள் கேள்வி கேட்பதற்கு இடமே வைக்கமாட்டார்கள்.

பெரிய வியாபாரிகள் நிலைமை வேறு. யுத்த நிதிக்காக இவர்கள் அளிக்கும் பெரிய பெரிய நன்கொடைகளைக் கருதி, சில்லறை வியா

பாரிகளின் கணக்கில் ஏற்படும் தகராறுகளில் ஒன்றும் இவர்கள் கணக்கில் எழுவே எழுமாட்டா. இவர்கள் சொன்னதுதான் சர்க்காருக்குக் கணக்கு. நெல் மூட்டைகள் லட்சக்கணக்கிலும், ரூபாய் கோடிக் கணக்கிலும், வரவு செலவு செய்யப் பெற்றுள்ள இவர்கள் கணக்கைச் சர்க்கார் குமாஸ்தாக்களும் அதிகாரிகளும் புரிந்து கொள்வதும் கஷ்டம். எனவே, இவர்கள் காட்டிய கணக்கு ஒப்புக் கொள்ளப் பெறுகிறது. லட்சக்கணக்கான நெல் மூட்டை வரவு செலவு நடக்கும்போது, சில லட்சம் கூடுதல் குறைதல் நேரக்கூடும். இந்தக் கூடுதல் குறைதலைத்தான் நாம் பதுக்கல் என்கிறோம். இப்படியுள்ள பதுக்கலே, இன்று ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சத்துக்கு முதற் காரணம்.

4

உணவு ஏற்றுமதி

இரண்டாவது காரணம், ஏற்றுமதி. 'உணவுப் பஞ்சம் வரப் போகிறது, உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று அரசாங்கத்தார் இப்போது ஓயாமல் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தப் பிரசாரத்துக்காக எத்தனையோ உத்தியோகஸ்தர்களை நியமித்து, அவர்களுடைய சம்பளத்துக்கும் பிரயாண வர்த்தனைக்குமாக அரசாங்கத்தார் ஏராளமாய்ச் செலவு செய்து வருகிறார்கள். இப்படிச் செலவு செய்யும் பணத்தைக்கொண்டு அன்னிய நாடுகளில் அரிசியும் கோதுமையும் வாங்கி இந்தியாவுக்குக் கொடுத்தால், வரப் போகிறது என்று பயமுறுத்துகிற பஞ்சம் இன்னும் ஆறுமாதம் தூரப் போகும்படி செய்யமுடியும் என்று தோன்றுகிறது. பிரசாரத்தால் பயன்விளைய வேண்டுமானால், முதலாவதாகப் பிரசாரத்தைப் பொதுமக்கள் நம்பி, அதில் சாத்தியமாயுள்ள அம்சங்களைச் செயலில் கொண்டுவர முயல வேண்டும். இன்றுள்ள சர்க்கார் பிரசாரத்தில் பொதுமக்கள் கடுகளவேனும் நம்பிக்கை கொள்வது சாத்தியமில்லை. இதன் காரணமென்ன?

உணவு உற்பத்திப் பெருக்கம் அவசியந்தான். ஆனால் யாருக்காக இப்பெருக்கம் என்று கேள்வி எழுகிறது. 'நமது நாட்டில் நம் சகோதர சகோதரிகள் உணவின்றி மடிகிறார்கள், ஆகவே அவர்களுக்கு உணவு உதவும்பொருட்டே நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்' என்று கூறுவது நியாயமானதே. இக் கூற்றின் உண்மையை மக்கள் உணர்ந்து, ஆவன செய்ய முயல்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் விவகாரங்கள் இந்த ரீதியில் இன்று நிகழவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட வங்கப்

பஞ்சத்தை நாம் இன்னும் மறந்திருக்கமாட்டோம். ஏறக்குறைய முப்பத்தைந்து லட்சம் பேர் அந்தப் பஞ்சத்தில் இறந்தார்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மக்கள் ஆயிரக்கணக்கில் நாள்தோறும் தெருக்களில் இறந்து விழுந்துகொண்டிருந்தபோது, துறைமுகத்தைவிட்டு ஆயிரக்கணக்கான அரிசி மூட்டைகளும் கோதுமை மூட்டைகளும் பிற உணவுப் பொருளும், கப்பலேறி அயல்நாடுகளுக்குப் போன விசித்திரத்தை, இந்தக் காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் ஆட்சியிலன்றி, வேறு எந்த ஆட்சியிலும் எந்தத் தேசத்திலும் காணுதல் இயலாது. இதை நினைவு கூர்பவர்களுக்கு, சர்க்கார் பிரசாரம் எவ்வளவு வீண், எவ்வளவு பயனற்றது என்பது தானே விளங்கும்.

ஆனால் இது பழங்கதை. இன்றைய நிலைமையையும் சற்றே ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். பஞ்சம் வரப்போகிறது, வரப்போகிறது என்று இன்றுள்ள சர்க்கார் ஏறக்குறைய ஒரு வருஷமாகக் கூப்பாடுபோட்டு வருகிறார்கள். பஞ்சத்தால் சாவதற்கு முன்னமே சிலராவது பயத்தால் சாகட்டும் என்று எண்ணினார்களோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. இப்படி, பயங்கரமான பஞ்சம் வருகிறது என்று பயமுறுத்துகிற அரசாங்கத்தார், இந்திய மண்ணில் விளைகிற உணவுப் பொருள்களைக் கப்பல் கப்பலாக இன்னும் வெளிநாட்டுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்துகொண்டு தான் வருகிறார்கள்.[1] தினசரிப் பத்திரிகையில் ஓயாமல் வரும் புள்ளி விவரங்களையும் அவற்றுக்குச் சர்க்கார் எவ்விதப் பதிலும் கூறாமல் மௌனம் சாதிப்பதையும் பார்த்தால், ஏற்றுமதி நடப்பது உண்மை என்பதில் சந்தேகமே இருக்கமுடியாது. பின்வரும் செய்தி பிப்ரவரி 20உ பத்திரிகையில் வெளியாயிற்று :

> " இந்தியாவிலிருந்து உணவுப்பொருள் ஏற்றுமதி
>
> சென்னை, பிப். 20—
>
> 1945 நவம்பர் 30 தேதியுடன் முடியும் 8 மாதங்களுக்குள் 63,000 டன் அரிசியும் தானியங்களும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதில் 42,000 டன் அரிசியும், 21,000 டன் பருப்பும் மற்றத் தானியங்களும் அடங்கியிருந்தன. மேலும் 4 கோடி 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளும், 16,000 டன் மீனும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இன்னும் ஏற்றுமதி நடந்துவருகிறது. "

உண்மையான நாட்டுப்பற்று உடைய மக்களுக்கு இச்செய்தி எவ்வளவு ஆத்திரமூட்டும் என்பது சொல்லவேண்டியதில்லை. உணவுப் பஞ்சம் என்று கத்திக் கத்தி, உற்பத்திப் பெருக்கும்

செய்யச் சொல்வதெல்லாம், பிரிட்டிஷ் சர்க்காரின் கருணைக்குப் பாத்திரமான அயல்நாட்டினர் யாரோ தின்று கொழுப்பதற்காகத் தான். இந்திய மக்கள் மடிந்தால், "போக்குவரத்து வசதிக் குறைவால் உணவை விரைவில் கொண்டுபோய் தேவைக்கேற்றபடி விநியோகம் செய்யமுடியவில்லை" என்ற சமாதானம், சர்க்கார் பையில் எழுதி எப்போதும் தயாராய் வைத்திருக்கிறார்கள்.

சர்க்காரின் உணவு உற்பத்திப் பிரசாரம் எவ்வளவு போலியான தென்பதையும் அவர்களை நம்பிப்—பயனில்லை என்பதையும் விளக்க, விஷயமறிந்தவர்கள் ஆங்காங்கு ஏற்றுமதி பற்றிய விவரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டு வருகிறார்கள். ஏற்றுமதியே நடக்கவில்லை என்று பொதுப்படையாக அதிகாரிகள் தங்கள் பிரசாரத்தில் கூறுவது வழக்கமாகி யிருக்கிறது. ஆனால் யாரேனும் புள்ளி விவரங்களை எடுத்துக்காட்டும்போது, அவற்றுக்கு விடை கூற வகையில்லாமல் அவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். இவ்விதம் உணவுப் பொருள் விஷயத்தில் சர்க்கார் இந்த நாட்டுக்குச் செய்த துரோகத்தைத் தினந்தோறும் பலர் எடுத்துக் காட்டுகிறார்கள். பிப்ரவரி 24-உ பத்திரிகையில் வெளிவந்த பின்வரும் செய்தி மற்றோர் உதாரணமாகும் :

"கல்கத்தாவிலிருந்து 61,757 டன் அரிசி ஏற்றுமதி
மார்வாரி வர்த்தகசபைத் தலைவர் வெளியிடும் தகவல் :

கல்கத்தா, பிப். 23.

1945 ஏப்ரலிலிருந்து நவம்பருக்குள் இந்தியாவிலிருந்து 4,286 டன் அரிசிதான் ஏற்றுமதியாகி யிருக்கிறது என்று இந்திய சர்க்கார் உணவு இலாகா காரியதரிசி ஸ்ரீ பி. ஆர். ஸென் கூறியதுபற்றி, மார்வாரி வர்த்தகசபைத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில், '1945 மே மாதத்திலிருந்து அக்டோபருக்குள் கல்கத்தா துறைமுகத்திலிருந்து மாத்திரம் 2,46,98,467 (சுமார் இரண்டரைக் கோடி) ரூபாய் மதிப்புள்ள 61,757 டன் 3 அந்தர் 40 பவுண்டு அரிசி ஏற்றுமதியாகி யிருக்கிறது. கடற்சுங்கக் காரியாலய ஜாபிதாவைக் கவனிக்கும்படி ஸ்ரீ ஸென்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இலங்கைக்கு 4,232 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதாக ஸ்ரீ ஸென் கூறினார் ; ஆனால் 1945 டிசம்பரில், இலங்கைக்கு 11 டன் 7 அந்தர் அரிசிதான் கல்கத்தா துறைமுகத்திலிருந்து அனுப்பப் பட்டதாக அறிவிக்கப்பட்டது !' என்று கூறியிருக்கிறார்."

எனவே, உணவு உற்பத்திப் பெருக்கத்துக்காக ஒருபுறம் பிரசாரம் செய்துகொண்டு வரும் நம் அரசாங்கத்தார், மறுபுறம்

உணவுப் பஞ்சம் வருவதற்குத் தங்களாலான பேருதவியை எப்படிச் செய்துவருகிறார்கள் என்பது இவ்வுதாரணங்களால் தெளிவாய்ப் புலப்படுகிறது.

5

உணவுப்பொருள் நாசம்

உணவுப் பஞ்சத்துக்கு முக்கிய காரணம், மூன்றாவதாக உணவுப்பொருள் நாசம்.

1946-ஆம் வருஷம் பிற்பகுதியில் தஞ்சை ஜில்லாவில் சில ரெயிலடிகள் (ரெயில்வே ஸ்டேஷன்கள்) அளித்த தோற்றத்தைப் பார்த்தவர்கள் யாரும் மறந்திருக்கமுடியாது. அப்போது ஒருசமயம் நான் திருநெல்வேலிக்குப் போய்விட்டுத் திரும்பிவந்துகொண்டிருந்தேன். கும்பகோணம் தாண்டிச் சில ஸ்டேஷன்கள் ஆனதும், ஒரு ஸ்டேஷன் வந்தவுடனே, பொறுக்கமுடியாத ஒரு நாற்றம் ஸ்டேஷன் பக்கத்திலிருந்து வந்தது. (ஆடுதுறை ஸ்டேஷன் என்று ஞாபகம்.) 'கருவாட்டு நாற்றம்' என்று சொல்வார்கள் - அப்படியிருந்தது நாற்றம். என்னவென்று பார்க்க ஸ்டேஷன் பக்கம் திரும்பினேன். அப்போது கண்ட காட்சியைச் சொல்லவேண்டுமானால், யாருக்கும் அளவில்லாத துக்கமே உண்டாகும்.

ஸ்டேஷன் தாழ்வாரத்திலும், வெளியிலும், பிளாட்பாரத்திலும் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் வரிசை வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அப்போது சில தினங்களாகப் பெய்த பெருமழையில், எவ்விதப் பாதுகாப்பும் இன்றி, அந்நெல் மூட்டைகள் யாவும் நனைந்துபோயின; நனைந்து பல நாட்களுமாயின. மூட்டைகளைப் பெரும்பகுதி பிரிப்பதற்கோ, நெல்லை எடுத்து உலர்த்துவதற்கோ எவ்வித முயற்சியும் எவரும் செய்ததாகக் காணப்படவில்லை. மழையில் ஊறிய நெல்மணிகள் யாவும் முளைத்தன. முளைத்தவை காற்றோட்டமின்மையாலும், வளர இடமின்மையாலும், அப்படியே மூட்டைக்குள்ளே அவிந்தன. அவிந்து மட்கியதால் ஏற்பட்ட மடிசல் நாற்றமே, ரயிலில் போவோர் வருவோருக்குத் தாங்கவொண்ணாததா யிருந்தது.

ஓரத்திலிருந்த மூட்டைகளிலுள்ள நெல்லில் சிறிது காற்றோட்டமிருந்தபடியால், முளைத்து, நாற்று நன்றாய்ப் பச்சை பசேலென்று வளர்ந்திருந்தது. அடி மூட்டையில் வளர்ந்த நாற்றுக்கள் மேல் மூட்டையைத் தொளைத்துக்கொண்டு அதனுள் நுழைந்திருந்தன. அதில் முளைத்த நாற்றுக்கள் அதற்கு மேல் மூட்டையைத் துளைத்திருந்தன. இப்படியாகச் சுமார் எட்டு அல்லது பத்து மூட்டை-

உயரம் அடுக்கிவைத்திருந்தவை யாவும் ஒன்றுக்குள் ஒன்ருய்ச் செருகிக்கொண்டு, ஒரு பெரும் கட்டி அல்லது பாறைபோலாகி யிருந்தன. பெரிய சாலையிலிருந்து பிரிந்து ரயிலடிக்கு வரும் ரயில்வே கிளைச்சாலை நெடுகிலும், சாலையின் இருபுறமும் இப்படிப் பட்ட கட்டிகளைக் கொண்டுபோய்ப் போட்டு உடைத்துவிட் டிருந்தார்கள். நெல்லும் உமியும் நாற்றும் கோணிப்பையுமாக இருந்தது சாலையெங்கும். இவற்றிலிருந்து வீசிய துர்நாற்றம் பல மைல் தூரம் சகிக்கமுடியாமல் இருந்தது.

சிமிட்டி மூட்டைகளை நம்மில் பலர் பார்த்திருப்போம், சில சமயம் அவை ஈரம் பட்டு அப்படியே கட்டியாய்ப் போயிருக்கும். அது காரணமாய், சிமிட்டி பயன்படவும் படாது, கோணியைவிட்டு வெளியே வரவும் வாராது. ஆகவே, சிமிட்டியோடு கோணியும் வீணைதுதான். மேற்கூறிய நெல் மூட்டைகள் விஷயத்திலும் இப்படியே ஆயிற்று. மட்கிப்போன நெல், கோணியைக் கெட்டி யாய்ப் பிடித்துக்கொண்டது. ஆயிரக்கணக்கான மூட்டைகொண்ட நெல் நாசமானதுடன்கூட, காலத்தில் அருமையாயுள்ள கோணிப் பைகளும் ஆயிரக்கணக்கில் நாசமாயின.

ஆயிரக்கணக்கான மூட்டைகள் வீணுகி மடித்துப்போய் வீசிய நாற்றம், இரண்டு மூன்று நிமிஷ நேரமே நின்றிருக்கக்கூடிய ரெயி லில் போவோருக்கே பொறுக்கமுடியாமலிருந்த தென்ருல், அங்குச் சுற்றுப்புறத்தில் வாழ்ந்தோருக்கு எவ்வளவு கஷ்டத்தைத் தந் திருக்குமென்று யூகித்துக்கொள்ளலாம்.

இப்படி அளவற்ற நெல் - பொன்னுன உணவு - வீணுய்ப் போனது மேலே குறிப்பிட்ட ஒரு ஸ்டேஷனில் மட்டுமென்று எண்ணவேண்டாம். தஞ்சை ஜில்லாவில் பல ஸ்டேஷன்களில் இவ்விதம் நாசமாயிற்று. நாசம் செய்யவேண்டுமென்று மெய்யா கவே எண்ணி நாசம் செய்தாலும்கூடச் சில மூட்டைகள் தப்பி யிருக்கும்; ஆனுல் இந்த நாசத்தில் கொஞ்சமும் தப்பவில்லை. இத்தகைய பெருவாரியான நாசம் காவேரி தோன்றிய நாளாய் ஏற்பட்டதில்லை. எத்தனையோ தடவை காவேரியாறு, கரையை உடைத்துப் பெருக்கெடுத்துவந்து பயிர்களை அழித்துவந்திருக்கிறது. சமீபத்தில் 1924-ஆம் வருஷத்தில் இப்படிப்பட்ட பெருவெள்ளம் ஒன்று நிகழ்ந்து, பல கிராமங்களையே அழித்துவிட்டமை நமக்கு நினைவிருக்கிறது. ஆயினும், இப்படி ஏற்பட்ட நெல் மூட்டை நாசமானது, வெள்ளத்தால் வந்த நாசம் சிறிது என்னும்படி இருந் தது. வெள்ளத்தால் வந்த நாசம் மனிதன் செயலையும் கடந்தது. எனவே, அதைக் குறித்து நாம் அதிகம் கவலைப்பட்டுப் பயனில்லை.

ஆனால், இந்த நாசம், மனிதனால் உண்டானது. நெல் விளையாமலே போவது உலகத்தில் இயற்கை. ஆனால் விளைந்த நெல் வீண் போவது, இயற்கையன்று. ஆதலால்தான் இந்த நாசம் மிகவும் கொடுமையானது. எனவே, இது எவ்வாறு ஏற்பட்டதென்பது பற்றி இரண்டொரு வார்த்தைகள் இங்கே சொல்லலாம்.

முற்காலத்தில் இப்படிப்பட்ட கொடிய தானிய நாசம் ஏற்படாமலிருந்ததற்கு முக்கிய காரணம், தானிய விநியோக விஷயங்களில் அரசாங்கம் தலையிடாமலிருந்ததுதான். அக்காலத்தில் வியாபாரிகள் தனிப்பட்ட முறையில், தங்கள் சொந்த லாபத்தைக் கருதி, நெல் வியாபாரம் செய்துவந்தார்கள். தஞ்சையில் வாங்கின நெல்லை ரெயிலேற்றி இலங்கைக்கு அனுப்பினார்களென்று வைத்துக்கொள்வோம். இதனால் வந்த லாபமோ நஷ்டமோ எதுவானாலும், அவர்களுக்கே சொந்தம். உணவுக்கு உபயோகப்படக்கூடிய நல்ல நெல்லாக இலங்கைக்குப் போயிறங்கினால்தான் அங்குள்ள வியாபாரி பணம் கொடுப்பார். ஆகவே, நெல் போய்ச் சேரும்வரையில் சிறிதும் கெடாமல் காக்கவேண்டிய பொறுப்பு, தஞ்சை வியாபாரியைச் சேர்ந்தது. எனவே, இவ்வியாபாரி தஞ்சை ஸ்டேஷனில் என்றைக்கு ரெயில வாகன் கிடைக்கிறதென்று விசாரித்தறிந்து, வாகன் தமக்குக் கிடைக்கிற அதே தினத்தில், மிராசுதாருடைய நெற்களத்திலிருந்து வண்டி வண்டியாக நெல் மூட்டைகளைக் கொண்டுவந்து வாகனில் அடுக்க ஏற்பாடு செய்வார். மிராசுதாரிடம் நெல் விலைபேசி அச்சாரமோ முழுவிலையோ கொடுத்து விட்டாலுங்கூட, வியாபாரி கொண்டுபோகும்வரை, அதைக் காப்பாற்றி வைக்கும் பொறுப்பு மிராசுதாருக் குரியது. ஒரு வியாபாரி பதினாயிரம் மூட்டை நெல் அனுப்புகிறாரென்று வைத்துக்கொள்வோம். ஒரு மிராசுதாரிடம் நூறு மூட்டை வீதம் நூறு மிராசுதாரிடம் நெல் பேசிப் பணம் கொடுத்திருக்கலாம். இந்த நூறு பேரும், ஒரே கிராமத்தி லிருக்கமாட்டார்கள்; ஐந்தாறு கிராமத்திலிருப்பார்கள். ஒருநாள் வியாபாரிக்காக வாகன் தயாராய்விட்டதென்று தெரிந்தவுடனே, அவசர அவசரமாக வண்டியிலேற்றி இவ்வெவ்வேறு கிராமங்களிலிருந்தும் கொண்டுவரச் செய்வார். நூறு அல்லது இருநூறு வண்டிகளில், நாலைந்து நடையாக, இரண்டே நாளில் மூட்டைகளைக் கொண்டுவந்து இறக்கி, ஸ்டேஷன் மேடையில் அடுக்காமல், நேரே வாகனுக்குள் அடுக்கி விடுவார்கள். ஆகவே, மழையோ வெயிலோ காற்றோ ஒன்றாலும் ஒரு மூட்டைக்கும் சேதமேற்படாது. வாகன் புறப்படும் வரையில் வியாபாரி மூட்டைகள் இருக்குமிடத்தை விட்டு அகலமாட்டார்.

ஒரு மூட்டை நனைந்ததென்றால், ஆறு ரூபாய நஷ்டம்; நஷ்டம், அவருடைய சொந்த நஷ்டம். ஆகவே, மூட்டை விஷயத்தில் அவர் உயிராயிருப்பதில்—கண்ணுங் கருத்துமா யிருப்பதில்—ஆச்சரிய மில்லை. ரெயிலேற்ற ஒரு நாள் தாமதமானால், அந்த ஒருநாள் பொழுதும், அவர் தம மூட்டைகள்மீதே துணியை விரித்துப்போட்டு, தம் ஆடகளோடு படுத்திருப்பார். படுத்திருப்பது, காவலுக்காக மட்டுமன்று; ஒருவேளைத் திடீரென்று இரவு மழை பெய்ததென்று வைத்துக்கொள்வோம். உடனே எல்லோருமாகத் திரண்டு ஓடி, எங்கிருந்தாவது ஆயிரம் கீற்றும் கழியுங் கொண்டுவந்து, மூட்டைகளுக்கு மேலாக ஒரு கொட்டகை போட்டுவிடுவார்கள். கெஞ்சியோ கூத்தாடியோ, பக்கத்திலிலுள்ளவர் யாரிடமிருந்தாவது, ஒரு கொட்டகையையோ பந்தலையோ பிரித்துக் கொண்டுவந்து மூட்டைகளை மூடுவது ஒரு மணிநேர வேலை. ஒரு மின்னல் மின்னி அடுத்த தூற்றல் விடுவதற்குள் இவ்வளவு வேலையும் நடந்துவிடும்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், மிராசுதாருக்கும் ரெயில்வே அதிகாரிகளுக்கும் எவ்விதப் பொறுப்பும் இராது. பெரும்பாலும் எல்லாக் கவலையும் தனி வியாபாரிக்குரியது. அதிகாரிக்குப் பொறுப்பிருந்தால், காரியமொன்றும் நடவாது. தனி வியாபாரியின் பொறுப்பானபடியால, லாபத்தில் குறைந்தால் போகட்டும் என்று துணிநது உடனே எதனையும் நிறைவேற்றிவிடுவார். பதினாயிரம் மூட்டைக்கும் பதினாயிரம் ரூபாய் லாபம் வருகிற இடத்தில் கொட்டகை போடுவதன் மூலம் இரண்டாயிரம் ரூபாய் செலவு வந்துவிட்டதானால, கவலைப்படமாட்டார், தயங்கவுமாட்டார். வேறு யாருடைய உத்தரவையோ அனுமதியையோ எதிர்பார்க்கவேண்டியதில்லை யானபடியால், மின்னல் வேகத்திலும் விரைவாகக் காரியம் நிறைவேறிவிடும. பதினாயிரம மூட்டைகளும் பிழைக்கும். பதினாயிரக்கணக்கான மக்கள் இலங்கையிலாகட்டும், வேறு ஜில்லாக்களில்தானாகட்டும், உணவு இல்லாமல திண்டாடவும் நேராது, மடித்துப்போன அரிசியைத் தின்னவேண்டியும் நேராது.

ஆனால், இந்த யுத்தம் வந்த பிறகு, சென்ற சில வருஷங்களாக, உணவுப் பஞ்சம் என்ற பயங்கரமான கூக்குரலும், லட்சக்கணக்கான உயிர்ச்சேதம் ஒருபுறமும், மேலே ஆடுதுறையில் குறிப்பிட்டபடி நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகளின் நாசம் மறுபுறமும், நிகழ்ந்து வந்திருக்கின்றன. ஜில்லாத்தோறும், நெல் வாங்கி ஏற்றுமதி செய்வதற்காக, தானியக் கொள் முதல் அதிகாரியைச் சர்க்கார், நியமித்திருக்கிறார்கள். இவருடைய உத்தரவை எதிர்பார்த்து, நெல்லைக் கிராமந்தோறும் விலைக்குப்

பேசிக்கொண்டுவந்து ரெயில்வே அதிகாரிகளிடம் ஒப்படைப்ப தோடு, வியாரிகளின் பொறுப்பு அனேகமாய்த் தீர்ந்துபோகிறது. இன்ன ஸ்டேஷனிலிருந்து இன்ன ஜில்லாவுக்கு இத்தனை மூட்டை ஏற்றுமதி செய்யலாம் என்று கொள்முதல் அதிகாரி உத்தரவு கொடுத்துவிடுகிறார். வியாபாரி மூட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கியபின், ரெயில்வே அதிகாரி, வாகன் அனுப்பும்படி மேலதிகாரிக்கு எழுதுகிறார். எதிப்துக்கும் ஈராக்கும் இடையே அரபிக் கடலுக்கும் போனவை போக, மிச்சமுள்ள கொஞ்ச வண்டிகளை ஜில்லாவுக்கு இத்தனை என்று பங்கிடு செய்து, அவர் வண்டிகளை அனுப்புகிறார். குறிப்பிட்ட ஸ்டேஷன் அதிகாரி ஒருமாத காலம் வண்டி வராமல் மூட்டைகளை வைத்துக் காக்கவேண்டியும் நேரலாம். மூட்டைகளை மனிதர் திருடிக்கொண்டு போகாமல் அவர் பாதுகாப்பு ஏற்படுத்துவது நிச்சயம். ஆனால், எலி திருடாமலும் கறையான் அரிக்காமலும் காக்க அவரால் இயலாது. வெயில் மழையைப்பற்றி அவர் என்ன செய்யமுடியும்? ஸ்டேஷன் சரக்குக் கொட்டகையிலும் தாழ்வாரத்திலும் ஓராயிரம் மூட்டைகள் அடங்கும். மிச்சமுள்ளவை திறந்த மேடைமீது கிடைக்கவேண்டியவையே. சரி, மழை வந்துவிட்டதென்று வைத்துக்கொள்வோம். அவர் என்ன செய்யமுடியும்? ஸ்டேஷனை விட்டு எங்கும் அவர் போய்விட முடியாது. கொள்முதலதிகாரி, எங்கேனும் சுற்றுப் பிரயாணம் போயிருப்பார். அவருக்குச் செய்தி சொல்லியனுப்பி அவர் வந்து ஏற்பாடு செய்ய, இரண்டு மூன்று நாளாகும். வியாபாரியைப் பொறுத்தவரையில் மூட்டையை ஒப்புக்கொடுத்த பிறகு, அவருக்கும் மூட்டைக்கும் சம்பந்தமில்லை. இந்த நிலைமையில், மூட்டை நனைந்து மடித்துப் போயிற்றென்றால், யாருக்கு நஷ்டம்? முளைத்துப்போய்க் கெட்டதுபோக, மிச்சமுள்ளதை ரேஷன் அரிசியாக விநியோகம் செய்துவிடலாம் என்ற துணிவு எல்லோருக்கும் உண்டு.

இப்படியாக, இப்போது நடக்கிற சர்க்கார் கொள் முதல் விவகாரத்தில், பொறுப்பு யாருக்கு என்ற வரையறை இருப்பதாய்த் தெரியவில்லை. "இந்நாட்டு மக்கள் உணவின்றிக் கஷ்டப்படாது வாழவேண்டுமானால், நீ அகாலத்தில் வந்து நெல் மூட்டைகளை நனைத்துச் சேதப்படுத்திவிடாதே" என்று எல்லோரும கூடிப் பொறுப்பை மழையின்மீது ஏற்றிவிட்டார்களென்றே நாம் எண்ண வேண்டியிருக்கிறது. பின், மனிதர் யாருக்கேனும் பொறுப்பு இருந்திருக்குமானால், மனிதருணவு, பஞ்சகாலத்தில் இப்படிப் பாழ் போயிருக்குமா?

இப்படியாக, நெல் முதலான உணவுப்பொருள் நாசமானது, தஞ்சை ஜில்லாவிலுள்ள ஒன்றிரண்டு ஸ்டேஷன்களில் மட்டுமே என்று நினைக்கவேண்டாம். தேச முழுமையிலும் பல்லாயிரம் இடங்களில், கொஞ்சமும் அதிகமுமாக ஏராளமான அளவில் இப்படி விரயமாயிற்று. 1943—44-இல் ஏற்பட்ட 'கொடிய வங்காளப் பஞ்சத்தின் பிறகு இப்படிப்பட்ட நாசம் அளவில்லாமல் ஏற்பட்டது. பஞ்சம் எங்கே வந்துவிடப் போகிறதோ என்று பயந்து, ஆங்காங்குள்ள அதிகாரிகள் ஏராளமான உணவுப் பொருளை வரவழைத்துத் தேக்கினார்கள். ஏற்றுமதி செய்த இடங்களில் ஏற்பட்ட சேதத்தில் ஒருவகையை மேலே பார்த்தோம். பந்தோபஸ்தாகக் கொண்டுபோய்ச் சேர்த்துவைத்த இடங்களிலும் எவ்வளவோ சேதம். கெடாமல் சேர்த்துவைக்க இடமின்மையாலும், வழியறியாமையாலும், வசதிக் குறைவாலும் நாசமடைந்தது எவ்வளவோ. 1944—45 ஆம் வருஷப் பத்திரிகைகளைப் பார்த்தால் வங்காளம், அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் எத்தனை கோடி மணங்கு அல்லது டன் கணக்கில் உணவுப்பொருள் அழிந்தது என்பதை விவரமாய்க் காணலாம். உணவுப்பொருள் நாசச் செய்தி தினசரி வெளிவந்துகொண்டிருந்தது. உதாரணத்துக்காக ஒரு செய்தியை மட்டும் பார்க்கலாம். இது 13—8—45உ பத்திரிகைகளில் வெளியாயிற்று :—

"சுமார் 2 லட்சம் மணு ஆட்டாமாவு நாசம்
உரமாக உபயோகிக்கப்படுமாம் :

பர்த்வான், ஆக. 10.

1,80,000 (சுமார் இரண்டு லட்சம்) மணு ஆட்டாமாவு (ரொட்டி மாவு) பர்த்வானில் கெட்டுவிட்டது. 1943 முதல் இச்சரக்குகள் கட்டிடங்களில் தேங்கிக்கிடந்ததால், இவ்விதம் நேர்ந்திருக்கிறது. மனிதரின் உபயோகத்துக்கு இவை லாயக்கல்ல வாகையால், இதை உரமாக உபயோகித்துக்கொள்ள, பொது ஜனங்களிடையே விநியோகிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக, ஸிவில் சப்ளை கண்ட்ரோலர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது :—

1943—44-ல் ஜனங்களின் தேவையைக்காட்டிலும் சப்ளை மிதமிஞ்சி வந்து சேர்ந்துவிட்டதால், அந்தச் சரக்கைக் காலாகாலத்தில் விற்பனை செய்ய முடியவில்லை. ஆகவே கெட்டுப் போன இந்தச் சரக்கை அழிக்க உத்தேசித்திருந்தோம். ஆனால், அழிப்பதற்கு விறகு அதிகமாகச் செலவாகுமாகையால், இதை ஜனங்களுக்கு இலவசமாக உரத்துக்காக விநியோகித்து வருகிறோம்."

இரண்டு லட்சம் மணு ஆட்டமாவு என்பது கொஞ்சமல்ல. சுமார் மூன்றுகோடி மக்களுக்கு ஒரு வேளைக்குரிய உணவு என்பதை ஞாபகம் வைக்கவேண்டும். இப்படிப்பட்ட நாசம் அளவில்லாமல் ஏற்பட்டது. இதேபோல மடித்துப்போன கோதுமையை அஸ்ஸாமிலோ வங்காளத்திலோ (இடம் நினைவில்லை) ஆற்றில் கொண்டு போய்க் கொட்டினார்களாம். சோற்றுக்குக் கிடைக்காத ஏழை மக்கள், இதையேனும் பொறுக்கி உண்ணலாம் என்றெண்ணி இதை எடுக்க ஆற்றங்கரைக்கு ஓடினார்களாம். வயிற்றுக்கில்லாமல் பட்டினியால் அவர்கள் செத்தாலும் பாதகமில்லை, ஆனால் கெட்டு மடித்துப்போன இந்தக் கோதுமையைத் தின்றால் நோய் உண்டாகி விடும், நோய் உண்டாகி அவர்கள் இறப்பது விரும்பத்தக்கதல்ல என்று கருதிய கருணைமிக்க அதிகாரிகள், தடியடி பிரயோகம் செய்து, ஆற்றங்கரைக்கு ஓடின மக்களைக் கலைத்தார்களாம்.

இப்படி ஏற்பட்ட தானிய நாசத்துக்கு ஒரு காரணம், அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில் பொறுப்புணர்ச்சியின்மை என்று மேலே கூறினோம். மற்றொரு முக்கிய காரணம் இருக்கிறது. அதைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்வதும் அவசியம்.

போரில் ஈடுபட்ட படைவீரர்களுக்கு நல்ல உணவு வேண்டும்; அதுவும் தட்டாமலும் வேண்டும், இது நியாயமே யாகும். காலா காலத்தில் சாப்பாடில்லாவிட்டாலும், வயிறு நிறையும்படி சாப்பாடு இல்லாவிட்டாலும், சத்துள்ள உணவு இல்லாவிட்டாலும் போர்வீரன் போரிடுவதில் உற்சாகத்தோடிருக்கமுடியாது. எனவே, தேசமெங்கும் கிடைத்த அரிசி, கோதுமை, பருப்புவகைகள், உருளைக்கிழங்கு முதலியவற்றை ராணுவக் கண்டிராக்டர்கள் சேகரித்து ராணுவத்துக்குக் கொடுத்தார்கள். இவ்வளவையும் ராணுவத்தார் வாங்கிச் சேமித்தார்கள். சேமிக்க இடம்? சிறுபான்மை கட்டிடங்களிலும், கொட்டகைகளிலும் பெரும்பான்மை திறந்த வெளிகளிலும் சேமித்தார்கள். இதன் பயனாய் மக்களிடையே உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. தவிர, சர்வ வல்லமையும் சர்வ வியாபகமுமுள்ள இந்தியப் பாதுகாப்புச் சட்ட ஆதிக்கத்தின்கீழ், எல்லாவகை உணவில் மட்டுமன்றி, எல்லா வகையான போக்குவரத்திலும், ராணுவத்துக்கே முதன்மை கிடைத்தது; ராணுவ உணவுப்பொருளைக் கொண்டு போவதற்கே எல்லா ரெயில் வாகன்களும் போய்விட்டன. பொதுமக்களுக்குக் கிடைக்கவேயில்லை என்றும் சொல்வது மிகையல்ல இதன் பயனாயும், பஞ்சம்

வழங்கிய இடத்தில் உணவுப்பொருளைக் கொண்டுபோய்த் தர முடியவில்லை. அதனால் பஞ்சம் பெருகிற்று.

உணவுப்பொருளான அரிசி, பருப்பு முதலியன அடிக்கடி காற்றுட வேண்டும் இதற்காக, வீடுகளில் அடிக்கடி இவற்றை வெயிலிலேனும் நிழலிலேனும் எடுத்துக் கொட்டித் துழாவி விடுவதுண்டு. லட்சக்கணக்கில் ராணுவத்தார் வாங்கி அடுக்கியிருந்த மூட்டைகளுக்கு 'இவ்விதம் செய்வது சாத்தியமே இல்லை. கட்டிடங்களிலும், கொட்டகைகளிலும் அவர்கள் அடுக்கிவைத்த மூட்டைகளிலிருந்த அரிசி, பருப்பு முதலியன யாவும், உபயோகித்ததுபோக மிச்சம், புழுத்துப்போய் மடித்து ஒன்றுக்கும் பயனில்லாமலாகிவிட்டன. கட்டிடத்துக்குள்ளிருந்த தானிய தவசங்களே இப்படியாயின வென்றால், திறந்த வெயிலிலும் மழையிலும் காய்ந்தும் நனைந்தும், பனியிலும் காற்றிலும் அடிபட்டுக் கிடந்த மூட்டைகளைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். இவை கொஞ்சமும் உபயோகத்துக்குத் தகுதி அற்றனவாகிவிட்டன. இவற்றைத்தான் உரமாக உபயோகிக்கக் கொடுத்தார்கள், ஆற்றில் கொட்டினார்களென்று முன்னமே நாம் குறிப்பிட்டோம்.

ராணுவத்தார் மேற்கூறிய விதமாக, உணவுப்பொருள் சேகரித்து ஒரு வருஷம் ஆனபிறகு, நாட்டில் அடுத்த மகசூல் அறுவடையாயிற்று. மடித்துப்போன பழைய தானியங்களை எறிந்துவிட்டு, புதியவற்றைச் சேகரிக்க வேண்டுமென்று எண்ணுவது இயல்பேயாகும். படைவீரர்களுக்கு நல்ல உணவே எப்போதும் கிடைக்கவேண்டியது நியாயமே யல்லவா? எனவே, அவர்கள் தங்களிடமுள்ள பழைய சரக்குக்கள் அவ்வளவையும் அழித்துவிட்டுப் புதிய தானிய தவசங்களைச் சேமித்துவைக்க ஆரம்பித்தார்கள். அதிகம் கெட்டுப் போனவற்றை ஆற்றில் கொட்டிவிடுவது எளிது. லட்சக்கணக்கான டன் எடையுள்ள பொருள்களை இப்படி வங்க ஆறுகளில் கொட்டிக் கடல் வயிறு நிறைத்தார்கள்.

உணவுப்பொருள்களை ராணுவத்தார் எப்படிச் சேமித்து வைத்திருந்தார்கள், அவை எவ்வளவு மணத்தோடிருந்தன என்பதைச் சென்னைவாசிகள் நேரே பார்த்து அனுபவித்திருப்பார்கள். சென்னை, கோட்டை ரெயில்வே ஸ்டேஷனுக் கெதிரில் அதாவது தென்புறத்தில், கோட்டை மதிற்சுவருக்கு வடபுற மைதான முழுவதும், ராணுவத்துக்காக வேண்டி, பெரிய தானியக் கிடங்காக மாற்றியிருந்தார்கள். பதினாயிரக் கணக்கான நெல் மூட்டைகளும் கோதுமை மூட்டைகளும், பருப்பு மூட்டைகளும், உருளைக்கிழங்கு

மூட்டைகளும் அங்குத் தரையில் அடுக்கப்பட்டு மலை மலையாய்க் காட்சியளித்தன. அழுகிப்போன உருளைக்கிழங்கின் நாற்றத்தைக் கோட்டைக்குள் செக்ரேடேரியட் காரியாலத்தில் வேலை பார்க்கப் போனவர்கள் யாவரும் போனபோதும் திரும்பிவந்தபோதும் சுகமாக நுகர்ந்திருப்பார்கள். அழுகிப்போன கிழங்குகளைச் சில கூலியாட்கள் தனியே பிரித்தெடுத்துக் கொத்தவால்சாவடி காய்கறிக்கடைகளுக்கு மூட்டை மூட்டையாய்க் கட்டியனுப்பிய காட்சியையும் அங்கு ஒருபுறம் எந்நேரமும் காணலாம்.

அடியோடு மடித்துப் போனவற்றைத்தான் மேலே கூறியபடி எறிந்துவிட்டார்கள். முழுமையும் கெடாமல், ஒரு பாதி மடித்து நாற்றமடித்தும், ஒரு பாதி கெடாமல் சுமாரான நிலைமையிலும் இருந்த தானிய மூட்டைகளும் இத்தகைய ராணுவ உணவுக் கிடங்குகளில் ஏராளமாய் இருந்தன. புதிய மாகூலை இந்தியப் பாதுகாப்புச் சட்டமானது திரட்டி ராணுவத்தார் வசம் ஒப்புவித்த பின்னர், சுமாராய்க் கெட்டுப்போனவற்றைக் கழிக்கவேண்டிய நிலைமை வந்தது. இந்த நிலைமைக்கு, தேசமெங்கும், முக்கியமான பட்டணங்கள்தோறும் அமுலுக்கு வந்த அரிசிப் பங்கீட்டு முறையும் மிக்க அனுகூலமாய் அமைந்தது. நெல் விளைந்த இடத்திலிருந்தெல்லாம், சர்க்கார் கொள்முதல் அதிகாரி, நெல்லையும் பிறவற்றையும் சேர்த்து வாங்கி ராணுவத்தாருக்கு அனுப்பிவிடுவார். ராணுவத்தார் உண்பதற்கு 'லாயக்கு' அற்றவை என்று முடிவு செய்யப்பட்ட அரிசியும், வண்டு துளைத்த கோதுமையும், அழுகல் கண்ட உருளைக்கிழங்கு முதலியனவும், அரிசிப் பங்கீட்டு முறை அமுலுக்கு வந்துள்ள நகரப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பெறும்; ரெயில் வாகன்கள் ஒழிந்தபோது, இவை மிக்க சாவகாசமாக வந்து சேரும்.

மாயவரம் என்பது காவேரிக் கரையிலுள்ள ஒரு சிறிய பட்டணம்; இங்கு முனிசிபல் சபை யொன்று உண்டு. தஞ்சை ஜில்லாவின் முக்கியமான தாலூக்காக்களி லொன்றாகிய மாயவரம் தாலுக்காவின் தலைநகரம். இந்த ஜில்லாவில் நெல் ஏற்றுமதி செய்யும் முக்கியமான தாலுக்காக்களான சீர்காழி, மாயவரம், கும்பகோணம் என்ற மூன்றில் இது நடுநாயகமா யமைந்திருக்கிறது. இங்கு, காவேரி தோன்றிய நாளாக, நல்ல அரிசிக்குப் பஞ்சமாக இருந்த தில்லை. இவ்வூரில், ஜட்கா வண்டி ஓட்டுபவர்கள் முதல், பக்கத்துக் கிராமங்களில் நிலம் வைத்துக்கொண்டு, இங்கேயே வாழ்ந்துவந்த மிராசுதார்கள் வரையில் எல்லோருக்கும் சாப்பாட்டுக்கு நல்ல அரிசியே கிடைத்துவந்தது. அரிசியில் கெடுதலான அரிசி இருக்கமுடியும், அல்லது மட்கிப்போன அரிசி என்பது ஒன்று

உண்டு, அதையும் சாப்பிடலாம் என்பது, பாவம், இவர்கள் யாருக்கும் தெரியாது.

ஒரு பெரிய நகரத்திலுள்ள மக்கள் இப்படித் தெரியாதவர்களாகவே இருப்பது நல்லதாகுமா? ஆகாது. எனவே, இவர்களுக்கு மட்கல் அரிசிபற்றிய அறிவு புகட்டவேண்டுமென்று அதிகாரிகள் பெருங்கருணை கொண்டார்கள். இருந்தாற்போலிருந்து ஒருநாள், இவ்வூருக்கும் பங்கீட்டு முறை அமுலுக்கு வரும், அவரவர் தம் இருப்பிலுள்ள அரிசி எவ்வளவென்பதைத் தெரிவித்துவிடவேண்டுமென்று அறிவித்தார்கள். சில நாட்களும் சென்றன. இரண்டு வருஷங்களுக்கு முந்தி, ஒருநாள், (ஜூன் அல்லது ஜூலை மாதம் முதல் தேதி) பங்கீட்டு முறை அமுலுக்கு வந்தது. எல்லோரும் சிறியோர் பெரியோர் என்ற பேதமில்லாமல் தம் பங்கீட்டுச் சீட்டைக் கையிலேந்தி, ரேஷன் கடையில் போய் இடித்துப் புடைத்துக் கொண்டு நின்றார்கள். காலையில் போய், சாயங்காலம் வரையில் நின்றுவிட்டு, கிடைத்த அரிசியை வாங்கிக்கொண்டு, சிரமந்தீரச் சமைத்து உண்ணலாம் என்று சமைத்தார்கள். உலையில் அரிசி கொதித்தபோதே என்னவோபோல் ஒரு நாற்றம் வீசிற்று. இறக்கிய பின், எடுத்து வாயில் வைத்தால், ஒரே குமட்டல், அந்தச் சோற்றுக்கு இருந்த மணமும் சுவையும், அரிசிக்கு இருக்கமுடியும் என்று அதற்குமுன் சொல்லியிருந்தால், மாயவரம் வாசிகள் நம்பியிருக்கமாட்டார்கள். ஆனால், இப்போது அதிகாரிகளின் காருண்யத்தால், அரிசிக்கும் இவ்வளவு நாற்றமும் மட்கல் சுவையும் இருக்கமுடியுமென்று அந்த மக்கள் உணர்ந்தார்கள்.

உணர்ந்து என்ன செய்யமுடியும்? வண்டிக்காரனுக்கும் அவ்வரிசி பிடிக்கவில்லை, வக்கீலுக்கும் பிடிக்கவில்லை. ஆயினும் வேறு வழியில்லாமல் இதையே உண்ணலானார்கள். அவ்வூர் ரேஷன் அதிகாரிகள் கூட, சிலநாள் இதை மாதிரிக்கேனும் சாப்பிட்டுப் பார்த்திருப்பார்கள். இப்படிப்பட்ட அனுபவம், தஞ்சாவூர் ஜில்லா அல்லது காவேரிக்கரை அல்லது மாயவரம் ஒன்றுக்குத்தான் ஏற்பட்டதென்பதில்லை. காசிமுதல் கன்னியாகுமரி வரையில் எங்குமே இதே அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சாவூரும் காவேரியும் மாயவரமும் உதாரணத்துக்குச் சொன்னவைகளேயன்றி வேறில்லை.

ராணுவத்தார் உபயோகத்துக் கென்று போய், அங்கே 'தேங்கிக் கிடந்த', இனி உபயோகப்படாதென்று தீர்மானிக்கப்பட்ட உணவுப்பொருள்கள், ராணுவத்தினரல்லாத சாமானிய மக்களைத் தேடிக்கொண்டு இவ்விதம் வந்துசேர்ந்தன. பழைய இந்து தேச சரித்திரப் புத்தகங்களிலே கிளைவ் 'பிரபு'வைப் பற்றிய கதை

படித்திருப்போம், ஒரு சமயம் கிளைவ் ஆர்க்காட்டுக் கோட்டையை முற்றுகையிட்டபோது, சோற்றுப் பஞ்சம் வந்துவிட்டதாம். அப்போது அவனிடமிருந்த இந்தியப் படையினர், அதாவது தமிழ்ப் படையினர், மிக்க விசுவாசத்தோடு, வெள்ளைத்தோல் படைத்த பிரிட்டிஷ் பண்டைகள் உணவின்றி வாடக்கூடாதென்று கருதி, சோற்றையும், காய்கறி இறைச்சி முதலியவற்றையும், அப்படைகளுக்கே கொடுத்துவிட்டு, தாங்கள் வெறும் கஞ்சியை மட்டும் உண்டு உயிர் தாங்கினார்களாம்.

அத்தகைய வீரத் தமிழர் மரபில் வந்த நாம்மட்டும் வீரம் குன்றியவர்களா என்ன? நம்முடைய ராணுவத்தார் நல்ல உணவு கொள்ளவேண்டு மென்ற உயர்ந்த நோக்கத்தோடு, மட்கிப்போய் நாற்றமடித்த அரசியையும் அழுகிப்போன உருளைக்கிழங்கையும் நாம் உண்டு, நல்ல அரிசியும் நல்ல காய்கறிகளும் ராணுவத்தாருக்குக் கிடைக்கும்படி செய்தோம். இந்த நமது யுத்த முயற்சி, இந்த யுத்த சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்க தென்பதில் அணுவளவும் சந்தேகமேயில்லை.

* * *

சோளமாவு நாசம் என்று மேலே குறிப்பிட்ட செய்தி பழைய செய்தி (ஆகஸ்டு 1945); இப்போதெல்லாம் அப்படி நடப்பதில்லை என்று நாம் எண்ணக்கூடும். பஞ்சம் வரப்போகிறது என்ற கூக்குரல் சர்க்காரே மிகுதியாகச் செய்கிறார்கள். ஆதலால், அவர்கள் இப்படி மேலும் வீணாகாமல் பாதுகாப்பதில் தங்கள் பொறுப்பை யுணர்ந்திருப்பார்கள் என்று எல்லோரும் எதிர்பார்ப்பது இயல்பு. 1946 மார்ச்சுமீ 7உ பத்திரிகைகளில் வெளிவந்த பின்வரும் செய்தியை அனைவரும் கவனிக்கவேண்டும்.

"ஏராளமான ஆட்டாமாவு"

டாக்கா, மார்ச் 8—

"நாசமடைந்த ஏராளமான ஆட்டாமாவு (கோதுமை சோளம் முதலியவற்றின் மாவு) சென்ற தினங்களில் ஷிதாலக்ஷா நதியில் தூக்கி எறியப்பட்டதாகத் தெரிகிறது."

பட்டினியால் 35 லட்சம் ஜனங்கள் மடிந்த வங்காளத்தில் இன்று 1946-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் மழையில்லை, நெல்விளைவில்லை, ரேஷனை எங்கும் ஒன்றுக்கு முக்காலாய்க் குறைக்கவேண்டும் என்று பல பேர் கூறுகிற இந்தக் காலத்தில், நாட்டின் ஒரு பகுதியில் இப்படி நடக்கிறது. இது வங்க சர்க்காரைப் பொறுத்த விஷயம் என்று மற்ற சர்க்காரும் மத்திய சர்க்காரும் கைவிரிக்கலாம். ஆனால், பஞ்சமென்றால் எல்லோரிடமுந்தான் உதவி கோரு

கிறார்கள். உணவுப் பஞ்சம் என்றால், அதில் இந்திய நாடு ஒன்று தானே யொழிய, இந்த சர்க்கார், அந்த மாகாணம் என்று வேறு பிரித்துத் தள்ள இடமில்லை. இந்தியத் தலைவர்கள் எல்லோரும், "பிரிட்டிஷார் இந்தியாவைஆளத் தகுதியோ திறமையோ இல்லாதவர் களாகிவிட்டார்கள், கௌரவமாக அவர்கள் வெளியேறுவதுதான் முறை' என்று சொல்லிவருகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் ஒருபுறம் இன்றுவரை உணவுப் பொருள் நாசமாகிவருவதையும், ஒருபுறம் பஞ்சம் பற்றிய அச்சம் பெருகுவதையும் சீர்தூக்கிப் பார்த்து, பிரிட்டிஷாருக்கு ஆளும் தகுதி அல்லது திறமை இருக்கிறதா இல்லையா என்பதை நாமே முடிவு செய்து கொள்ளலாம்.

6

அன்னியருக்குச் சோறு

யுத்தம் தொடங்கிய காலமாக, அதுவும் ஜப்பான் யுத்தத்தி லிறங்கியதன் பிறகு, இந்திய மண்ணில் வந்து உட்கார்ந்துகொண்டு, இந்தியர் உணவை அபகரித்து உண்ட அன்னியத் துருப்புக்கள் முதலியவற்றுக்கு எண்ணிக்கையே இல்லை. பிரிட்டிஷ் துருப்புக்கள், அமெரிக்கர், ஆஸ்திரேலியர், கனேடியர், நியூஸிலாந்தர், ஆப்பிரிக்கர் முதலிய வெள்ளையரும் கறுப்பரும் 1941 ஆம் ஆண்டு முதல் இந் நாட்டு உணவைத் தின்று தீர்த்தார்கள். இந்தியப் பாதுகாப்புச் சட்டமானது, இந்திய மக்கள் உண்ணவிருந்த சோற்றைப் பிடுங்கி இவ்வீரர்களுக்குக் கொடுத்தது. வங்காளத்தில் முப்பத்தைந்து லட் சம் மக்கள் மாண்டார்கள் என்றால், அதற்குரிய பல காரணங்களில் அவர்கள் உணவை இவர்கள் பிடுங்கிக்கொண்டது அல்லது உண்டு விட்டதும் ஒன்றாகும்.

இப்படி இந்தியாவைப் பாதுகாக்க வந்துள்ள 'வீரர்கள்' மட்டும் நம் சோற்றைத் தின்று தீர்க்கிறார்கள் என்பதில்லை. பிரிட்டிஷாரின் பகைவர்களுக்கும் இந்தியர் கணக்கில்லாமல் சோறு போட்டிருக் கிறது. பிரிட்டிஷார் இத்தாலியரைச் சிறைபிடிக்கப் பிடிக்க, அவர்களை இந்தியாவில் கொண்டு வந்து தள்ளினார்கள். இந்தியா ஒரு பெரிய சிறைமுக மாயிற்று. மற்ற இடங்களில் இவர்களைக் கொண்டு தள்ளாமல், இந்தியாவில் கொண்டு தள்ளியதற்குக் கார ணம், இங்கு நிர்ப்பயமாய் இவர்களுக்குச் சோறு போட்டுக் கொழுக்கவைக்க முடியும் என்பதுதான்; வேறு எந்த நாடாயிருந் தாலும், அங்கே சோறு இவ்வளவு தாராளமாய்க் கிடைக்காது; அங்குள்ள அரசாங்கம் இப்படித் தண்டத் தீனி போட மறுக்கும்.

இந்தியாவிலானால், கேள்வி முறையில்லாமல் கொள்ளைத் தீனி கிடைக்குமல்லவா? இதுபற்றிய புள்ளி விவரங்களையும் சற்றே கவனிக்கலாம். (அமிருதபஜார் பத்திரிகை, 15-3-46.)

1944-45 ஆண்டு முடிய, இந்த இத்தாலியக் கைதிகளுக்குச் சோறு போட்டுக் காப்பாற்ற இந்தியாவில் செலவானது 28 கோடி ரூபாய். இன்னும் இங்கு 26 ஆயிரம் கைதிகள் இருக்கிறார்களாம். 1945-46 ஆகிய நடைமுதல் வருஷத்தில் இவர்களுக்குத் தீனிபோடுவதற்காகப் பிடிக்கக்கூடிய செலவு மூன்றரைக் கோடி ரூபாய். இந்தப் புள்ளி விவரங்கள் மத்திய சட்டசபையில் வெளியிடப்பட்டன. இவற்றைக் கூறிய சர்க்கார் யுத்த இலாக்காக் காரியதரிசி, இச்செலவுக்கு இந்தியா பொறுப்பேற்காது என்றும், பிரிட்டிஷ் அரசாங்கம் பொறுப்பேற்றுப் பணம் கொடுத்துவிடுமென்றும் கூறினார். இருக்கலாம். பின்னால் ஒரு காலத்தில் இந்தியாவுக்குரிய ஸ்டெர்லிங் நிதியில்கூடச் சில ரூபாயைப் பிரிட்டன் வரவு வைக்கக் கூடும், ஆனால் இன்றைய நிலைமையில் இந்தக் கைதிகளுக்குச் சோறு ஏது? இத்தாலியிலிருந்து அல்லது பிரிட்டனிலிருந்து கப்பலேறி வந்ததா? இல்லவே இல்லை இந்திய மக்கள் உண்ணும் உணவைப் பிடுங்கித்தான் சர்க்கார் இக்கைதிகள் வயிற்றை நிரப்புகிறார்கள். இக்கைதிகள் உண்டு கொழுத்தது, வங்கப் பஞ்சத்தில் மக்கள் மடிந்ததற்கு ஒரு காரணம், இவர்கள் வயிறு நிறைவதற்காக, இந்தியாவில் பலியான ஆடுமாடுகள் பன்றிகளின் தொகைக்குக் கணக்குச் சொல்லவே இயலாது. இந்தியாவில் கால்நடைகள் அதிகம்; 22 கோடிக்கும் அதிகம். இதனால்தான் இக்கைதிகளை இங்குக் கொண்டு வந்து தள்ளினால், வஞ்சனையின்றி இவர்கள் வயிறு நிறையும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்தது. இந்திய நாட்டில் நீதி, தர்மம், கேள்விமுறை ஏதேனும் இருந்தால் இந்த அக்கிரமம் நடந்திராது. இந்திய மக்கள் செத்தால் சாகட்டும் என்று தீர்மானித்து, அன்னியரை, அதுவும் பகைவரை, நல்ல தீனி போட்டுக் கொழுக்கவைத்த அரசாங்கத்தின் கொடிய செயலை ஒருநாளும் இந்தியர் மறக்கமுடியாது.

இப்படி இத்தாலியரைப் பிரிட்டிஷார் காப்பாற்றிவருவதற்குக் காரணம், வெள்ளையினத்தின்மேலுள்ள பற்றுதலே யாகும். இத்தாலியர்மீது தனியான அன்பு அவர்களுக்குப் பிறந்து விடவில்லை; பொதுவாக வெள்ளையினத்தாரின் தொகை உலகில் குறைந்துவிடலாகாது என்ற ஒரே நோக்கந்தான்; மற்றப்படி, பகைவரையும் காப்பாற்ற வேண்டும் என்ற போர்த் தருமத்தால் பிரிட்டிஷார் இப்படிச் செய்தார்கள் என்று கூறுவதற்கில்லை.

எனவே, இந்தியாவில் உணவுப் பஞ்சம் வந்ததற்குரிய நேர்முகமான காரணங்களில், இப்படி அன்னியத் துருப்புக்களுக்கும் அன்னியக் நைதிகளுக்கும் இந்திய மக்களின் உணவைப் பிடுங்கிக் கொடுத்தது மிக முக்கியமான தாகும்.

7

பாசன நீர் வசதி

உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு தாங்கள் செய்த நல்ல காரியங்க ளென்று சர்க்கார் சொல்பவற்றில் 'முக்கிய மான' ஒரு செயலை இங்குச் சுருக்கமாய்க் கவனிக்கலாம். "முன்னெல்லாம் காவேரி டெல்டாவுக்குச் சுமார் ஜூலை மாதம் 15 தேதியிலிருந்து ஒவ்வொரு வருஷமும் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் நீர் விடுவோம். சென்ற சில வருஷங்களில், ஜூலை முதல்தேதி முதலே நீர் விட்டுவந்தோம். இப்போது ஜூன் 15 முதல் நீர்விடுகிறோம். இது விவசாயிகளுக்கு மிக்க நன்மை தரும்" என்று சர்க்கார் பிரசாரம் செய்துவருகிறார்கள். இப்பிரசாரத்தை அவர்களுடைய வருஷாந்திர மாகாண நிர்வாக அறிக்கையிலும் துண்டுப் பிரசுரங்களிலும் காணலாம். இவ்விதமாக அவர்கள் காவேரியிலும் அதன் கிளை நதிகளிலும் நீரைத் திறந்துவிட்டது உண்மை. இதனால் ஏதேனும் பலன் ஏற்பட்டதா என்பதும், தங்கள் செயலால் விவசாயிகள் உண்மையாகவே பலனடைந்தார்களா வென்று அவர்கள் கவனித்தார்களா என்பதும், வேறு விஷயம்.

முன்னெல்லாம், சுமார் ஆடி மாதம் முதல்தேதி காவேரியின் நீரைக் கண்டவுடன், விவசாயிகள் வயலுக்குச் சேடை பாய்ச்சுவார்கள். பிறகு உழுது பரம்படித்து விதை தெளித்து நாற்று நடவு ஆரம்பிக்க ஏறக்குறைய ஒருமாதம் ஆகிவிடும். பின்னும் இரண்டு மாதங்கள் ஆனபின், சுமார் ஐப்பசி மாதத் தொடக்கத்தில் பயிர்கள் தளதளவென்று செழுமையாய் வளர்ந்து, பூக்க ஆரம்பிக்கும். அந்தச் சமயம், வடகிழக்குப் பருவமழை பெய்யும் காலம். காவேரி நீர்வளத்தால் செழித்து வளர்ந்த பயிர்கள், விண்ணின்று பெய்யும் அமிழ்தத்தைக் கண்டவுடனே, நன்றாய்ப் பூத்துக் கதிர்பிடித்து, நல்ல விளைவைத் தரும். இவ்விதமாக, ஆடி முதலில் தொடங்குகிற சாகுபடிக்கு, ஐப்பசி முதலில் இயற்கையாகப் பெய்கிற மழையானது, மிக்க பயன் தருவதா யிருந்துவந் திருக்கிறது.

கொஞ்சகாலமாக, மேற்கூறியபடி சர்க்கார் பாசன இலாக்காதார், ஒருமாதம் முன்னதாக ஆறுகளில் தண்ணீர்விட்டு வருகிறார்

கள். மேட்டூர் அணைகட்டிய பிறகு, ஏராளமான தண்ணீரைத் தேக்கிவைப்பது சாத்தியமா யிருக்கிறபடியால், முந்தியோ பிந்தியோ, வேண்டியபோது தண்ணீரை விடுவதும் வேண்டாதபோது, அணையை அடைத்துத் தண்ணீரை நிறுத்திவிடுவதும் முடிகிற காரிய மாயிருக்கிறது. அணை ஏற்படுவதற்கு முந்திய காலத்தில், இது சாத்தியமில்லை. குடகில் மழை பெய்ததானால், நீர் முழுவதும் ஆற்றிலும் கால்களிலும் உருண்டோடிவரும். நீரைக் கண்டவுடன், தஞ்சை ஜில்லா வாசிகள், நீரை வயலில் திருப்பிவிட்டுச் சாகுபடி வேலை ஆரம்பிப்பார்கள். மழை பெய்வது ஓரளவு கிரமமாக இருந்தபடியால், சாகுபடி வேலையும் பெரும்பான்மை இடையூறு இல்லாதபடி கிரமமாகவே நடைபெற்றது. அணை ஏற்பட்டது பெரிய அனுகூல மாயிருந்தது. அதிகப்படியாய்க் கடலை நோக்கி ஓடிய நீரைத் தேக்கி, பயிருக்கு வேண்டியிருக்கும்போதும் வேண்டிய அளவும் ஆறுகளிலும் கால்களிலும் விட்டுப் பாய்ச்சிக் கொள்வது, இதனால் சாத்திய மாயிருந்தது. முன்னெல்லாம், ஆற்றில் நீர் வராமையால் சில சமயம் பயிரிட்ட வயல்கள் காய்ந்து போனதுபோல, இப்போது காயவேண்டியதில்லை. தேக்கிவைத்த தண்ணீரை உபயோகித்துக் கொள்ள முடிகிறது.

இந்த நிலையில்தான், சமீப காலத்து யுத்தமும் அதன் விளைவான உணவுப் பஞ்சமும் வந்தன. உணவைப் பெருக்கவேண்டும் என்ற பிரசாரம் எங்கும் ஏற்பட்டது. ஒவ்வோர் இலாக்காதாரும் இதற்கான வேலையில் ஈடுபட்டார்கள், பாசன இலாக்காதார், "நாம் ஒருமாதம் முன்னதாகவே நீரைத்தருவோம், இதன்மூலம் சாகுபடி அதிகமாகும்" என்று தீர்மானித்து அதன்படி வேலை செய்தார்கள். எங்கும் தண்டோரா மூலமாகவும், கிராம மணியக்காரருக்கு அனுப்பிய தாக்கீதுகள் மூலமாகவும், தண்ணீர் அதிக நாள் முன்னதாகக் கிடைக்குமென்று தெரியப்படுத்தி, சாகுபடியைத் 'துரிதப்படுத்த'ச் சொன்னார்கள். சாகுபடியிலேயே கண்ணுயிருந்த விவசாயிகளும், அதன்படியே, தண்ணீரைக் கண்ட மாத்திரத்திலேயே அதற்கானவை செய்ய ஆரம்பித்தார்கள். ஆடிமாதம் முதலில் தொடங்குகிற சாகுபடி வேலைகள் ஆனி மாதம் முதலில் தொடங்கலாயின. அவசரம் அவசரமாக ஏருவிட்டு நீர்பாய்ச்சி உழுது, விதையெல்லாம் தெளித்து, நடவு நட்டார்கள். ஆற்று நீரைக்கொண்டு பயிர்களெல்லாம் பசேலென்று அழகாகத் தழைத்து வளர்ந்தன. வழக்கம்போல், கிளைத்து வளர்ந்த நாற்றுக்கள் பூக்கிற பருவம் வந்தது. இந்தப் பருவத்தில் 'விசும்பிற்றுளி'யாகிய மழை பெய்வது அவசியமென்று முன்னமே குறிப்பிட்டோம். ஐப்பசி முதலில்தான் நம் நாட்டில் மழை

பெய்யுமே ஒழிய, சாகுபடி வேலை ஒரு மாதம் முன்னதாக ஆரம்பித்த காரணத்தால், மழையும் ஒரு மாதம் முன்னதாக வந்துவிடுவதில்லை. அமெரிக்காவில் வேண்டுமானால், குழாய்களை வைத்துப் பயிர்களின்மீது மழைபோல் நீர் தெளிக்கச் செய்வார்கள். ஆனால், நம் நாட்டில் இது நடக்கக்கூடிய தன்று. வளர்ந்த பயிர்களுக்கு வேர் குளிர நீர் கிடைத்த தென்னவோ, உண்மைதான். ஆனால், பயிர்களின் மெய்குளிர வானம் மழை பெய்யவில்லை

பயிர் பூத்த காலம் புரட்டாசித் தொடக்கம். 'புரட்டாசிக் காய்ச்சல்' என்பது பழமொழி. பயிர்கள் வானத்திலிருந்து வரும் அமிழ்தத்தைக் காணாது பெரிதும் வாடின என்பது சொல்லவேண்டியதில்லை. பயிர் வளர்ச்சிக்கு இம்மழை முழுக்கு மிக்க அவசியமானது என்பது ஒருபுற மிருக்க, நெல்மணி பிடிப்பதற்கும் இது அவசியமானது என்பது இங்கு ஞாபகம் வைக்கத் தகுந்தது.

ஆண்பெண் சேர்க்கையினால் குழந்தை பிறக்கிறது. தாவர வுலகிலும் இவ்வுண்மை பொருந்தும். ஆண்பெண் சேர்க்கையினால், விதையாகிற குழந்தை பிறக்கிறது. இச்சேர்க்கை பூவினிடத்திலேயே நிகழ்கிறது. பூவில் உண்டாகியிருக்கிற மகரந்தத் தூள் என்ற ஆண் சத்தானது, பூவின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள கருப்பையில் போய்ச் சேர்ந்தால், அங்கே கரு ஏற்படுகிறது. மகரந்தத் தூள் கருப்பையில் போய்ச் சேர்வதற்குத் துணைகள் பலவுள்ளன. பூச்சி, தேனீ, வண்டு, தட்டாரப் பூச்சி என்பன பறந்து, பூப்பூவாகச் செல்லும்போது இவை உட்காருவதால் தூள் உதிர்ந்து கருப்பையை அடைகிறது. காற்றடிப்பதனாலும் தூள் உதிர்ந்து கருப்பையை யடையும். மழை பெய்வதனாலும் தூள் உதிர்ந்து நேரே கருப்பையினுட் செல்லும். இம்மூன்று வகைத் துணைகளில் மழையே முக்கியமான தென்பது தெளிவு. மழைத்துளி மேலிருந்து கீழ் நோக்கி மிக்க வேகமாக வீழ்வதால் மகரந்தத்தூளை அது நேரே கொண்டு போய்க் கருப்பையினுட் சேர்க்கிறது,

ஆகவே, பூக்கும் பருவத்தி லுள்ள நெற்பயிரை மழை பெய்து குளிரச் செய்வதோடுகூட, அதில் பூத்த பூக்கள் யாவும் கருவாகி, நெல் மணி அதிகமாய்ப் பிடிக்க மழையே முக்கியக் கருவியாயும் இருக்கிறது. ஐப்பசி மாதத்தில் பெய்கிற மழை, பொதுவாய் அப்போது பூக்கும் நெற்பயிருக்கு இவ்விருவிதத்திலும் உதவுகிறது. ஆனால், மேற்கூறியபடி முன்னதாகவே தொடங்கிய சாகுபடியால், புரட்டாசி முதலில் பூத்துவிட்ட பயிருக்கு, இம்மழை கிட்டவில்லை. மழையால் நனைந்து பயிர் மெய்குளிர வில்லை ; கருவுண்டாகி நெல் பிடிக்க உதவியு மில்லை. தவிர, 'புரட்டாசிக் காய்ச்சல்' என்ற

கடும் வெய்யில் ஒருபுறம். இவ்விதம் பலவகையாலும், முந்திய சாகுபடிப் பயிர் துன்புற்றது. இதன் பயனாய், அவ்வருஷம் விளைவு குறைந்து போனதை விவசாயிகள் கண்டார்கள்.

விளைவு குறைந்து போனதன் காரணம் பலருக்கு விளங்கியதில்லை. ஒருபுறம், உணவைப் பெருக்கும்படி பிரசாரம், தண்ணீர் வசதி முதலியன. மறுபுறம் இப்படிப்பட்ட பலன். இப்படியிருக்க, மறு வருஷமும் இதே மாதிரி முன்னதாகவே தண்ணீர் கிடைக்கும் என்ற செய்தி வந்தது. உற்சாகம் மிகுந்த விவசாயிகள் சிலர், ஆனி முதலில் நீர் வருமென்றால், அதற்கு ஒரு மாதம் முன்னதாகவே நாற்றங்கால் தயார் செய்து குளத்தி லிருந்தும் கிணற்றி லிருந்தும் நீரிறைத்து விதை தெளித்து வைத்திருந்தார்கள்; நாற்று நன்றாய் முளைத்து வளர்ந்திருந்தது. ஆனியில் ஆற்று வெள்ளம் வந்தவுடனே நிலத்தை உழுது பக்குவப்படுத்தி நடவுநட்டு விட்டார்கள். உரிய காலத்தைவிட இவர்கள் சாகுபடி இரண்டு மாதம் முன்னதாகவே நடந்தேறிவிட்டது. ஆனால் பலன் ஒன்றுதான். எல்லோருக்கும் குறைந்த விளைவுதான். சர்க்காரோ, "நாங்கள் முந்தி நீர்விடுகிறோம்; சாகுபடியையும் முந்திச் செய்யுங்கள்" என்கிறார்கள். செய்தோர் அடைந்த பலன் நஷ்டந்தான்.

இப்படி வந்த நஷ்டத்தோடு, மற்றொரு வகைக் கஷ்டமும் சேர்ந்தது. ஒருமாதம் சாகுபடியானவுடனே, குடகுமலையில் பெய்ய வேண்டிய மழை ஒரு சமயம் பெய்திராது; ஆற்றில் புது வெள்ளம் வராது. மேட்டூர்த் தேக்கத்தில் தண்ணீர் குறைந்துவரும். உடனே அறிக்கைகளும் தண்டோராவும் பிறக்கும். "தண்ணீரில்லை. புன்செய்க்கு இனி ஆற்று நீர் பாய்ச்சக்கூடாது. நன்செயில் சாகுபடி செய்பவர்களுக்கும் தண்ணீர் தாராளமாய்க் கிடைக்காது என்பதை ஞாபகம் வைக்கவேண்டும்." முன்னதாகத் தண்ணீர் விட்டுவிட்டுப் பின் இப்படிக் கட்டுப்பாடு செய்வதும் வழக்கமாகி யிருந்தது.

இத்தகைய விபரீதங்களால், சென்ற வருஷமும் சர்க்கார் ஆறுகளில் தண்ணீரை முந்தியே திறந்துவிட்ட போதிலுங்கூட, விவசாயிகள் தங்கள் அநுபவத்தை ஞாபகம் வைத்திருந்து, முந்திச் சாகுபடி செய்யவில்லை. வயல் மடைகளையெல்லாம் கெட்டியாய் அடைத்து விட்டார்கள். ஆறுகளில் நிறைய வெள்ளம் போயிற்று; ஆனால் வெள்ளம் சமுத்திரத்துக்கே போயிற்று! ஒருமாதம் ஆன பிறகு, எல்லோரும் சாகுபடியில் ஈடுபட்டார்கள். எங்கும் தண்ணீர் தேவையாயிருந்தது; அதுவும் ஏராளமாய்த் தேவையா யிருந்தது. நிலம் நனையவும், சேடை பாய்ச்சவும், வயலில் தேக்கவும் அதிகத் தண்ணீர் தேவையா யிருந்தது. ஆனால், விட்ட தண்ணீரோ, மிகவும்

கொஞ்சம். அதிகாரிகளைக் கேட்டால், "முன்னாலேயே வேண்டிய தண்ணீர் விட்டாயிற்று. இப்போது கொஞ்சமாய்த்தான் விட முடியும்" என்றார்கள். இவ்விதமாக, தண்ணீர் சம்பந்தமாய் ஏற்பட்ட கஷ்டங்கள் சொல்லிமுடியாது, சர்க்கார் அறிக்கைகளி லும் தஸ்தாவேஜுகளிலும் பார்த்தால், "முன்னெல்லாம் மூன்று மாதகாலம் தண்ணீர் கிடைக்கும். இப்போது உணவுப் பெருக்க இயக்கத்தைக் கருதி, நான்கு மாதத்துக்கு மேலும் தண்ணீர் கிடைக் கும்படி செய்தோம்" என்று கண்டிருக்கும்.

"முன்னாலேயே தண்ணீர் விடுவதால், நீர் வீணாய்க் கடலுக்குப் போகிறது; இதை விடாமல் தேக்கி, அடுத்த மாதம் சேர்த்து அதிக மாய் விடுங்கள்" என்று அதிகாரிகளிடம் விவசாயிகள் சொல்லிப் பார்த்தார்கள்; முறையிட்டார்கள், மனு எழுதினார்கள்; பத்திரி கைகளிலும் எழுதினார்கள். எப்பலனும் ஏற்படவில்லை. அதிகாரி போட்டிருந்த நீர்ப்பாசனத் திட்டம் என்ன ஆவது? அவர்கள் காகி தத்தில் தயாரித்து வைத்திருந்த உணவுப் பெருக்க இயக்க வேலைகள் என்ன ஆவது? "மாதம் மாதம் இவ்வளவு இவ்வளவென்று நீர் திறந்துவிட்டு விடுவோமே யொழிய, கூட்டவும் மாட்டோம், குறைக்கவும் மாட்டோம்" என்று கூறிவிட்டார்கள். "நீரைப் பாய்ச்சிக்கொள்ளா விட்டால் உங்கள் தவறு" என்று சொன்னார் கள். மாசூல் குறைவை எண்ணிப் பயந்து, பெரும்பாலான விவசாயி கள் சாகுபடி வேலையை முந்தித் தொடங்கவில்லை. நீரெல்லாம் கடல் வயிறு நிறைத்தது. பின்னர்ச் சாகுபடி தொடங்கியபோதும் போதிய தண்ணீர் தாராளமாய்க் கிடைக்கவில்லை. இந்த நிலையில்தான், மழையும் மோசம் செய்துவிட்டது.

எனவே, மழையில்லாமையால்தான் உணவுப் பஞ்சம் என்பது முழுமையும் உண்மையன்று. மழையில்லாமையால் விளைவு குறைந் தது உண்மைதான்; சர்க்கார் கைங்கரியமும் கூடவே சேர்ந்து கொண்டது. அதிகாரிகள் பொதுவாக, நீர்ப்பாசனம் எல்லாம் காகி தத்தில் எழுதிப் பார்த்தவர்கள். அல்லது கீழ் உத்தியோகஸ்தர்களிட மிருந்து வரும் ரிபோர்ட்டில் பார்த்தவர்களே. ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்குகிற உத்தியோகஸ்தர்களுக்கு, நீர்ப்பாசனம் என்ற மாத்திரத்தில், நீர்த் தேக்கம், வாய்க்கால் தலைப்பு முதலான இடங் களில் கறுப்பும் வெள்ளையுமாக வர்ணம் பூசி இத்தனை அடி ஆழம் நீர் இருக்கிறதென்பதைக் காட்டும் அடிப்பலகை ரூபத்தில் நினைவு வருமே யொழிய, நெல்லுக்கும் நெற்பயிருக்கும் உயிராயுள்ள தத்துவம் என்ற ரூபத்தில் நீர் அவர்களுக்கு ஞாபகம் வராது. நீர் பாய்கிற சமயத்திலும் நீரில்லாது வயல் காய்கிற சமயத்திலும்,

வயலிலும் வாய்க்காலிலும் வரப்பிலும் சென்று சேற்றிலிறங்கிப் பார்த்தால்தான், நீர்ப்பாசன உண்மைகள் புலனாகும். வெறும் 'டிராவலிங் அலவன்ஸ்' (பிரயாணப்படி) ஒன்றைமட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு, மோட்டர் காரில் இருந்தபடியே காலிலுள்ள பூட்ஸ் முனையின் பளபளப்புச் சிறிதும் குறையாத படி சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாக நடத்துகிற உத்தியோகஸ்தர்களுக்கு, வயலும் வரப்பும் வாய்க்காலும் எப்படித் தெரியவரும்? ஒரு வேளை வயலுக்குள் மோட்டார்கார் போய் நிற்குமானால். அப்போது வேண்டுமானால் பெரிய உத்தி யோகஸ்தர் மோட்டார் வண்டியின் உள்ளிருந்தபடியே எட்டிப் பார்ப்பாரோ என்னவோ? மற்றப்படி நடப்ப தெல்லாம் பொதுவாக, கீழ் உத்தியோகஸ்தர்கள் காட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுவதும், 'பார்வையிட்டேன், எல்லாம் சரியா யிருக்கிறது' என்று குறிப்பெழுதுவதுமே யாகும்.

8

உற்சாகக் குறைவு

இந்த நிலைமையில், ஏழை விவசாயிகள், தண்ணீர் வேண்டு மென்று என்ன கூக்குரலிட்டாலும் கேட்பாரில்லை. "தண்ணீர் இப் போது விட்டும் பயனில்லை,நிறுத்திவிடுங்கள்" என்று எவ்வளவுதான் கத்தினாலும் பயனில்லை. "நாங்கள் உணவு உற்பத்தி இயக்கத்துக்கு ஆதரவு தருகிறோம். தண்ணீர்விடத்தான் விடுவோம்" என்றே அதிகாரிகளின் பதில் கிடைக்கிறது. இன்னும் அதிகம் சொல்லப் போனால், "விவசாயிகள் சோம்பேறிகள், என்னதான் சொன்னாலும் கேட்பதில்லை. உணவுப் பெருக்கத்தில் அவர்களுக்குச் சிறிதும் உற் சாகமில்லை" என்றே அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

உற்பத்திப் பெருக்கத்தில் உற்சாக மிழந்து போவதற்குக் கார ணங்கள் அளவற்றன வுள்ளன. இரண்டோர் அம்சங்களைச் சுருக்க மாய்க் கவனிக்கலாம்.

முத்துக்கொட்டைச் செடி என்று சொல்லுகிற ஆமணக்குச் செடி எல்லோருக்கும் தெரியும். எவ்விதப் பராமரிப்பும் வேண்டி யிராதபடி தானே வளர்ந்து காய்க்கிற செடி, செடி. பத்தடி உயரம் வரையில்கூட வளரும்; ஆனால் அடர்த்தியா யிராது. நாட்டுப்புறங் களில் இது அனேகர் வீட்டுக் கொல்லைகளில் பயிராகும். பட்டணங் களில் வாழும் நாகரிக மக்கள் கடையில் போய் அரைக்கால் சேர் கொள்ளக்கூடிய சிறிய கண்ணாடிப் புட்டியில் அடைத்து மூடி

முத்திரையிட்டுவிற்கிற விளக்கெண்ணெய் அல்லது 'நாற்றமில்லாத' விளக்கெண்ணெயை வாங்கி வந்து, பேதியாக வேண்டிக் குழந்தைக்குப் புகட்டுவார்கள். ஆனால், நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் இப்படிச் செய்யமாட்டார்கள். கடையில் வாங்குகிற 'பச்சை' விளக்கெண்ணெயே குழந்தைகளுக்குப் பால்கட்டி வருவதற்குக் காரணம் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் தங்கள் தோட்டத்திலேயே முத்துக்கொட்டைச் செடி பயிராக்கி, அதிலிருந்து எண்ணெயெடுத்து உபயோகிப்பார்கள்; கொட்டையை இடித்து வேகவைத்து எண்ணெயெடுப்பார்கள். இப்படிக் காய்ச்சிய எண்ணெய் குழந்தைக்கு நன்மை செய்வதாகும்.

ஒரு முத்துக்கொட்டைச் செடி வருஷ முழுமையும் காய்த்தால், நாலணாக் காய் காய்ப்பது பெரிய காரியம். ஆனால், இதற்குள்ள வரியோ, சில இடங்களில் விபரீதமா யிருக்கும். தஞ்சை ஜில்லாவில், சீர்காழி, மாயவரம், கும்பகோணம் முதலிய தாலுக்காக்களில், கிராமத்தில் வீட்டுத் தோட்டமானது சில சமயம் சர்க்கார் கணக்குகளில் புன்செய் என்று போட்டிருக்கும். சில சமயம் நத்தம் என்று போட்டிருக்கும். புன்செயில் முத்துக்கொட்டைச் செடியிருந்தால் அதற்குத் தனித் தீர்வை இல்லை; நத்தத்தில் இருந்தானால் செடியொன்றுக்கு வருஷம் ஒரு ரூபாய் தீர்வைசெலுத்தியாக வேண்டும்; செடி காய்த்தாலும் சரி, காய்க்காவிட்டாலும் சரி, தீர்வை உண்டு. அதிகப் பலனிருந்தாலுமே நாலணாத்தான் தரக்கூடிய செடி ஒன்றுக்கு வரி ஒரு ரூபாயென்றால், இது விபரீத மல்லவா?

இப்படி எத்தனையோ விபரீதங்கள் உள்ளன. பாசனம் அல்லது இறைப்பு எதுவுமே இல்லாத மானாவாரிப் புன்செய் ஒன்று இருக்கிறது. இதற்குப் பொதுவான தீர்வை ஏகராவுக்கு இவ்வளவு என்ற கணக்குண்டு. இதில் வேர்க்கடலையோ, கம்போ, சோளமோ விவசாயி பயிரிடுகிறார்; தீர்வை செலுத்துகிறார். ஒரு மாங்கன்றையும் ஒரு தென்னம் பிள்ளையையும் இதில் நட்டாரென்று வைத்துக்கொள்வோம் தீர்வை உயர்வு இல்லை; ஆனால், இதில் ஒரு வாழை நட்டாரென்று வைத்துக்கொள்வோம். சமீபத்தில் சர்க்கார் பாசன வாய்க்கா லிருந்தால், அப்போது பல மடங்கு அதிகமான 'அதிகப் படித் தீர்வை' இதற்கே கொடுக்கவேண்டி யிருக்கும். ஏனென்றால், சுமார் நூறடி தூரம் வரையில் சென்று வாழையின் வேர் நீரை இழுத்துவிடுமாம். அதற்காகத்தான் உயர்ந்த தீர்வையாம். இந்த வாழையால் விவசாயி கண்ட பலன், நாலு வாழையிலையும், ஒரு வாழைப்பூவும், பத்து வாழைக்காயுமே யாகும்.

கிராமவாசிகளான விவசாயிகள் பெரும்பாலோருக்கு, நத்தம் எது, புன்செய் எது என்பது தெரியாது. இந்தத் தீர்வை விஷயமும் தெரியாது. ஆகவே அவர்கள் தங்கள் தோட்டத்தில் தங்களுக்கு உபயோகமான மரஞ் செடிகளைப் பயிரிட்டிருப்பார்கள். கிராமக் கணக்கப்பிள்ளை வேண்டியவரா யிருக்கிறவரையில், அல்லது அவருக்கு வருஷ வர்த்தனை கொடுத்துவரும்வரையில் தொந்தரவு எதுவும் இருக்காது. விவசாயிக்கும் கணக்கப்பிள்ளைக்கும் (கர்ணம்) அற்ப மனஸ்தாபம் எதேனும் நேரிட்டுவிட்டால், அவ்வளவுதான்; அந்த வருஷத் தீர்வையில் அவருக்கு 27 ரூபாய் 3 அணா 5 தம்பிடி தீர்வை அதிகமாகி யிருக்கும். ஏன் என்று மணியக்காரரைக் கேட்டால், அவருக்குக் காரணம் தெரியாது. கணக்கப்பிள்ளையைத்தான் கேட்கவேண்டும். அவரைக் கேட்டால், தெளிவாகக் கணக்குக் காட்டிவிடுவார், நத்தத்திலிருக்கும் முத்துக்கொட்டைச் செடி 26க்கும் தீர்வை ரூ. 26. புன்செயில் உள்ள வாழை மூன்றுக்கும் தீர்வை 1-3-5 ஆக ரூ. 27-3-5 என்பார். இதற்கு அப்பீலே கிடையாது. கலெக்டர் வரையில் மனு வெழுதினாலும் தீர்வை போட்டது போட்டதுதான். மரத்தையும் செடியையும் வெட்டி எறிந்துவிட்டாலும், அவ்வருஷம் தீர்வை கட்டியே ஆகவேண்டும், அடுத்த வருஷம் வேண்டுமானால் தீர்வையில்லாது தப்பலாம். எந்த அதிகாரியைக் கொண்டுவந்து காட்டினாலும், 'குறித்த செடிகள் நத்தத்தில்தான் உள்ளன. தீர்வை செலுத்த வேண்டியதுதான்' என்று அளந்து காட்டி கணக்கப்பிள்ளை நிரூபித்துவிடுவார். கிராமத்தில் கிழக்கு மேற்குக்கூட அறியாத அதிகாரி, இதற்குமேல் என்ன செய்வார்? விவசாயியும் பேசாமல் தீர்வையை எண்ணி வைக்கவேண்டியதுதான். தீர்வை விஷய விதிகள் முதலியவற்றின் நுட்பம் மேலதிகாரிகளுக்குத் தெரியாது; இவற்றுக்கெல்லாம் கணக்கப் பிள்ளை வைத்ததே சட்டம். ஆகவே, பொதுவாக அதிகாரிகள் அவர் நீட்டிய இடத்தில் யோசித்துக் கையெழுத்துப் போட்டாலும், அவர் காட்டிய வழியில்தான் செல்வார்கள். தவிர, விவசாயி ஏமாற்றப் பார்க்கிறார் என்றுதான் அதிகாரி எண்ணுவாரேயொழிய, அவருக்கு நியாயம் வழங்கவேண்டும் என்றெண்ணுகிற அதிகாரி மிக்க அபூர்வம்.

இதே போன்ற இன்னொரு நிலைமையும் சிறிது கவனிக்கலாம். வயலோரத்தி லுள்ள வரப்புக்கள் பெரும்பான்மையும் வயலைச் சேர்ந்தனவா யிருக்கும்; அதாவது விவசாயிக்கு உரியனவாயிருக்கும்; சிறுபான்மை புறம்போக்கும் உண்டு. எது சொந்தம் எது புறம் போக்கு என்ற வரையயை கணக்களவில் இருந்தபோதிலுங் கூட

தினப்படி நடைமுறையில் பெரும்பாலும் இராது. புறம்போக்கு வரப்பை ஒரு விவசாயி தம்முடையதென்று எண்ணியே அதில் கருவேல மரம் முதலியவற்றை வைத்துப் பயிராக்குவதுமுண்டு. ஒரு சமயம் இப்படி ஒரு சம்பவம் நடந்தது. ஒரு வரப்பில் விவசாயியொருவர் கருவேல மரங்களை நட்டு, ஆடுமாடு வாராதபடி வேலியடைத்துக் காவல் செய்துவந்தார். ஐந்தாறு வருஷங்களாகி, மரங்கள் நன்ருக வளர்ந்திருந்தன. வரப்புத் தம்முடையது, மரங்களும் தம்முடையன என்பது அவருடைய நம்பிக்கை, ஊரார் எல்லாருமே அப்படித்தான் நினைத்தார்கள். கணக்கப் பிள்ளையும் அதற்கு எவ்வித ஆட்சேபமும் செய்ததில்லை. ஒருநாள், அவருடைய கலப்பையொன்றின் வான்கட்டை (அதாவது கலப்பையின் அடியில் கொடுவைத்து அடித்திருக்கும் வளைந்த தனி மரத்துண்டு)முறிந்துவிட்டது. இதற்கு வேறு கட்டை போட, உறுதியான வளைந்த மரம்வேண்டும்; கருவேல மரமே இதற்குத் தக்க உறுதியுடையதாயிருக்கும். தாம் வளர்த்த கருவேலமரத்தின் கிளையொன்று இதற்கேற்றதென்று கண்டு, அக்கிளையை வெட்டினுர். அவ்வளவுதான்; வந்தது அனர்த்தம். ரெவினியு இன்ஸ்பெக்டர் சகிதமாய்க் கணக்கப் பிள்ளை வந்து சேர்ந்தார். புறம்போக்கிலிருந்த சர்க்கார் மரத்தை வெட்டியதாக அவர்மேல் வழக்குப் பதிவாயிற்று. இவர் எவ்வளவுதான் மரம் தம்முடையதென்று வாதாடியும் பயனில்லை. வழக்கு நடத்திய செலவுக்குச் செலவு; மரத்தை வெட்டியதற்காக அபராதம் ரூபா பதினைந்து; ரெவினியு கோர்ட்டுக்கும் வீட்டுக்குமாக, சாகுபடி வேலையையெல்லாம் விட்டுவிட்டு அலைந்ததுதான் மிச்சம்.

நான் ஊரான் தோட்டத்திலே
  ஒருத்தன் போட்டானும் வெள்ளரிக்காய்—அதைக்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்
  காயிதம் போட்டாண்டி வெள்ளைக்காரன்.

என்ற பாட்டை நாம் கேள்விப்பட்டிருக்கிருேம். அந்தப் பாட்டில் சொல்லியுள்ள பரிதாப நிலைமைக்கு இது எவ்விதத்திலும் குறைந்ததில்லை.

இந்தப் பரிதாபகரமான நிலைமையின் மத்தியில் சர்க்காரின் உணவு உற்பத்திப் பிரசாரம் பலமாக நடக்கிறது. பிரசாரத்தைக் காகிதத்தில் புள்ளி விவர ரூபமாய்ப் பார்க்கும்போது மிகவும் அழகாகத்தான் இருக்கிறது. உண்மை நிலையோ, மேலே காட்டியுள்ளது; விவசாயிகளைக் கேட்டுப் பார்த்தால் மிகவும் நன்ருய் அறியலாம்.

இவ்வளவு கஷ்டங்கள் இருக்கும்போது, நம் நாட்டு விவசாயிகள் இன்னும் எப்படிப் பயிர்த் தொழிலை விடாமல் செய்துவருகிறார்கள் என்பதை எண்ணியே நாம் வியப்படைய வேண்டி யிருக்கிறது. குடியானவன், விவசாயி, அல்லது மிராசுதார் என்ற மாத்திரத்தில் ஏதோ 'வேண்டாதவன்', 'வீண் உபத்திரவும் செய்வதே தொழிலாகவுடையவன்' என்ற அபிப்பிராயமே அதிகாரிகளிடம் இருக்கிறது. 'இவன் இல்லாம லிருந்தால் ஒரு தொல்லையும் இராதே' என்பதே அவர்கள் எண்ணம். இத்தகைய மனப்பாங்குடைய அதிகார வர்க்கத்துக்குக் கட்டுப்பட்டு, பயிர்த்தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்து வருகிற விவசாயிகளின் நிலைமை, பரிதாபம் ஒரு புறமும் வியப்பு ஒரு புறமும் தருகிறது. நாட்டின் செல்வம் பயிர்த்தொழில்தான் என்பதை உணராத அதிகார வர்க்கத்தினிடம், மக்கள் என்ன அனுகூலத்தை எதிர்பார்க்க முடியும்? ஏதோ இந்திய மண்ணுக்கே சொந்தமாயுள்ள தருமமானது, பயிர்த் தொழிலை இவ்வளவு ஆபத்துக்களி னிடையிலும் வளர்த்து வந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி, அஃதாற்று
எழுவாரை எல்லாம் பொறுத்து—

அதாவது, "உழுது பயிர் செய்து தம் உணவைத் தாமே தேடிக் கொள்ள வகை யில்லாது பிற தொழில்களை நாடிச் செல்வோர் அனைவரையும், உழுவோரே தாங்கி வருதலால், உழவுத் தொழில் செய்வோரே உலகத்தார்க்கு அச்சாணி போன்றார்" என்று திருக்குறளாசிரியர் கூறிப் போகலாம்; வாழ்க்கையிலும் அதுவே முடிவான உண்மையாயு மிருக்கலாம். அதை யாரும் இன்று நடைமுறையில் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. 'மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' என்ற உண்மை நிலவாத நிலைமையில் மக்களுடைய ஊக்கக் குறைவுக்கு விமோசனமே இருக்க முடியாது; பிரசாரமெல்லாம் வெறும் ஏமாற்று வேலை அல்லது வரி விதிப்பதற்கான முன்னேற்பாடு என்று அவர்கள் முடிவு செய்வதை மாற்றவும் இயலாது.

9

உலகெங்கும் விளைவுக் குறைவு

இந்தியாவில் இன்று ஏறக்குறைய எழுபது லட்சம் டன் உணவுப் பொருள் குறையும் என்று அரசாங்கத்தார் கூறுகிறார்கள். எனவே, இந்தக் குறைவுக்கு ஏதேனும் வழி செய்யவேண்டும்

என்று சர்க்கார் தூது கோஷ்டிகள் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சயாமுக்கும் பர்மாவுக்கும் போகின்றன. பெரும்பாலான தூது கோஷ்டிகளைச் சர்க்காரே அனுப்புகிறார்கள். தூது போனவர்களிற் சிலர் மிகவும் வீராவேசமாகப் பேசவும் பேசுகிறார்கள். இந்த நிலைமையில் ஒரு செய்தியை நினைவுவைக்க வேண்டியிருக்கிறது.

முன்னெல்லாம் பர்மா அரிசி இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தது. வெறும் காடாயிருந்த பர்மாவை நாடாக்கி, நெல் விளைவித்துப் பொன் கொழிக்கச் செய்தார்கள் இந்தியர்கள், சிறப்பாகத் தமிழ் மக்கள். அளவற்ற செல்வத்தை அங்குக் கொண்டுபோய் இறைத்து நாட்டைத் திருத்தியவர்கள் நம்மவர்கள். நம்மவருடைய பொருளும் ஊழியமுமே அந்நாட்டைப் பொன் கொழிக்கும் நாடாகச் செய்திருக்கிறது. சமீபத்தில் ஜப்பானியரிடம் சிக்கிய அந்நாட்டை விடுவித்தவர்களும் இந்தியப் படையினரே. ஆனால், அதிகாரம் பிரிட்டிஷார் கையிலிருப்பதால், இந்தியர் அங்குப் போவதற்கே தடை விதிக்கிறார்கள். ஜவாஹர்லால் நேரு பர்மாவுக்குப் போவதுபற்றிப் பர்மியருக்கு ஆட்சேபமில்லை; பிரிட்டிஷாரே இதற்கு இணங்க முடியவில்லை! இந்த நிலையில் அந்நாட்டிலிருந்து என்ன உணவு வசதி கிடைக்குமென்று நாம் உறுதியாய் நம்ப முடியும்?

உணவுப்பொருள் இந்தியாவில் மட்டுந்தான் குறைவு என்று சொல்ல முடியாது; பருவமழை பொய்த்தமை காரணமாகத் தென்னிந்தியாவில் மட்டுந்தான் இப்படி நெல் விளைவு குறைந்து போய் விட்டது என்பதில்லை. உலகத்தில் பெரும் பகுதியில் இவ்வருஷம் நெல் விளைவு அல்லது உற்பத்தி குறைந்து போய்விட்டது. அமெரிக்கச் செய்தி ஸ்தாபனத்தார் இச்செய்தியைப் புள்ளி விவரங்களோடு பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். (22-11-'45)

''வாஷிங்டன், நவ. 19—

> 1945—1946-ம் வருஷத்தில் உலகம் முழுமையிலும் 650 கோடி பறை அரிசிதான் உற்பத்தியாகும் என்று அமெரிக்க விவசாய இலாக்கா அறிவிக்கிறது. சென்ற வருஷம் மொத்தம் 680 கோடி பறை அரிசி உற்பத்தியாயிற்று. யுத்தத்துக்கு முன்னால் 740 கோடி பறை அரிசி உற்பத்தியாயிற்று. யுத்தத்தினால், அரிசி உற்பத்தியானது முக்கியமாக ஆசியாவில்தான் குறைந்திருக்கிறது. இந்தியாவில் சென்ற வருஷம் கிடைத்த அரிசியே இவ்வருஷமும் கிடைக்கும். பர்மா, சையாம், இந்தோசீனா முதலிய இடங்களிலிருந்து அரிசி

ஏற்றுமதி செய்ய முடியும் என்று தோன்றவில்லை. கொரியாவிலிருந்து சிறிது அரிசி ஏற்றுமதி செய்ய முடியும். ஆனால் பிலிப்பைனில் உற்பத்தி குறைந்துவிடும். வட அமெரிக்கா ஒன்றில்தான் உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த வருஷம் உலகம் முழுமையிலும் உற்பத்தி செய்யப்படும் அரிசி, யுத்தத்துக்கு முந்திய கால உற்பத்தியைக் காட்டிலும் பத்துச் சதவீதம் குறைவாக இருக்கும்'',

இந்தச் செய்தியிலுள்ள அம்சம் ஒன்றே ஒன்று. அதாவது அரிசி உற்பத்தி, அல்லது நெல் விளைவானது, எங்குமே இவ்வருஷம் குறைவு, அதிலும் முக்கியமாக, ஆசியாவில் குறைவு. அபூர்வமாக வட அமெரிக்காவில்தான் அதிகம் என்பதே இதில் கண்ட விஷயம். இந்த நிலைமைக்குத் தக்க காரணமும் இருக்கிறது.

நெற்பயிரானது ஆசியாக் கண்டத்திலும் வட அமெரிக்காக் கண்டத்திலுமே மிகுதி. குளிர் நாடாகிய ஐரோப்பாவில் அபூர்வம்; காட்டுப் பிரதேசமும் பாலைவனமுமாகிய ஆப்பிரிக்காவிலும் குறைவு. ஆசியாவைப் பொறுத்தவரையில், நெல் பயிரிடும் இரண்டு பெரிய நாடுகள் சீனமும் இந்தியாவும். நெடுங்காலமாகச் சீனமக்கள் ஜப்பானியரோடு போர் புரிந்து வந்திருக்கிறார்கள். நாட்டின் பல பகுதிகளை ஜப்பானியர்வசம் விட்டு ஓடிவந்திருக்கிறார்கள். பல பகுதிகளில் பயிர்களை அழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்திருக்கிறது. பல பகுதிகளில் சாகுபடி செய்யாமலே போட்டுவிடவும் நேர்ந்திருக்கிறது. உள்நாட்டுக் கலகங்களும் பல. இக்காரணங்களால், சீனத்தில் சாகுபடி வேலையே குறைந்து போனமையால் விளைவும் குறைந்துபோயிற்று. இந்தியாவில் விளைவு குறைவதற்கு இப்படிப்பட்ட காரணங்கள் ஏற்படவில்லை. ஆனால் சர்க்காருடைய யுத்த முயற்சியின் கடுமையானது, பயிர்த்தொழில் செய்துகொண்டிருந்த சாமானிய ஏழை உழவர்களை யெல்லாம், கலப்பையை விட்டுவிட்டுக் காக்கி உடை அணியும்படி செய்துவிட்டது. பயிர்த்தொழில் செய்வோர் யாவரும் இப்படி யுத்தத்துக்குப் புறப்பட்டால் நாட்டில் நெல் விளைவு குறைந்துவிடும், உணவுப் பஞ்சம் வருமே என்று அரசாங்கத்தார் அதிகம் கவனித்ததாய்த் தெரியவில்லை. பெயரளவில் இதற்கென்று ஏதோ சில 'பாரம்' வைத்திருந்தது உண்மை, ஆனால், அதை யாரும் பூர்த்தி செய்துவிடலாம். அதில் கண்டவை உண்மையா என்று யாரும் சரி பார்க்க முற்பட்டது கிடையாது. குறித்த ஓர் உழவன், பயிர் வேலை செய்யவில்லை, வேலையில்லாமல் தான் இருக்கிறான் என்று அவனுடைய சொந்த ஊரின் மணியக்

காரன் எழுதிக் கையெழுத்துப் போடவேண்டும் என்பது விதி. இவ்விதியை அவ்வளவாக யாரும் கவனித்ததில்லை. குறித்த பத்தியில் கையெழுத்து இருந்ததா என்று கவனித்தார்களே ஒழிய, அக் கையெழுத்து மணியக்காரன் கையெழுத்துத்தானு, அவன் அவ்வூர் மணியக்காரன்தானு என்பதை மேலே இருந்தோர் சரிபார்த்ததேயில்லை. யுத்தத்துக்குப் பலியிடுவதற்கு ஆள்பலம் சேகரிப்பதுதான் அப்போது முக்கியமானதா யிருந்ததே யன்றி, பயிர்த் தொழில் என்று ஒன்று உண்டு, அது எவ்வகையிலும் சீர்கேடடையக் கூடாது என்று யாருமே கருதியதில்லை. இதன் பயனையே இன்று நாம் அனுபவிக்கிருேம். பயிர்த்தொழில் செய்வதற்கு ஆள் கிடையாமையால் விளைவு குறைந்து போயிற்று, பருவமழை பொய்த்தமையாலும் விளைவு குறைந்துபோயிற்று.

யுத்தத்திலிருந்து திரும்பிவந்த வீரர்களும், தங்கள் கையிலுள்ள சொற்பக் காசையும் 'லீவு'ச் சம்பளத்தையும் வைத்துக்கொண்டு, 'சா' என்றும், 'சிகரெட்' என்றும் 'சுகமே' காலங் கழிக்க எண்ணுகிருர்களே யன்றி, மீண்டும் பயிர்த் தொழிலில் ஈடுபடும் எண்ணம், கொஞ்ச காலத்துக்கு அவர்களுக்கு வராது. தவிர, பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் தங்களுக்கு உத்தியோகம் தேடிக் கொடுக்கப்போகிற தென்ற எண்ணம் வேறு அவர்களுக்கு இருக்கிறது. காலில் பூட்சும் தலையில் தொப்பியும் மாட்டிக்கொண்டு எங்காவது ஓர் ஆபீஸில் சேவகனுகவாயினும் காவற்காரனுகவாகிலும் காலந் தள்ளலாம். இதுவே சௌகரியமானது என்ற நினைப்பும், பயிர்த் தொழிலில் இனிமேல் போய் ஈடுபடக் கூடாது என்ற சோம்பேறித்தனமும், பயிர்த்தொழில் தாழ்வானது என்ற தப்பான நினைப்பும் அவர்களுக்கு இருந்து வருகிறது. இந்த நிலைமையில், பயிர்த் தொழில் எப்படி நடைபெறும்? இப்போது அநேகமாக எல்லோருமே பல்லக்கு ஏறிவிட்டார்கள்; சிலர் பழைய பல்லக்கிலேயே உட்கார்ந்திருக்கிருர்கள். பலர் புதிய பல்லக்குச் செய்துகொண்டார்கள். பல்லக்குச் சுமந்தவர்கள் யாவரும் பல்லக்கில் ஏறி உட்கார்ந்த பின், பல்லக்கை யார் சுமப்பது என்பதுதான் தெரியவில்லை. எல்லோருமாகச் சேர்ந்து நடப்பதைத் தவிர வேறு வழி ஏதேனும் இருக்க முடியுமென்று தோன்றவில்லை.

இந்தியாவின் நிலைமை இப்படி யிருப்பதனுல்தான் இன்றைய உணவுப் பஞ்சம். ஆனுல், அமெரிக்காவின் நிலைமை வேறு. அங்கு உற்பத்திக் குறைவில்லை, பெருக்கம். அந்நாடு இயந்திரத் தொழில் பெருகியுள்ள நாடு. பயிர்த்தொழிலிலும் அங்கு இயந்திரங்களே அதிகம். ஆட்கள் குறைவு. ஆதலால் அங்குச் சில பேரே இருந்து

பயிர்த்தொழில் குறையாதபடி நடத்திவர முடிந்தது. எத்தனைப் பேர்தாம் யுத்தத்துக்குப் போய்விட்ட போதிலுங்கூட, பயிர்த் தொழில் வழக்கம்போலவே நடந்து வந்தது. அங்கு உணவு உற்பத்தி குறையாததற்கு இது ஒரு முக்கிய காரணம்.

பெருக்கத்துக்கும் ஒரு காரணம் இருக்கிறது. லக்ஷக்கணக்கான அமெரிக்கப் படைவீரர், அமெரிக்காவை விட்டுப் போர் புரியும் பொருட்டு இந்தியா பர்மா மலாயா இலங்கை முதலிய இடங்களுக்கு வந்தபோது, தங்கள் உணவுக்கு வேண்டிய கோதுமையையும் அரிசியையும் அவர்கள் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்து விடவில்லை. இந்தியாவில் விளைந்ததையே தின்று தீர்த்தார்கள். இதனால், அமெரிக்க உற்பத்தியில் மிச்சம் அதிகமாயிற்று. இது அங்குள்ள உணவுப் பெருக்கத்துக்கு ஒரு காரணமாகும்.

இந்த நிலைமையில், அமெரிக்கர், தங்களால் இந்தியாவில் ஏற்பட்ட உணவுக் குறைவுக்கு ஈடாகத் தங்கள் நாட்டிலிருந்து நாம் கேளாமலே உணவு கொண்டு வந்து கொடுப்பதே நியாயமாகும். இப்படிக் கொடுப்பதற்கு நாளும் பார்க்க வேண்டியதில்லை. யாருடைய அனுமதியும் தேடவேண்டிய தில்லை.

பிரிட்டனுடைய உணவு நிலைமை என்ன என்பதையும் இங்கு நாம் சற்றே கவனிக்க வேண்டி யிருக்கிறது. இங்கிலாந்தில் உற்பத்தியாகிய சரக்கு ஒன்றே ஒன்று. அதுவே நிலக்கரி. இது போட்டு எரிக்க உதவுமே யன்றி, பசி தணிக்க உதவாது. எப்பொழுதுமே அந்நாட்டில் உணவுக் குறைவு உண்டு. அங்கு விளைவது அந்நாட்டு மக்கள் வயிற்றுக்குக் காணவே காணாது. வயிற்றுப் பசிக்குத் தீனி தேடிப் புறப்பட்ட ஆதி பிரிட்டிஷ்காரர்கள்தாம் நாடு பிடிப்பவர்கள் ஆனார்கள். பெரிய சாம்ராஜ்யம் சேர்த்து வைத்திருப்பதனால், பிரிட்டன் இன்று திருப்தியாய்ச் சாப்பிட்டு ஏப்பம் விடுகிறது. பஞ்சம் என்ற பேச்சே அங்குக் கிடையாது. எல்லா நாடுகளிலுமுள்ள உணவுப் பொருளைச் சுரண்டிக் கொண்டுபோய் வைத்து மெல்ல மெல்ல அசைபோட்டுத் தின்று புளியேப்பம் விடுகிறது. இந்தியா போன்ற நாடுகளின் பசியேப்பத்தை வேடிக்கை பார்க்கிறதே யொழிய, பிச்சைகூட அளிக்க முன்வரவில்லை. சோற்றுக்கே வழியற்ற இங்கிலாந்து இன்று சோற்று மூட்டை மீதும் பண மூட்டை மீதும் உட்கார்ந்து புளியேப்பம் விட்டுக்கொண்டிருப்பதும், எப்போதும் ஏராளமாய் உணவு உற்பத்தி செய்யும் இந்தியா இன்று பஞ்சத்துக்குச் சுமார் 40 லட்சம் தொகையுள்ள தன் மக்களைப் பறிகொடுத்து விட்டு, இன்று மீண்டும் வரப்போகிற பஞ்சத்தை எண்ணி அஞ்சிப் பிச்சை கேட்பதும், இந்தப்

பிரிட்டிஷ் அரசாட்சியிலன்றி உலகத்தில் வேறெங்கு நிகழக்கூடிய அதிசயம்? இப்படிப்பட்ட அன்னிய ஆட்சியும் ஏகாதிபத்தியச் சுரண்டலும் ஒழியவேண்டுமென்று அரசியல் விஷய மறிந்தவர்கள் அடிக்கடி கூறுவது எவ்வளவு உண்மை யுடையது!

எனவே, உணவுப் பஞ்சம் காரணமாக, பிச்சைகேட்டுத் தூது போயிருப்பவர்களால், எந்த அளவு நமக்கு உதவி கிடைக்குமென்பதை அறியு முன், எங்குமே உற்பத்தி இவ்வாண்டில் குறைந்திருக்கிற தென்பதை ஞாபகம் வைத்திருந்தோமானால், உதவி கிடைக்கவில்லை என்றோ, கிடைத்த உதவி போதவில்லை என்றோ நமக்கு விசேஷ ஏமாற்றம் ஏற்படாது.

10

கறுப்பர் - வெள்ளையர் பிரசினை

தவிர, மனமார உதவி செய்வதற்கு இதயத்தில் நல்லெண்ணம் இருக்கவேண்டும். தந்திரமொன்றுக்கே பெயர் பெற்ற பிரிட்டிஷார் நன்றி விசுவாசமுடையவர்களென்று பெயர் வாங்கியிருப்பதாகச் சொல்ல முடியாது. இந்தியர் பிரிட்டிஷாருக்குப், பேருதவி செய்தவர்கள்; ஜெர்மானியர் தீராத பகைவர். இப்படி யிருந்தும், ஆபத்துக் காலத்தில் பிரிட்டிஷார் யாருக்கு உதவி செய்வார்களென்பதை முடிவு செய்வது, நன்றி யுணர்ச்சி யன்று; கறுப்பர் வெள்ளையர் என்ற பிரசினையே இதை முடிவு செய்கிறது.

ஒரு காலத்தில் வெள்ளையர் - கறுப்பர் என்ற கொடுமையான யுத்தம் வரப்போகிற தென்பதைப் பிரிட்டிஷார் நன்றாய் அறிவார்கள். அது எப்போது அல்லது எவ்வளவு சீக்கிரத்தில் என்பதை ஒருவரும் சொல்ல முடியாது. அந்த யுத்தம் வருங் காலத்தில், வெள்ளை யினத்தில் ஆள் தொகை குறைந்துபோகக் கூடாது என்பதில், பிரிட்டிஷாருக்கு மட்டுமல்ல, வெள்ளைக்காரர் அனைவருக்குமே கவலை அதிகம், இக்கவலை அதிகமென்பதை வெள்ளையினத்தாரின் செயல்களால் அறியலாம். பின் வரும் உதாரண மொன்றை மட்டும் கூர்ந்து கவனித்தால் போதுமானது.

இன்று ஜெர்மனி அடியோடு தொலைந்து போய்விட்டது. ஜெர்மனி என்றாலே சிம்ம சொப்பனமாய் இருந்து, பிரிட்டிஷார் காலடியில் அந்நாடு இன்று நசுக்குண்டு கிடக்கிறது; இந்தியாபோல் அடிமைப் பட்டுக் கிடக்கவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். அந்நாட்டுக்கு, இங்கிலாந்து இன்று அளவில்லாமல் உணவுப் பொருள் உதவி வருகிறது. ஆனால் இந்தியாவில் சமீபத்தில்

வங்க மக்கள் 35 லட்சம் பேர் பஞ்சத்தால் மாண்டபோது, பிரிட்டிஷ் அரசும், அதற்குத் தாளம்போட்ட இந்திய அரசும், இந்நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து பிற இடங்களுக்குக் கொண்டு போயினவே யன்றி, பஞ்ச நிவர்த்திக்கு எதுவும் செய்யவில்லை. பிரிட்டன், கப்பல் வசதிக் குறைவு என்று கூறி உதவி செய்யவேயில்லை. ஜப்பானிலிருந்து உதவி யனுப்புவதாகச் சுபாஷ் போஸ் கூறியதையும் அரசாங்கம் நிராகரித்து விட்டதென்ற செய்தி, சட்ட சபையில் விவாதத்துக்கு வந்த விஷயம் நாம் அறிவோம். இதை எண்ணும்போது சிலருக்கு நம்பத் தோன்றாது. 'இந்த யுத்தத்தில் கோடிக் கணக்கான இந்தியர் பிரிட்டனுக்காகத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்தார்களே! இவர்களை நினைத்துக்கூட அந்தப் பிரிட்டன் பஞ்ச காலத்தில் ஓர் அற்ப உதவியும் செய்ய எண்ணவில்லையே! அப்படியிருக்க, தனது பரம விரோதியான ஜெர்மனிக்கா இப்படி அளவில்லாது உணவுப்பொருள் கொடுத்து உதவுகிறது?' என்று கேட்டு அதிசயிக்கலாம். ஆனால், அதிசயிக்கப் படத்தக்க இந்த விஷயம் உண்மைதான் என்பது, லார்ட் வான்ஸிட்டார்ட் என்ற பிரிட்டிஷ்காரரே மனம் நொந்து கூறிய அபிப்பிராயத்தால் தெளிவாகும்; இச்செய்தி 19—2—46 தேதியுள்ள பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது!

"லண்டன், பிப். 18

ஜெர்மானியருக்கு அதிக உணவுப் பொருள்கள் அனுப்பப் படுவதற்கு முன்னால், இந்தியாவில் பட்டினி கிடக்கும் மக்களின் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் சர்க்காரின் மாஜி ராஜதந்திர ஆலோசகரான லார்ட் வான் ஸிட்டார்ட் பிரபு அறிவித்ததாக ராய்ட்டர் விசேஷ நிருபர் அறிவிக்கிறார். அவர் கூறியதன் சாரமாவது:

ஜெர்மனியில் கஷ்டம் பெரிதும் மிகைப்படுத்திக் கூறப்படுகிறது. இது சக்தி வாய்ந்த பிரசாரத்தின் ஓர் அம்சம். ஜெர்மனியில் கஷ்டமே இல்லை யென்று நேரில் பார்த்துவிட்டு வருகிறவர்கள் கூறுகின்றனர். பெரிய நகரங்கள் சிலவற்றில் சிறிது கஷ்டம் நிலவுவது உண்மை. சென்ற யுத்தத்துக்குப் பின் ஜெர்மானியர் கிளர்ச்சி செய்து தங்களுக்கு நியாயமாகக் கிடைத்திருக்க வேண்டியதைக் காட்டிலும் அதிக உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். இப்பொழுதும் அது போல் நடக்க விடக்கூடாது. ஜெர்மனிக்காக ஒதுக்கப் பட்டுள்ள உணவுப் பொருள்களை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும். ஜெர்மனியைக் காட்டிலும் இந்தியாவுக்குத்தான் முக்கி

யத்துவம் அளித்து, முன்னால் உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும் என்று கூற நான் தயங்கவில்லை, நம்முடைய நண்பர்களைக் காட்டிலும் விரோதிகள் நல்ல நிலைமையில் இருக்கக் கூடாது'',

இச்செய்தி நமக்கு எத்தனையோ உண்மைகளைப் புலப்படுத்துகிறது. பிரிட்டிஷார் ஜெர்மனியின் நலனை உத்தேசித்து எவ்வளவோ உணவுப் பொருளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்,

இந்தியாவுக்கு ஏதேனும் கொடுப்பது பற்றிய பேச்சே இல்லை! இந்தப் பிரபுபோன்ற யாரேனும் ஒருவர் இருவர் மட்டுமே இந்தியாவுக்கும் கொஞ்சம் பிச்சை அளிக்கலாம் என்று கருதுகிறார்கள். மற்றப்படி எல்லோரும் ஜெர்மனி முதலான வெள்ளைகாரர் தேசத்துக்கு உதவி செய்வதிலேயே முனைகிறார்கள், பொதுப்படையான இந்த நிலைமைக்குக் காரணம் கண்டுபிடிப்பது அப்படியொன்றும் கஷ்டமன்று. பரம விரோதியான அந்த நாட்டினிடம் இப்போது பிரிட்டிஷாருக்கு ஏதேனும் அன்போ கருணையோ புதிதாய்ப் பிறந்து விடவில்லை. முன்னே சொன்னது போல, உலகத்தில் வெள்ளைத் தோல் போர்த்த மக்கள் தொகை குறைந்து போகக் கூடாது என்ற ஒரே பெரிய நோக்கந்தான் இதற்குக் காரணம். கறுப்பர் எவ்வளவு பேர் செத்தாலும், கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், உலகத்திலுள்ள மக்களின் மொத்தத் தொகையில் கறுப்பர் தொகை மிகவும் அதிகமாயிருக்கிறது. ஆனால் வெள்ளையர் தொகையோ குறைவாயுள்ளது. வெள்ளையர் தொகை பின்னும் குறைந்துகொண்டு போகுமானால், நிலைமை விபரீதமாகி விடும். எனவே, கறுப்பர் நண்பர்களா யிருந்தபோதிலுங்கூட, அவர்களுடைய நன்மை தீமையைக் குறித்துக் கவலைப்படாமல், வெள்ளையர் பகைவராயிருந்தாலும், அவர்களுக்குப் பஞ்சத்தால் மரணம் நேர்வது போன்ற பெருவாரி மரணம் எதுவும் நேராது காப்பதே வெள்ளைக்கார நாடுகளின் பொதுவான நோக்கமா யிருக்கிறது.

எனவே, உணவுத் தூது கோஷ்டிகளால் என்ன பயன் விளையுமென்பதை யூகிக்க, இந்தப் பிரசினையை உணர்வதும் அவசியமாகும். கறுப்பர் வெள்ளையர் என்ற பேச்சு, அரசியலில் கொண்டுபோய் விடுகிறது.

11

உணவுப் பிரசினையும் அரசியலும்

உணவுப் பிரசினையை அரசியலில் கலக்காமலிருக்க வேண்டும் என்பது பெரிய அதிகாரிகளின் வேண்டுகோள். நல்லது. இந்தப்

பிரசினை எப்படி வந்தது? பெரிய யுத்தம் நடத்திய காலத்திலெல்லாம் இல்லாத இப்பிரசினை, யுத்தம் முடிந்தபோது வருவானேன்? இப்பிரசினை எப்படி வந்தது, எப்படி இதைப் போக்க முடியும் என்பதை ஆராய்ந்தால், அடிப்படையில் இது அரசியல் பிரசினைதான் என்பதைக் காணலாம். யுத்த காலத்தில், தேசமெங்கும் மக்களுடைய பிரதிநிதிகளைக் கேளாமலே பெரிய ஏதேச்சாதிகார ஆட்சி நடந்தது. கணக்கிலாத உணவுப் பொருள் நாசமாயிற்று. ஏற்றுமதியாயிற்று கடல்வயிறு நிறைந்தது. இதன் பலனே இன்றைய பஞ்சம். நாட்டின் பிரதிநிதிகளைக் கேட்டிருந்தால், இந்த நாசமும் ஏற்றுமதியும் நடந்திரா. இப்பஞ்சமும் வந்திராது.

வங்க மக்கள் சோற்றுக்கின்றி மடிந்தது அரசியல் பிரசினையல்லாது வேறென்ன? காந்தியடிகள் கூறியது போல யுத்த காலத்தில், வெள்ளைக்காரரும் சர்க்காரும்கூட நாட்டைச் சூறையாடிவிட்டார்கள். பொதுவாக உலகத்தில் அரசாங்கம் கவிழ்ந்தால்தான் சூறை நடக்கும். இங்கோ, அரசாங்கம் இருந்த போதே சூறையும் நடந்தது. எனவே சூறையாடியது யார் என்பது வெளிப்படை. ஆகவே, நாங்கள் செய்கிறபடி செய்வோம், நீங்கள் மட்டும் உணவுப் பிரசினையில் அரசியலைக் கலக்காதீர்கள் என்று சர்க்கார் வேண்டுவதில் பொருள் எதுவும் புலப்படவில்லை. உணவுப் பிரசினையே அரசியல் பிரசினையா யிருக்கும்போது, இதில் புதிதாய் அரசியலைக் கலப்பது எப்படி?

உணவுப் பிரசினையில் அரசியலைக் கலக்கக் கூடாது. வாஸ்தவம். கொஞ்ச காலத்துக்குமுன்னே நாட்டுப்புறங்களிலுள்ள மாட்டு வண்டிச் சக்கரங்களுக்கெல்லாம் ரப்பர் டயர் (கட்டு) போடும் முயற்சி மிக்க தீவிரமாய் நடந்து வந்தது. இதற்குக் காரணம், இருப்புக் கட்டுப் பேூட்ட வண்டிகளால் சாலைதேயும். மாடுகளுக்கும் இழுப்பதில் சிரமம் அதிகம் என்பனவாகச் சொன்னார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் சுமாரான சாலைகளே இல்லை; எனவே சாலை கெட்டுப் போகிறது என்ற பயம் இங்கு ஏற்பட வழியுமில்லை. மாடுகளுக்குச் சிரமம் குறைய வேண்டும் என்பதில் இந்தப் பிரசாரகர்களுக்குத்தான், அடடா, என்ன கவலை, என்ன கவலை!

எண்ணம் என்ன வென்றால், அக்காலத்தில், ரப்பர் தோட்ட முதலாளிகளான பிரிட்டிஷார் உற்பத்தி செய்து வைத்திருந்த ரப்பர் ஏராளமா யிருந்தது. செலவே ஆகாமல் பெரும்பகுதி தேங்கிக் கிடந்தது. உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்று,

ரப்பர் முதலாளிகள் சங்கமும் தீர்மானித்தது. சில இடங்களில், ரப்பர் விலை குறையக்கூடாதென்பதற்காக, முதலாளிகளே ரப்பரை நாசம் செய்யவும் செய்தார்கள்; நாசம் செய்தாலும் செய்யலாம், விலை குறையலாகாது என்பதுதான் முதலாளிகளின் லட்சியம்!

இந்த நிலைமையில்தான் அவர்கள் தங்களுடைய இந்தியாவில் வண்டிகளுக்கு டயர் போடும் பிரசாரம் வெற்றிகரமாக நடத்தினார்கள். இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களின் ஆதரவு அவர்களுக்கு அமோகமாக இருந்தது. பல நகர சபைகள் சர்க்காரின் தயவைத் தேடி, தங்கள் குப்பை வண்டிகள் முதலியவற்றுக்கு ரப்பர் டயர் போட்டன. போட்டதனால் எவ்வளவோ சௌகரியம் என்று வேறு சொல்லிக் கொண்டார்கள்.

இதெல்லாம் யுத்தத்துக்கு முந்திய காலம். யுத்தம் வந்தது. ரப்பரெல்லாம் யுத்த கைங்கரியத்துக்கே போய்விட்டது. நகர சபைகள் தங்கள் வண்டிகளுக்கு ரப்பர் டயர் வேண்டுமென்று கேட்க ஆரம்பித்தன. கேட்டுப் பயன்? டயர் கிடைக்கவில்லை. வண்டிகள், அல்லது ரப்பர் போடுவதற்கான அவற்றின் கட்டுகள் யாவும் மூலையில் அடுக்கப்பட்டன, மீண்டும் பழைய நாட்டுக் கட்டுகளைத் தேடவேண்டிய நிலைமை வந்து விட்டது.

இவ்விதமாக, வெறும் பிரசாரத்தை - சர்க்கார் பிரசாரமாயிருந்தாலும் சரி - நம்பினால் பயனில்லை, ஆபத்துத்தான் என்பது நம்மவருக்கு நன்றாய் அனுபவத்தின்மேல் தெரிய வந்திருக்கிறது. பிரசாரமானது தேசத்தின் நன்மையை உத்தேசித்திருப்பதில்லை. ஒன்று, அயல்நாடுகளில் நடப்பதை அப்படியே பின்பற்றுவதாயிருக்கிறது, அல்லது பிரிட்டிஷாருக்கு வியாபாரமும் லாபமும் தேடுவதாயிருக்கிறது. அயல் நாட்டு முறைகளைப் பின்பற்றுவது தவறு என்பது கருத்தன்று. கண்மூடித்தனமாய்ப் பின்பற்றுவது தவறு. அயல் நாடுகளில் ரப்பர் டயர் போடுகிறார்கள் என்று படித்து நாமும் போடுவது சரியாகாது; பொதுவாய் ரப்பர் டயர் சௌகரியமானது தான். ஆனால் நம் நாட்டில் ரப்பரோ டயரோ போதிய அளவு உற்பத்தியாகாதவரை, பெருவாரியாய் நம்மூர்களில் ரப்பர் டயரே போடுவதென்பது நம் செல்வத்தை அயலாருக்குக் கொட்டிக் கொடுப்பதாய் முடியும்; சமயத்தில் சாமான்களின் தட்டு ஏற்பட்டு, வேலைக்கே கஷ்டமாயும் முடியும். ஆனால், சர்க்கார் பிரசாரம் இந்த அம்சங்களைக் கவனிக்கிறது என்று பொதுவாய்ச் சொல்லமுடியாது. ஆகவேதான் மக்களுக்கும் அதனிடம் நம்பிக்கை ஏற்படாமலிருக்கிறது.

உணவுப் பிரசினையில் அரசியலைக் கலக்கக்கூடாது. வாஸ்தவம். சர்க்கார் செய்கிற காரியங்கள் இப்படிப்பட்ட எண்ணத்தை மக்களுக்கு ஊட்டுவனவா யிருக்கவேண்டும். அரசாங்கத்தார் செய்யும் காரியங்களில் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்படியா யிருக்க வேண்டும். உண்மையில் அப்படி யிருக்கின்றனவா? இந்த யுத்தம் நின்றுபோய் எவ்வளவோ காலம் கழித்து, இந்த மார்ச் முதல் வாரத்தில் வெற்றி விழாக் கொண்டாடுகிருர்கள், நமது சர்க்கார். புதிய டெல்லியில், இதற்குச் செலவு பத்து லட்ச ரூபாய். சட்டசபை அங்கத்தினர்கள் இது கூடாது என்று எவ்வளவோ தடுத்தார்கள். பயனென்று மில்லை. செலவு ஆகத்தான் ஆயிற்று. அது மட்டுமல்ல. எவ்வளவோ துப்பாக்கிப் பிரயோகம்; எத்தனையோ உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் இச்செலவுக்குத் துணைபோயின. இப்படிப் பண விரயமும் சொத்து விரயமும் உயிர்ச்சேதமும் நேருமிடத்தில் ஆளும் வர்க்கத்தாரான பிரிட்டிஷ்காரரின் மனப்பான்மை எப்படி யிருக்கிறது? சமீபத்தில் பெரிய அளவில் பம்பாயில் மனித வேட்டை நடந்தது. பிரிட்டிஷ் ராணுவத்தார் மக்களைச் சுட்டனர். இதனால் 300க்கு மேற்பட்டோர் மாண்டனர் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மனித வேட்டையைக்குறித்து பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் 'டெய்லி வொர்க்கர்' என்ற ஒரு வெள்ளைக்காரர் பத்திரிகையில் பின் வருமாறு எழுதியிருக்கிருர்; இப்பகுதி 8—3—46 தேதியுள்ள சென்னைப் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது:—

"பம்பாயில் நடந்தது ராணுவத் தர்பாரே
பிரிட்டிஷ் அதிகாரி கூறும் திடுக்கிடும் விவரங்கள்,

வீடுகளுக்குள் புகுந்து சுட்டனர்.

லண்டன், மார்ச். 6.

பம்பாயில் துப்பாக்கிப் பிரயோகத்தை நேரில் கண்ட பிரிட்டிஷ் அதிகாரி யொருவர் 'டெய்லி ஓர்க்கரில்' எழுதுவதாவது:—அன்று நான் நடந்துகொண்டிருந்த போது கண்ட காட்சி இதுதான்: தெருக்களில் பலர் நின்றுகொன்டிருந்தனர். அவர்களை ஒரு கலகக்காரர் கூட்டமென்று சொல்லமுடியாது. திடீரென பிரிட்டிஷ் துருப்புகள் நிறைந்த ஒரு லாரி வந்து எந்த விதமான முன்னெச்சரிக்கையுமின்றி, துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. ஜனங்கள் வீட்டு வாசல்களை நோக்கி ஓடியபோதும் துருப்புகள் அவர்களைத் துரத்தித் துரத்திச் சுட்டனர்.

ஏன் இந்த வெறி ? இவர்களுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று அதிகாரியாராவது ஒருவர் கூறியிருப்பார். அதனால் ஏற்பட்ட விளைவு, இது. டல்ஹௌசி ரோடில் துருப்புகள் வீடுகளுக்குள்ளாகவே புகுந்து சுட்டனர்.

வேலை நிறுத்தம் செய்த கடற்படையினரைக் காஸில் முகாமுக்குள் செல்லும்படி உத்தரவிட்டதே அதிகாரிகள்தான். அவர்கள் உள்ளே சென்றபின் பிரிட்டிஷ் துருப்புகள் வெளியே முற்றுகையிட்டுக் கொண்டனர். கடற்படையினர் தண்ணீர் சாப்பிட வெளியே வந்தபோது பிரிட்டிஷ் துருப்புகள் சுட்டனர்.

பலமாகக் கல் வீச்சு நடந்தது என்ற பிரசாரம் நடக்கிறது. ஆனால் முதலில் அமைதியாகச் சென்றுகொண்டிருந்த ஓர் ஊர்வலத்தில் இருவர்மீது மோதிக்கொண்டு ஒரு ராணுவ லாரி சென்ற பின்தான் கல் வீச்சே ஆரம்பமாயிற்று. மேலும் அன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது அனைவரும் பிரிட்டிஷ் துருப்புக்களே. இந்தியத் துருப்புக்களைக் கூப்பிட்டால் சுட மறுத்துவிடக் கூடுமென்று அதிகாரிகள் அஞ்சினர்.''

இப்படியாக, உணவுப் பஞ்சம் உயிரைக் கொள்ளை கொண்டு வருகிறது ஒருபுறம். மற்றொருபுறம் வெற்றி விழாக் கொண்டாட்டம், ஏராளமான பணச் செலவில், மக்களுடைய பிரதிநிதிகளின் கண்டனத்தையும் புறக்கணித்து விட்டுக் கோலாகலமாக நடக்கிறது. இன்னொரு புறம், பிரிட்டிஷ் துருப்புகள் நிரபராதிகளும் நிராயுத பாணிகளுமான மக்களை, மேற்கூறிய பிரிட்டிஷ் அதிகாரி சொன்னபடி வீடுகளுக்குள்ளும் புகுந்து வேட்டையாடி வாகைமாலை சூடுகிறார்கள். பம்பாய், டெல்லி, கல்கத்தா, கராச்சி, சென்னை முதலான பல இடங்களில் இப்படி நடந்திருக்கின்றன. இவை யாவும் ஆளும் வர்க்கமான பிரிட்டிஷ்காரரின் மனப்பான்மையையே விளக்குகின்றன.

இந்த நிலையில், உணவுப் பிரசினையில் அரசியலைக் கலக்கக் கூடாது என்றால் இது அர்த்தமில்லாத பேச்சாகத்தான் தோன்றுகிறது.' வெற்றி விழாக் கொண்டாட்டத்துக்காகச் செலவு செய்த பணம் அவ்வளவையும், நெல் விளைவு குறைந்துபோன பகுதிகளில் விவசாயிகளுக்குப் பின்னும் அதிக வரிவஜாச் செய்ய உபயோகித்திருந்தால், ஏழை மக்களுக்கு உள்ளபடியே மிக்க ஊக்கமுண்டாகும். ஏழை விவசாயிகள் அன்பும் ஆதரவையுமே பெரிதும் தேடுகிறார்கள் ; இவ்விரண்டுமே அதிகார வர்க்கத்திடம் இல்லாத சரக்குகளா யுள்ளன. ஆகவே, உணவுப் பொருள் உற்பத்தி செய்பவன்

எவ்வித அனுகூலமு மடையாத நிலையில், லட்சக்கணக்கான ரூபாய் இப்படி விரயமாவதைக் கேள்விப்படும்போது அவன் வயிறு எரியத்தான் எரிகிறது. விரயமாகிற பணம் யாருடைய பணம்? இப்படிப்பட்ட ஏழைகள் வருத்தப்பட்டுக் கொடுத்த வரிப் பண மல்லவா? இந்த விழாக் கொண்டாட்ட மெல்லாம் மாதா வயிறெரியப் பண்ணுகிற மகேசுர பூஜைதானே? இந்த விதமான மகேசுர பூஜை பண்ணுகிற அரசாங்கத்தினிடம் பொதுமக்களுக்கு நம்பிக்கை எந்த விதத்தில் பிறக்கும்? எனவே, விவசாயிகள் உணவு உற்பத்தி செய்துவருகிறார்கள் என்றால், அது சர்க்கார் பிரசாரத்தாலு மல்ல; அவர்கள் மீதுள்ள 'நம்பிக்கை'யாலு மல்ல. இந்திய மண்ணுக்கே இயல்பாயுள்ள தருமமொன் றிருக்கிற தல்லவா, ஒருநாள் ஒரு பொழுது ஒருவன் ஊண் ஒழிதல் பார்க்கும் நேர் நிறை நில்லாதென்னும் என் மன்னே' என்ற தருமம்? இந்தத் தரும வுணர்ச்சியே விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கும்படி செய்கிறதே யன்றி வேறில்லை.

பீதி யுண்டாக்கும் வதந்திகளைப் பரப்பலாகாது என்று சர்க்கார் அதிகாரிகள் அடிக்கடி பத்திரிகாசிரியர்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். நியாயந்தான். பஞ்சம் உண்மையாகவே வந்து அதனால் மக்கள் துன்புறுவதை விட, இப்படிப்பட்ட பீதி காரணமாக, ஏழை மக்களும் நடுத்தர நிலையிலுள்ள எளிய மக்களும் படுந் துன்பம் பெரிது. தவிர, சிலர் 'கூடிய வரையில் நாமும் கொஞ்சம் அரிசி முதலியவற்றைச் சேமித்து வைப்போமே' என்று எண்ணிச் சொற்பப் பதுக்கல் வேலையில் ஈடுபடுதலும் கூடும். இவற்றால் பஞ்சம் பெருகும் என்பது தெளிவு.

ஆனால், பத்திரிகையாசிரியர்கள் உண்மையிலேயே பீதியுண்டாக்குவதைத்தான் நோக்கமாய்க் கொண்டிருக்கிறார்களா என்பதைச் சிறிது கவனிக்க வேண்டும். இவர்களுடைய உண்மையான நோக்கம். உள்ள நிலைமையை மக்களுக்கு எடுத்து உணர்த்தி எச்சரிக்கை செய்வதுதான். லட்சக் கணக்கான டன்னளவில் உணவுப் பொருளை நாசம் செய்யச் சர்க்கார் இடங்கொடுக்கும்போது, 35 லட்சம் மக்கள் வங்காளத்தில் இறக்க நேரிட்டும் அந்நாட்டுச் சர்க்கார் மக்களின் தேவையைக் கவனிக்கத் தவறியபோது, இந்த நிலைமையைப் பத்திரிகாசிரியர்கள் எடுத்துக் காட்டுவது பீதி தருவது என்று கூற முடியாது. உண்மையான நிலைமையை ஜனங்கள் அறிந்தால்தான் அவர்கள் எச்சரிக்கையோ டிருக்க முடியும். உணவைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அவர்களை வேண்டும்போது, காரணம் சொல்ல வேண்டாமா? காரணம் பயங்கரமா யிருக்கிறதென்றால்,

சொல்லாது நிறுத்த முடியுமா? சொல்லித்தான் ஆகவேண்டும். சர்க்கார் முயற்சிகளிலுள்ள பெருங் குறைகளை எடுத்துக் காட்டுவது பீதியூட்டுவ தாகாது. 'சர்க்கார் முயற்சிகளால் பஞ்சம் நீங்கி விடாது, பொது மக்களே தங்களாலான எல்லாக் காரியத்தையும் செய்ய வேண்டும்' என்று காட்டுவதுதான் முக்கிய நோக்கம். உண்மையைக் கூறுவது சர்க்காரைக் கூறை கூறுவதாகாது. உண்மையாகக் குறையிருந்து, அதைச் சுட்டிக் காட்டுவதைக் கண்டு அதிகாரிகள் பீதியடைந்து பயனில்லை.

பிப்ரவரி மாதம் நடந்த பத்திரிகாசிரியர் மகாநாட்டில் சர். அக்பர் ஹைதரி, 'நெருக்கடியைச் சமாளிக்கச் சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையைத் தாக்குவது கூடாது' என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டார். ஆசிரியர்கள் ஏதேனும் சொல்லி விட்டாலே 'தாக்கி விட்டார்கள்' என்று அதிகாரிகள் எண்ணி வெகுள்வது சரியாகாது. நாட்டின் நன்மை, மக்களின் நன்மையே பத்திரிகைகளின் முதல் நோக்கம்; அதிகாரிகளின் நன்மையன்று. அதிகாரிகள் சர்வஞ்ஞர்கள் என்று யாரும் சொல்லமாட்டார்கள். அதிகாரி யருகே பாமர மக்களை நெருங்க விடுவதில்லை. அவர்கள் செய்யும் பிழைகளை. அப்பிழைகளால் இன்னலுறும் சாமானிய மக்கள் எடுத்துரைக்கவே வழியில்லை. பின் எப்படித்தான் அதிகாரிகள் திரும்புவார்கள்? பத்திரிகையே இதற்கேற்ற கருவி. 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' என்ற திருக்குறள் இங்குச் சிந்திக்கத் தகுந்தது. எனவே, அதிகாரிகள் பத்திரிகை சுட்டும் குறைகளைத் 'தாக்குதல்' ஆக எண்ணுமல், தங்களைத் திருத்துவதற்கான ஆலோசனை என்று எண்ணி நடப்பார்களானல் மிக்க பயன் விளையும்.

12

பிரசாரச் செலவு

உணவுப் பிரசினையைச் சமாளிக்கச் சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில், புதிய இலாக்காக்களை ஏற்படுத்துவதும், ஏராளமான பெரிய உத்தியோகஸ்தர்களையும் சின்ன உத்தியோகஸ்தர்களையும் நியமிப்பதுமே முக்கிய நடவடிக்கைகளாயிருக்கின்றன. எத்தனை கமிஷனர்கள், டைரக்டர்கள், காரியதரிசிகள், ஸப்ளை ஆபிஸர்கள், டெபுடி கமிஷனர்கள்—இவர்களின் தொகையையும், அடிக்கடி இவர்கள் நடத்தும் மகாநாடுகளையும் எண்ணும்போதே ஏழை விவசாயி திகிலடைகிருன். "நமக்கு ஏதேனும் புது வரி வரப்போகி

றதோ' என்று அவன் அஞ்சுவது நியாயமே. இந்த அதிகாரிகளுக் குத் தரும் சம்பளத்தையும் வர்த்தனைகளையும் நமக்கு வரி வஜா வாகப் பங்கிட்டுக் கொடுத்து ஊக்கமளித்தால், நாம் இப்போதைப் போல் இரண்டு மடங்கு உணவு உற்பத்தி செய்யலாமே என்று அவன் கருதுவது தப்பென்று கூற முடியுமா ?

சென்னை மாகாணத்தில் உணவுப் பஞ்ச நிவர்த்திக்காக ஜில்லாத் தோறும் புதிய பிரசார அதிகாரிகளை ஏற்படுத்தி, 23 பிரசார மோட்டார்களையும் வாங்கிக் கொடுத்து, சர்க்கார் கலப்பு உணவு பற்றிப் பிரசாரம் செய்விக்கப் போகிறார்களாம். ஏழை மக்களுக்கு உண்மையில் அரிசியே தேவையில்லை, கம்பும் கேழ்வரகும் சோள மும் தின்றே ஜீவிக்கத் தயாரா யிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சாகுபடி வரிக்குக் கட்டவில்லையாதலால், அவர்கள் நெல் சாகுபடி பண்ணி, அரிசியையும் சேர்த்து அரையுணவாகக் கொள்ளவேண்டி யிருக்கிறது. இந்த நிலைமையில், 'கலப்புணவுப் பிரசாரத்துக்காகச் சர்க்கார் செலவு செய்ய எண்ணும் தொகையை ஏழைகளுக்கு உழவு மாடு வாங்கித் தரவும், புதிதாகப் புன்செய்ப் பயிர் சாகுபடி செய் வோருக்குக் குறிப்பிட்ட காலம் வரையில் - ஐந்து அல்லது பத்து வருஷத்துக்கு—வரியே இல்லை என்று கூறி வரி வஜாச் செய்யவும் உபயோகிப்பாரானால், நாம் இப்போதைவிடப் பல மடங்கு கடலை யும் கம்பும் கேழ்வரகும் பயிர் செய்வோமே !' என்று விவசாயி கருதுவது தப்பென்று கூற முடியுமா ?

உணவுப் பஞ்ச நிவர்த்தித் திட்டத்தில், குழந்தைகளுக்காகப் பால் பவுடர் சீமையிலிருந்து வரவழைத்துத் தருவது ஒரு முக்கிய அம்சம். இந்தப் பஞ்ச மூலமாகவும்கூட, பிரிட்டிஷ் வியாபாரி கள் கொழுக்கவே நம் சர்க்கார் வழி தேடுகிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம். ஆனால், இந்தப் பிரசினையில் அரசியலைக் கலக்க வேண்டாமென்று அவர்களே வேண்டிக் கொள்கிறார்கள். ஏழை மக்களில் எத்தனைப் பேர் புட்டிப்பால் வாங்கிக் குழந்தைக்கு ஊட்டமுடியும் ? அநியாயமாக, பசுவென்றும் கன்றென்றும் பாரா கல் அடித்துத் தின்றார்களே, அந்தப் பெருங் கொலையைக் கொஞ்சம் குறைத்திருந்தால், இந்தப் பஞ்சம் வந்திராதே' என்று அந்த ஏழை விவசாயி கருதுவது தப்பென்று கூறமுடியுமா ? 'இப்படி அந்நிய நாட்டுப் பால் பவுடர் வரவழைப்பதற்குப் பதிலாக, ஏழை மக்கள் கறவைப் பசுவோ எருமையோ சொந்த உபயோகத்துக்கு வாங்கிக் கொள்ளச் சர்க்கார் பண உதவிசெய்வது எவ்வளவோ பயனுடையதா யிருக்குமே' என்று ஏழை விவசாயி கூறுவது தப்பென்று சொல்ல முடியுமா ?

13

வரி வஜா

நிலத்தில் சாகுபடி நடந்தாலும் நடக்காவிட்டாலும், பயிர் விளைந்தாலும் விளையாவிட்டாலும், வரி வசூல் செய்வது இன்று வழக்கமாயிருக்கிறது. மழைக் குறைவாலோ, வெள்ளத்தாலோ, பயிரில் நோய் விழுவதாலோ, விளைவு குறைந்து போய்விட்டது என்றால் சர்க்கார் வரி வஜா கிடைக்குமென்று நிச்சயமாய் நம்புவதற்கில்லை. விவசாயியானவர் சாகுபடியிலிருந்து தமக்கு எல்லாவித லாபமும்—அல்லது பயனும் கிடைக்காத போதிலுங்கூட, வரி கட்டவேண்டியவராயிருக்கிறார். கையிலிருந்த விதையும் கூலி நெல்லும் நஷ்டம், கிடைக்கவேண்டிய மாசூலும் நஷ்டம், இவற்றுக்கு மேலாக, கையிலிருந்து சர்க்கார் கிஸ்தியும் கட்டவேண்டியிருக்கிறது.

தப்பித் தவறி வரி வஜா கிடைப்பதாயிருந்தாலும்கூட, விளைவு நஷ்டத்துக்கும் வஜாவுக்கும் சம்பந்தமேயிருப்பதில்லை. உதாரணமாக, அறவே விளைவு இல்லாதபோதிலுங்கூட, சர்க்கார் ஒரு போதும் முழு வரி வஜாச் செய்தது கிடையாது. பாதிவஜா உண்டா? அதுவும் இல்லை. அதிகம் போனால் எட்டிலொரு பங்கு வரி வஜா கிடைக்கும். அதுவும், அடியோடு விளைவே இல்லாதிருந்து வரி முழுமையும் செலுத்தியிருந்தால்தான். விவசாயிகடன் வாங்கியாவது வரியைக் கட்டிவிட வேண்டும். அநேகந் தடவை மனுப்போட்டு, வந்து பார்வையிடும் அதிகாரிகளுக்கும் சப்ளை யெல்லாம் செய்தான பிறகு, மறு வருஷம் அல்லது அதற்குப் பின் ஏதேனும் வஜா ஏற்படக் கூடும்.

விவசாயி மனமொடிந்து போவதற்கு இந்த நிலைமையே முக்கிய காரணம். நம்முடைய நிலைமைக்கு விமோசனமே இல்லை, இருக்கவும் வழியில்லை என்ற பெருத்த சோர்வு அவரிடம் நிரந்தரமாய்க் குடிகொண்டிருக்கிறது. இந்த மனப்பான்மை உள்ளவர்கள் எவ்வளவு தூரம் உணவு உற்பத்திக்கு உதவுவார்கள்? எனவே, இந்த மனப்பான்மையைப் போக்குவதுதான், பொறுப்புள்ள எந்த அரசாங்கத்தாருக்கும் முதற் கடமையாகும். பலமுறை ஏற்பட்ட ஏமாற்றத்தின் பயனாகவே விவசாயிக்கு இந்த மனப்பான்மை வந்திருக்கிறது. இதற்கு முழுப்பொறுப்பும் அரசாங்கத்துக்குண்டேயொழிய, விவசாயிக்கு இல்லை.

வேறு சில வரிகள் விஷயத்தில் அரசாங்கத்தார் எப்படி நடந்து கொள்கிறார்கள்? அமித லாபவரி இந்த யுத்த காலத்தில் வந்தது.

கொள்ளை கொள்ளையாக அமித லாப மடிப்பவர்களை மட்டுமே இது பாதிக்கிறது. பண மூட்டைகளாலேயே அரசாங்கம் நடக்கிறது. ஆதலால், பணமூட்டைகளைப் பாதிக்கும் இந்த வரியை நீக்கும் முயற்சிகளை அரசாங்கமே விரைவில் மேற்கொண்டால் வியப்படைவதற்கில்லை.

அமித லாபக் கொள்ளையை நிறுத்த அவர்களுக்கு மனமில்லை. ஆனால் விவசாயியின் துயரத்தைப் போக்கவும் அவர்களுக்கு மனமில்லை. *அமித லாப வரி விரைவில் எடுபடும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் விவசாயிக்கு என்ன உதவி செய்யப் போகிறார்கள்? மேலும் வரி போடாமல் இருப்பதே பெரிய உபகாரம் என்று அவர்கள் சொல்லவும் கூடும். யுத்த கால வியாபாரங்கள் பெருங் கொள்ளை என்ற நினைவே அமித லாப வரிக்குக் காரணம். இந்தக் கொள்ளை லாப வரியை எடுத்துவிட உத்தேசிக்கிற அரசாங்கத்தாரே, கால நஷ்டம் ஏற்பட்டுள்ள சாகுபடி விஷயமாக வரி வஜாச் செய்ய நாள் நட்சத்திரம் பார்க்கிறார்கள்! விவசாயிக்கு இது என்ன உற்சாக மூட்ட முடியும்?

14

நெல்விலையை உயர்த்துவது

விவசாய மகாநாடுகளிலும் கிராமாந்தரக் கூட்டங்களிலும் அடிக்கடி பேசப்படுகிற ஒரு விஷயம், நெல் விலையை உயர்த்துவது என்பது, பத்திரிகைகளும் இதைப் பற்றி அடிக்கடி எழுதுகின்றன; செய்திகள் பிரசுரிக்கின்றன. உதாரணத்துக்குப் பின்வரும் செய்தியைக் குறிப்பிடலாம்.

" திருச்சி ஜில்லா விவசாயிகள் மகாநாடு

திருச்சி, பிப். 12.

பிப். 10உ திருச்சி ஜில்லா 16-வது அரசியல் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ எல். என். பரமசிவம் பிள்ளை தலைமை வகித்தார். தலைவர் பேசுகையில், இந்த வருஷம் விளைச்சல் குறைந்து விட்டதாகவும், ஆகையால் தானியங்களின் விலையை உயர்த்தும்படி சர்க்காரைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் கூறினர்."

இதற்கு ஒரு வாரம் கழித்து, சர்க்காரின் சிவில் சப்ளை கமிஷனர் டிக்ஸன் என்பவர் திரிசிராப்பள்ளிக்குச் சென்றார். தஞ்சை,

* இப்போது அமித லாப வரி எடுபட்டுவிட்டது.

திரிசிராப்பள்ளி, மதுரை, சேலம் ஜில்லாக் கலெக்டர்களையும் ரெவினியு அதிகாரிகளையும் சேர்த்து ஒரு மகாநாடு கூட்டினர். அந்த மகாநாட்டில் அவர் வீராவேசமாக ஒரு பெரிய விஷயத்தைத் தெளிவாக அறிவித்து விட்டார்; அதாவது:

> "எக்காரணத்தை முன்னிட்டும் நெல் விலை உயர்த்தப்பட மாட்டாதென்பதைத் தெளிவாக அறிவித்துவிடும்படி அவர் கலெக்டர்களைக் கேட்டுக்கொண்டார்."

விவசாயிகள் வேண்டுகோளுக்கு இது நேர்முகமான பதிலாகி விட்டது.

இந்த வேண்டுகோள் அல்லது முறையீட்டையும் அதற்கு அதிகாரி தந்த வீரமான பதிலையும் சற்று ஆராய்வது அவசியம். முதலாவதாக ஓர் உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும். நம் நாட்டில் விவசாயம் என்பது என்றுமே லாபகரமான தொழிலாக இருந்ததில்லை. இது எல்லோரும் நன்ருய் அறிந்த உண்மை. சாதாரணமாய்ச் சர்க்கார் வட்டிக் கடன் பத்திரங்களில் பணத்தைப் போட்டு வைத்தாலுங்கூட, குறைந்தது நாலு வட்டி கிடைக்கும் என்பது நமக்குத் தெரியும். இந்த வட்டி கூட—நூற்றுக்கு வருஷமொன்றுக்கு நாலு வட்டி கூட—இன்றைய அரசியல் நிலைமையிலும், பயிர்த்தொழில் நடத்திவரும் நிலைமையிலும் விவசாயிக்குக் கிடைக்காது. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குத் தானும் மிஞ்சாது' என்பது பழமொழி; இது அப்படியே இன்றுள்ள நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. இதில் சிறிதும் மிகையே இல்லை. நிலத்தில் போடுகிற பணத்தை ஒரு பாங்கிலாவது சர்க்கார் கடன் பத்திரத்திலாவது வட்டிக்குப் போட்டு, வரும் வட்டிப் பணத்தை வைத்துக்கொண்டு ஒருவர் காலட்சேபம் செய்வதாயிருந்தால், இன்று ஒருவர் 'ராஜா மாதிரி' வாழலாம். பயிர்த்தொழில் செய்து வாழும் வாழ்க்கை, இன்று அவ்வளவுக்குக் கீழாகப் போய் விட்டது.

அப்படியானுல், கோடிக்கணக்கான மக்கள் பயிர்த்தொழில் செய்கிருர்களே, அவர்களெல்லோரும் தெரியாதவர்களா என்ற கேள்வி எழுகிறது. ஆம், அவர்கள் தெரியாதவர்களே, இதில் சந்தேகமேயில்லை. முன்ஞேர் சென்ற நெறியைப் பின்பற்றிச் செல்லும் பரம்பரையுணர்ச்சியும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்' என்பது போன்ற கருத்துக்கள் நம் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஊறிப் போய்விட்ட காரணத்தால், பிறரொருவரிடம் சென்று கைகட்டி வாழ்வதிலும் பார்க்க இது எவ்வளவோ சிறப்புடையது என்ற

உணர்ச்சியும், மற்றெல்லாத் தொழில்களையும்விட இது தீமை குறைவானது, அதர்மத்துக்கிட மில்லாதது, உலகத்துக் கெல்லாம் உணவு தருதலாகிய சிறந்த தருமமுடையது என்ற எண்ணமுமே நம் நாட்டு விவசாயிகளை, இந்தப் பிரிட்டிஷ் ஆட்சியிலுங்கூட, பயிர்த் தொழிலைக் கைவிடாதபடி காத்துவந் திருக்கின்றன; 'ஓதுவா ரெல்லாம் உழுவான் தலைக்கடையில்' என்பது போன்ற பழமொழி கள் இவர்களுக்கு அளவற்ற திருப்தியும் அளித்துள்ளன என்பது உறுதி.

இந்த நிலையில் விவசாயிகள் இரண்டொருவர், 'இப்போ திருக்கும் நெல் விலை எங்களுக்குக் கட்டி வரவில்லை. கொஞ்சம் விலையை உயர்த்துங்கள்' என்று வேண்டினால், 'கண்டிப்பாக முடி யாது' என்று அதிக வீரமும் காரமும் நிறைந்த பதில் வருகிறது. அதிகார வர்க்கம் மட்டுந்தான் இப்படி வீரமும் காரமும் காட்டுகிற தென்ப தில்லை, சாமானிய நகர மக்களும் கூடிக் காரமாய் இதை ஆட்சேபிக்கிறார்கள். பாவம் விவசாயி என்ன செய்வான்!

காவேரி டெல்டா (தஞ்சாவூர் ஜில்லா) மிராசுதார்களின் குறை என்றாலே, அரசாங்கத்தாரும், விஷய மறிந்தவர்களும், மனத்துக்குள் சிரித்துக் கொள்வது வழக்கமா யிருந்து வருகிறது. இதற்குக் கார ணமும் இல்லாம லில்லை. இந்த ஜில்லா, ஏராளமான நெல் விளைந்து ஏற்றுமதியாகிற பிரதேசம். 'வெள்ளி விதைக்கப் பொன்னே விளையும்' என்று சொல்லுகிற தேசம். இங்கு விவசாயி களுக்குக் குறையுண்டு என்றால், சிரிப்புக்கு இடமா யிருப்பது உண்மை.

இதைப் பற்றி முன்னமே ஒரு சமயம், ஒரு பத்திரிகையில் (மெயில் என்று ஞாபகம்) ஒரு தலையங்கம் வெளிவந்திருந்தது. 'ஐயா, தஞ்சை ஜில்லாவாசியே! பொன் கொழிக்கிற பூமியையுடைய உனக்கும் குறையுண்டு என்று நாங்கள் எப்படி நம்புவோம்? நீ எவ்வளவுதான் சொன்னாலும், நாங்கள் நம்பமாட்டோம். உன் னுடைய ஆடம்பரத்தில் ஏதேனும் குறைத்துக்கொண்டாயா? தஞ் சாவூர் ஸ்டேஷன் வழியாக யாராவது கலெக்டரோ, வேறு சர்க்கார் காரியதரிசியோ, கவர்னரோ போனால், எவ்வளவு அமோகமான வர வேற்புக் கிடைக்கிறது! எத்தனை ஜரிகை மாலை! ரெயில்வே ஸ்டே ஷன் மேடை முழுதும் ரோஜாப் பூவாலேயே பந்தல் போட்டுவிடுகி றாயே நீ! அதிகாரிக்கு வந்து விழுகிற மாலைகளையும் உபசாரப் பத் திரங்களையும் கொண்டு செல்வதென்றால், அதற்குத் தனி ரெயில் அல்லவா வேண்டியிருக்கும் போலிருக்கிறது! எத்தனை வெள்ளிப் பேழைகள்! இவற்றை எல்லாம் பார்க்கும்போது, உன் ஜில்லாவில்

சுபிட்சமானது பெருக்கெடுத்து வாய்க்காலில் ஓடுகிறது, காற்றில் மிதக்கிறது என்றல்லவா எண்ணத் தோன்றுகிறது. ஆதலால், என் குறை யென்று நீ சொல்ல வந்தால் இதைப் பொய்யென்று தான் நாங்கள் நினைப்போம். உன் கூக்குர லெல்லாம் உண்மை யல்லாத கூக்குரல். அதை நாங்கள் நம்பத் தயாரா யில்லை' என்று பொருள்பட்டிருந்தது அக்கட்டுரை. இதில் உண்மையில் லாப மில்லை. தஞ்சை ஜில்லா வாசிகள் நடத்துகின்ற அமைதியான, அடங்கிய, கிளர்ச்சியற்ற வாழ்க்கை, அதிகாரிகளுக்குச் செய்யும் உபசாரம், அதிகாரிகளிடம் அவர்களுக்குள்ள பயம், என்ன செய் தாலும் பொறுக்கும் தன்மை, யுத்தநிதிக்கு வேறு முணுமுணுக்காமல் கொடுக்கிற பெருங்கொடைகள் என்பவற்றை எண்ணிப் பார்க்கும் போது, அந்த ஜில்லா மக்களுக்குக் குறையிருக்கும் என்று நினைக் கவே முடியாது. ஆனால் உள்ள நிலை அப்படியில்லை. எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். சர்க்காருக்கு ஏராளமான வருவாய் தரும் இந்த ஜில்லாதான் இந்த மாகாணத்துக்குள்ளேயே மிகவும் குறைவான, மோசமான சாலை வசதி யுடையது. விவசாயிகள் தங்கள் கிராமத்திலிருந்து இப்பால் வரவேண்டுமென்றால் சரியான சாலை வசதி இல்லவே இல்லை. இப்படி யெல்லாம் இருந்துங்கூட, மக்கள் இங்குப் பொதுவாக முணுமுணுப்பின்றி வாயில்லாப் பூச்சி போல இருக்கிறார்கள். காரணம் நிலம் ஏதோ சாப்பாட்டுக்குக் கொடுத்து விடுகிறது என்ற ஒன்றுதான். ஒன்றுமே இல்லாதவன், எதற்கும் துணிந்து கிளர்ச்சி செய்ய முற்படுவான். ஆனால் சொற் பம் வைத்திருப்பவன், இதுவும் போய்விடுமே என்று அஞ்சிப் பின் தங்கியே இருப்பான். இதுதான், தஞ்சை விவசாயிகள் என்ன வந்தாலும் பொறுத்துக்கொண் டிருப்பதன் ரகசியமாகும்.

எப்படியோ இன்று தன் நெல்லுக்கு அதிக விலை வேண்டு மென்று கேட்கிறான் என்றால், அதிக விலை வாங்கி, மாடி வீடு கட்டு வதற்கல்ல. 'பிளாக் மார்க்கெட்' வியாபாரம் நடத்துவதற்கல்ல. கிண்டி குதிரைப் பந்தயத்தில் ஆடுவதற்கு அல்ல. மோட்டாரிலும் டிராமிலும் சவாரி செய்வதற்காக அல்ல. மின்சார விளக்குப் போட்டுக்கொண்டு அமித லாப வரியை எப்படி ஏமாற்றலாம் என்று பார்ப்பதற்காக அல்ல. மின்சார விசிறியின் கீழ் உட்கார்ந்து தூங்கவும், சீட்டாடவும், 'கேரம்' ஆடவும் அல்ல. விலைகளெல் லாம் ஏராளமாக உயர்ந்துவிட்ட இந்தக் காலத்தில், அவனால் சாகு படியும் செய்துகொண்டு குடும்பம் நடத்துவது சாத்தியமாயிருக்கும் பொருட்டுத்தான் அவன் கூடக் கொஞ்சம் பணம் கொடுங்கள் என்று கெஞ்சுகிறான். மற்றெல்லாத் தேசங்களிலும், விவசாயியின்

குறையைத்தான் முதலாவதாகக் கவனிப்பார்கள்; இங்கோ, ஏனென்று கேட்பாரே இல்லை; அரசாங்கமும் கேட்பதில்லை, தெரிந்த மக்களும் கேட்பதில்லை. இதைவிட விபரீதம் என்ன உண்டு?

நெல் விலையை உயர்த்துவதற்கு நியாயமான ஆட்சேபம் ஒன்றே ஒன்று உண்டு. தமிழ்நாட்டு ஏழை மக்கள் அனைவருக்கும் அரிசி யுணவுதான் முதன்மையான ஆகாரம். ஆகையால், ஏற்கெனவே அதிகக் கஷ்டப்படுகிற ஏழை மக்கள், நெல் விலையை உயர்த்தி விட்டால் இன்னும் அதிகக் கஷ்டப்படுவார்கள். ஏழை மக்கள் இயன்ற மட்டில் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்தும்படி செய்வதே அரசின் நோக்கமாகும். ஆதலால், நெல் விலையை உயர்த்தி விட்டால், ஏழைகள் துன்பமும் இன்னும் தாங்கமுடியாததாகி விடும்; எனவே இது விரும்பத் தக்க தாகாது.

இந்த நியாயம் மிகவும் பொருத்தமுடையது. அரச தருமத்துக்கும் ஏற்றது. ஆதலால், இதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏற்றுக் கொண்டால், காவேரி டெல்டா விவசாயிகளும் மற்ற விவசாயிகளும் கேட்கிறபடி நெல் விலையை இன்னும் அதிகசாய் உயர்த்துவது அநியாயமென்றே சொல்லவேண்டி நேர்கிறது. இதை அநியாயமென்று ஒப்புக்கொண்ட பின், மேற் கூறியபடி சர்க்கார் அதிகாரி நெல் விலையை உயர்த்துவது கண்டிப்பாய் முடியாதென்று கூறியது தவறென்று கருத இடமில்லை.

15

சாகுபடிச் செலவின் உயர்வு

ஆனால், இதைப் போலவே நியாயமான அம்சம் மற்றொன்று உண்டு. சாதாரணக் குடிகளுக்கு வாழ்க்கை நடத்தப் பொதுவாய்த் தேவையா யிருக்கக் கூடிய பொருள்கள் யாவும் நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, பல பொருள்களின் விலைக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், விறகு முதலியவை நகர்ப் புறங்களில் விலைக் கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இது நல்லதுதான். எங்கேயோ எந்த விவசாயியோ பயிரிட்டுத்தந்த நெல்லுக்கும் அரிசிக்கும் சர்க்கார் விலை இன்னதென்று நிர்ணயித்து விட்டார்கள்; மிக்க சந்தோஷம். ஊரான் ஊரான் தோட்டத்திலே, யாரோ ஒருத்தன் போட்ட வெள்ளரிக்காயைக் 'காசுக்கு ரெண்டு' என்று விற்கச் சொல்லிக் கட்டளையிட்ட வெள்ளைக்காரன் செயல்போல இச்செயல் இருக்கிறதே தவிர, வேறொன்று மில்லை.

சாகுபடி செய்து களத்தில் கொண்டு வந்து குவித்த நெல்லுக்குத்தான் இவர்கள் விலைக் கட்டுப்பாடு செய்தார்களே யொழிய, அச்சாகுபடி செய்வதற்கு விவசாயிக்கு என்னென்ன உபகரணங்கள் செய்யவேண்டி யிருந்தனவோ அவற்றுக்கெல்லாம் எவ்விதக் கட்டுப்பாடும் இல்லவே இல்லை. இது மட்டுமா? இவை அவனுக்குக் கிடைக்கு மென்ற நிச்சயமும் இல்லவே இல்லை. மண்வெட்டி, கொழுவுக்கும் வண்டிக்கட்டு முதலியவற்றுக்கும் வேண்டிய இரும்பு, உழவு மாடு, மாட்டின் தீனியாகிய பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு ஆகிய இவையும் இவை போன்ற பிறவும் விவசாயிக்குக் கிடைத்தனவா? என்ன விலையில் கிடைத்தன? அவன் கொடுத்த விலை நியாயந்தானா? என்றெல்லாம் யார் கவனித்தார்கள்? ஞாபகத்திலிருந்து கொடுக்கிற பின் வரும் புள்ளி விவரங்களைச் சிறிது கவனித்தால் விலைவாசிகளின் ஏற்றம், விவசாயியை எப்படிப் பாதித்திருக்கும் என்பது சற்றே தெரியும்.

பெயர்	1939ல் விலை ரூ.			1944ல் விலை ரூ.		
இரும்பு—சேர்	0	3	0	0	12	0
மண்வெட்டி ஒன்று (குதிரை மார்க்கு)	0	14	0	4	12	0
நாட்டுக் கொட்டு	0	8	0	3	0	0
கோணிப்பை	0	5	0	1	0	0
உழவு மாடு ஒரு ஜோடி	50	0	0	200	0	0
வண்டி மாடு ஒரு ஜோடி	150	0	0	600 முதல் 1000 வரை		
பசுமாடு (நாட்டு பசு)	35	0	0	120	0	0
எருமை	35	0	0	100	0	0
எருமைக்கிடாய் (உழவுக்கு)	8	0	0	50	0	0
பருத்தி கொட்டை 1 மூட்டை	4	0	0	16	0	0
பிண்ணாக்கு மூட்டை	4	0	0	18	0	0

இந்தப் புள்ளி விவரங்களைப் பார்ப்பவர்கள் நம்பாமல் போகலாம்; ஆனால் விவசாயிகளா யிருப்போர் இந்தப் பரிதாபத்தை அனுபவித்தார்கள். இன்றும் அனுபவித்து வருகிறார்கள்.

ஆறுமாத காலம் மிகவும் கஷ்டப்பட்டு வயலுக்கு எருவிட்டு உழுது நீர்பாய்ச்சி விதை தெளித்து நாற்று நட்டுக் களையெடுத்துப் பக்குவம் பார்த்துக் கதிரை அறுவடை செய்து விவசாயி வீட்டில் கொண்டு வந்து சேர்த்த நெல்லுக்கு, விலை இன்னதுதான், இதற்கு

மேல் விலை சொல்லக்கூடாது என்று 'கண்ட்ரோல்' செய்து விட்டார்கள். நெல்லை வாங்கி உண்ணும் மக்கள்மீது அரசாங்கத்தார் கொண்ட பரம கருணை, அந்நெல்லைப் பயிரிட்டுத் தரும் விவசாயினிடத்தில் கடுகளவும் இருக்கக் காணவில்லை. இருந்தால், விவசாயி சாகுபடி செய்வதற் கவசியமான மேற்கூறிய உபகரணங்கள் சம்பந்தமாய் ஏதேனும் 'கண்ட்ரோல்' செய்திருப்பார்க ளல்லவா? ஆனால், அப்படி யொன்றும் கட்டுப்பாடு செய்யவே யில்லை.

உதாரணமாக மேலே காட்டியபடி முன்னே பதினன்கணுவுக்குக் கிடைத்துவந்த சாதாரண மண்வெட்டி, சென்ற சில வருஷங்களில் ஐந்து ரூபாய் வரையில் விற்றது. அதுவும் திருட்டுத்தனமாய் விற்பனைக்குக் கிடைக்குமேயொழிய, எளிதில் கிடைப்பதில்லை. உயர்தரமான மண்வெட்டி யொன்று சாகுபடி வேலையில் இரண்டு வருஷம் வேலை செய்வது அருமை. விரைவில் தேய்ந்து போய், இரண்டு வருஷம் ஆனபின் தூக்கி எறியவேண்டிய நிலைமைக்கு வந்துவிடும். விவசாயி, பணத்தைச் செலவுசெய்து கொண்டு, பக்கத்திலுள்ள பட்டணங்களுக்குச் சென்று, மண்வெட்டி தேடிக் கொண்டிருப்பானு அல்லது சாகுபடி வேலையைக் காலாகாலத்தில் கவனிப்பானு? 'பாலுக்குச் சர்க்கரை யில்லை யென்பார்க்கும், பருக்கையற்ற கூழுக்கு உப்பில்லை யென்பார்க்கும் விசனம் ஒன்றே' என்று பாட்டில் சொல்லியதுபோல, பட்டணப் பிரதேசங்களில் காப்பிக்குச் சர்க்கரை இல்லையென்று கவலைப்பட்டவர்களுக் கெல்லாம் பங்கீட்டுச் சீட்டு வழங்கி, மாதந்தோறும் குறைவில்லாமல் சர்க்கரை பெற்றுக்கொள்ளும்படி நமது காருண்ய சர்க்கார் கடைதோறும் திட்டம் செய்திருந்தார்கள். ஆனால், அந்தச் சர்க்கரை வினியோகத்தைவிட ஏழை விவசாயிக்கு மண்வெட்டி தருவது முக்கியமானது என்று அவர்களுடைய 'மான்யுவல்'களிலும் 'கோடு'களிலும் சொல்லியிருக்கவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்!

விவசாயப் பண்ணையில் மண்வெட்டி கிடைக்குமென்று சில சமயம் பிரசாரம் செய்தார்கள். பக்கத்திலிருந்த சர்க்கார் விவசாயப் பண்ணையில் போய் விசாரித்தால், 'கண்ட்ரோல் கொட்டு' சுமார் இரண்டு ரூபாய்க்குக் கிடைக்குமென்று தெரிவித்தார்கள். இது மட்டக் கொட்டு, முந்தியெல்லாம் எட்டணு விற்ற கொட்டுக்குச் சமானமானது; சரி போகட்டும், இதுதான் கிடைக்கிறதா என்று பார்த்தால், இல்லை! விலையை மாத்திரமே சர்க்கார் நிர்ணயித்திருந்தார்கள். பண்ணைக்காரர்கள் டாடா கம்பெனிக்கு எழுதியிருந்தார்களாம். எப்போது வரும், அல்லது வருமா வராதா என்ற விஷயம்

அவர்களுக்குத் தெரியாது. இந்த நிலைமையில் விவசாயி என்னதான் செய்வான்? கையால் மண்ணை அள்ளிப்போடுவானா? அல்லது அடுப்பிலே சோற்றைத் துழாவும் கரண்டியால் மண்ணை வெட்டுவானா என்பதுதான் தெரியவில்லை. ஆனால், வாயில்லாப் பூச்சிகளான விவசாயிகள் எப்படியோ பயிர்த் தொழிலைச் செய்துதான் வந்தார்கள்!

மண்வெட்டிக்குச் சொன்னது மற்றெல்லாவற்றுக்கும் பொருந்தும். மாட்டுத் தீனியான பிண்ணாக்குக்கும் பருத்திக்கொட்டைக்கும் இதுவே நிலைமை. கிடைப்பதில்லை; கிடைத்தாலும் ஒன்றுக்கு ஆறு பங்கு விலை.

உழவு மாட்டின் விலையோ, பயங்கரமானது. ஆறு ரூபாய் முதல் எட்டுப் பத்து ரூபாய்வரையில் கொடுத்து வாங்கக்கூடிய உழவுக்குரிய ஓர் எருமைக் கிடாயின் விலை முப்பத்தைந்து ரூபாய் முதல் எழுபது ரூபாய்வரையில் இருந்தது. சென்ற சில வருஷங்களாக, அமெரிக்காமுதல் ஆஸ்திரேலியாவரையிலிருந்துவந்த போர் வீரர்களைச் சோறுபோட்டுக் காப்பாற்றி வளர்த்த புண்ணிய விசேடத்தால், நம் நாட்டிலிருந்த பிராணிகளின் தொகை - மாடு, (எருமை, பசு, காளை), ஆடு, பன்றி முதலியவற்றின் தொகை - ஒன்றுக்குப் பாதியாகக் குறைந்துபோய்விட்டது. மேலும், யாரிட்ட சாபமோ, சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக, மாட்டு நோயும் பெருத்த சேதம் விளைவித்தது. இக்காரணங்களால் மாட்டு விலை யானை விலை யாகிவிட்டது. உழவு வேலைக்கு மாடில்லாமல் என்ன செய்வது? ஐம்பது ரூபாய்க்குக் குறைவாய் வாங்கக்கூடிய மட்டமான உழவுக் கட்டைகளை (மாடுகளை) விவசாயி இருநூறு ரூபாய்க்கு வாங்கவேண்டியிருந்தால், என்ன செய்வார்? மாடு ஓட்டிக்கொடுப்பதற்குச் சர்க்கார் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. நகைநட்டை விற்று, விவசாயியும் மாடு வாங்கி எப்படியோ சாகுபடி செய்துதான் வந்தார்.

நெல் விலை ஏறிவிட்டதே என்று இதற்குச் சமாதானம் சொல்வார்கள். இது வெறும் நொண்டிச் சமாதானம். 1939ல் நெல் விலை கலம் ஒன்று (மாயவரம், சிதம்பரத்தில்) இரண்டு ரூபாய். 1944, 1945இல் கண்ட்ரோல் விலை ரூ. 3-4-0; இதுவே சர்க்கார் தானியக் கொள்முதல் அதிகாரி வாங்கிய விலையாகும். மண்வெட்டி முதலியவை எத்தனை சதவீதம் விலை உயர்ந்துவிட்டன என்பதைக் கீழே காணலாம். இதனோடு, நெல் விலையில் ஏற்பட்ட ஏற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமையைத் தெளிவாக உணரலாம்:

பெயர்	ஏற்றம் இத்தனை சதவீதம் என்பது
இரும்பு	300
மண்வெட்டி —	
குதிரை மார்க்கு	457
நாட்டுக் கொட்டு	500
கோணிப்பை	220
உழவு மாடு	300
வண்டி மாடு	300, 566
பசு மாடு	243
எருமை மாடு	186
எருமைக் கிடாய்	525
பருத்திக் கொட்டை	300
பிண்ணாக்கு	350
நெல்	63

நெல் விலையில் ஏற்றம் 63 சதவீதம் ஏற்பட்டிருக்க, விவசாயியின் சாகுபடிக்குத் தேவையான யாவும், இதைப்போல் குறைந்தது மூன்று பங்குக்கு அதிகமாகவே விலையேறி யிருப்பதை இங்குக் காண்கிறோம். விவசாயியின் நெல்லுக்கு இன்னதுதான் விலையென்று நிர்ணயம் செய்தது, பெருவாரியான ஏழை மக்களின் நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது, சரியல்ல என்று கருதுவதற்கில்லை ; நியாயமென்றே அதைக் கருதுவோம். ஆனால் அதே சமயத்தில், விவசாயியின் சாகுபடிக்கு என்ன தேவை என்று சர்க்கார் கவனிக்காமற்போனதும், அத்தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கத்தோடு எவ்விதக் கட்டுப்பாடும் ஏற்படுத்தாமற்போனதும், பூர்த்தி செய்வதில் அற்ப சிரத்தையும் காட்டாமற்போனதும், பெரிய அநியாயம், அக்கிரமம் என்று நாம் சொல்லலா மல்லவா ?

16

விவசாயக் கருவி வசதி

இதுவரையில் சர்க்கார் இவற்றை யெல்லாம் கவனிக்காமலிருந்தது போகட்டும். இனிமேலாகிலும் கவனித்து ஆவன செய்யவேண்டும். எப்படிச் செய்யலாம், என்ன செய்யலாம் என்பதற்குச் சில வழிகளைக் கீழே குறிப்பிடுவோம்.

சர்க்காரே உயர்தரமான மண்வெட்டியைச் செய்து தாசில்தார் ஆபீஸில் விற்பனைக்கு ஏற்பாடு செய்யலாம். திரிசிராப்பள்ளி

பொன்மலை ரெயில்வே தொழிற்சாலையில், யுத்தகாலத்தில் வெடி குண்டு உறையோ மூடியோ - செய்துகொண்டிருந்தார்கள். இப்போது அத்தொழிற்சாலையில் உறுதியான மண்வெட்டி செய்விக்கலாம். வருஷந்தோறும் குறைந்தது லட்சம் மண்வெட்டிகள் தமிழ் நாட்டு விவசாயிகளுக்குத் தேவையா யிருக்கக்கூடும். இவற்றைத் தயார்செய்து, தாசில்தார் ஆபீஸ்களில் வைத்துவைக்கலாம். அவரவர் பட்டாவைக் கொண்டுவந்து காட்டி மண்வெட்டி பெறலாம் என்று விதி ஏற்படுத்தலாம். ஒரு வேலி நிலமுடையவருக்கு, ஒன்று விட்டொரு வருஷம் இரண்டு மண்வெட்டி தேவையா யிருக்கும்; அதாவது சுமார் மூன்று ஏகரா நிலத்துக்கு, ஒன்றுவிட்டொரு வருஷம் ஒரு மண்வெட்டி, பத்து ஏகராவுக்குட்பட்டவர்களுக்கெல்லாம் இலவசமாகவே மண்வெட்டி கொடுக்கலாம். அதிக நிலமுடையவர்களுக் கெல்லாம், மூன்று ஏகராவுக்கு ஒரு மண்வெட்டி என்ற வீதப்படி, இலவசமாய்க் கொடுக்காமல், நியாயமான அடக்கவிலைக்குக் கொடுக்கலாம்.

ஆனால் ஒன்று: கடையில், திருட்டுக் கடையில்தானுகட்டும், நான்கு ரூபாய்க்குக் கிடைக்கிற சாமானைச் சர்க்காரே செய்துதருவதானல், இப்போது சுமார் பதினறு ரூபாய்க்குச் செய்துதருவது வழக்கமா யிருக்கிறது. இந்த மாமூல், விவசாயிக்கு அற்பமும் பயன்படாது. ரூ. 4-12-0 அல்லது 5-8-0 என்று இன்று கடையில் விற்கிற குதிரை மார்க்கு மண்வெட்டியை ஒத்த உயர்தரமான மண்வெட்டி செய்து அதை ரூ. 1-4-0க்கு அதிகப்படாத விலையில் வினியோகிக்கவேண்டும். ஏழை மக்களுக்கு அவரவர் நிலத்துக்கேற்றபடி இலவசமாய்க் கொடுத்தால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அஸ்தமித்துப்போய்விடுமென்று தோன்றவில்லை.

மற்ற இரும்பு, கோணிப்பை, பிண்ணாக்கு, பருத்திக் கொட்டை முதலியவற்றுக்கும் இதேவிதமாக ஏற்பாடு செய்யலாம். ஏழை மக்களின் வரிப் பணத்தைக் கிராமத்திலிருந்து திரட்டிக்கொண்டு வந்து நகரங்களில் கொட்டிவருகிற சர்க்கார், மேற்கூறியவாறு ஏதேனும் செய்வார்களானல், சிறிது நல்ல பயனாவது ஏற்படும்.

17

உழவு மாட்டுப் பாதுகாப்பு நிதி

ஏழை விவசாயிக்கு, மாடு வாங்குவது என்பது, பெருத்த செலவுக்கிடமான ஒரு காரியம். முப்பத்தைந்து ரூபாய்க்கு உழவு மாடு வாங்குவது முற்காலத்திலேயே கஷ்டமென்றல், இப்போது இரு

நூறு ரூபாய்க்கு வாங்குவது எவ்வளவு பெருங்கஷ்டமென்பதை யூகித்துக்கொள்ளலாம். இது சம்பந்தமாக அரசாங்கத்தார் உதவி செய்வது மிக்க அவசியமாகும். இதற்காக அவர்கள் ஒரு வகையான கால்நடை 'இன்ஷியூரன்ஸ்' முறையை அனுஷ்டிக்கலாம். சொற்ப நிலமே உடைய விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு நல்ல மாதிரியாக இந்த இன்ஷியூரன்ஸ் நடத்த முடியும்.

இரண்டு வேலி நிலம் (அதாவது சுமார் 13 ஏகரா) உடையவர்களுக்கும் இன்னும் குறைவாக உடையவர்களுக்குமே இந்த இன்ஷியூரன்ஸ் உதவி கிடைக்கும். ஒரு வேலி நிலத்துக்கு இரண்டு ஏர் வேண்டும்; அதாவது உழவு மாடுகள் நான்கு. சுமார் ஐந்து வருஷத்துக் கொருமுறை இம்மாடுகளை மாற்றவேண்டி நேரும். இப்போது நூறு ரூபாய்க்கு வாங்கும் ஒரு ஜோடி மாடு, ஐந்து வருஷமானபின், ஐம்பது ரூபாய்தான் பெறுமானதா யிருக்கும். அதாவது சாதாரண உழவு மாடு, வருஷமொன்றுக்கு ஜோடிக்குப் பத்து ரூபாய் வீதம் மதிப்பில் குறைகிறது. இந்தக் குறைவுக்கு ஈடு செய்யும் நோக்கத்துடன், ஒரு நிதியும் இன்ஷியூரன்ஸ் (பாதுகாப்பு) திட்டமும் இருக்குமானல், விவசாயிக்கு மிக்க அனுகூலமா யிருக்கும். ஒரு வேலிக்கு இரண்டு ஜோடி மாடுகள் வேண்டுமென்று சொன்னேம். அதாவது வருஷம், மதிப்பில் குறைவு இருபது ரூபாய். இதில், பத்து ரூபாயை விவசாயிகளிடமே வரிமாதிரி வசூல் செய்யலாம்; வேலிக்குப் பத்து ரூபாய் என்றல், ஏகராவுக்கு வருஷம் ஒன்றரை ரூபாய் அதிகமாகிறது. இப்படி வசூலாகிற ரூபாயைத் தனி நிதியாகத் தாலுக்காவாரியாக வைத்து, அதை நிர்வாகம் செய்ய, அத் தாலூக்காத் தாசில்தாரும் வேறு தனிப்பட்ட விவசாயிகளும் (பிரமுகர்கள் அல்ல) அடங்கிய சபை அல்லது பஞ்சாயத்து ஒன்றை வைத்து வரலாம். விவசாயிக்குத் திடீரென்று மாடு இறந்து போனலும், புதிதாய் மாடு வாங்கவேண்டி யிருந்தாலும், விற்று வாங்குவதில் நஷ்டம் மேற்பட்டாலும், இந்த நிதியிலிருந்து, செலவில் பாகியை உதவவேண்டும். ஒரு தாலூக்கா என்ற சுருங்கிய எல்லைக்குள் நிதி அடங்குவதால், விவசாயிகளா யுள்ள இப்பஞ்சாயத்தார் ஒருவரையொருவர் நன்ருய் அறிய முடியும். குறித்த ஒருவரது தேவை நியாயமானதுதானு என்பது முதலான விஷயங்களை மிகவும் எளிதாக முடிவு செய்யலாம், பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் இதன்மூலம் நிலவ இடமுண்டு. இதில் அதிகாரிகளின் செல்வாக்குக் குறைவாகவே இருக்கவேண்டும். இரண்டு வேலிக்கு மேற்பட்ட நிலமோ சொத்தோ உடையவரைப் பஞ்சாயத்தாராக

வைக்கக்கூடாது. சர்க்காரும், ஆண்டுதோறும் அந்தந்தத் தாலுக்காவில் வசூலாகிற நிலவரியில், ரூபாய்க்குக் காலணு அல்லது அரையணு வீதமாவது இந்த நிதிக்கு நன்கொடையாக அளிக்கவேண்டும்.

இந்நிதியை நிர்வகிப்பதிலும் விநியோகிப்பதிலும் தொடக்கத்தில் எத்தனையோ கஷ்டங்கள், பிழைகள், குற்றங்கள், ஏமாற்றுதல்கள் நிகழ்தல்கூடும். ஆனுல் நாளடைவில் யாவும் சீர்திருந்தி, இது பெரும்பயன் தருவது நிச்சயம். சில சமயம் நிதியின் ஆபீஸ் செலவுக்கே வரும்படி கட்டிவராத முறையில் நிர்வாகம் நடப்பதுண்டு. இந்த நிதியின் விஷயத்தில் அப்படியில்லாமல், நிர்வாகச் செலவே வைத்துக்கொள்ளக் கூடாது. இயன்றவரையில் விவசாயிகளே கலந்துகொண்டு கௌரவ ஊழியர்களாகச் சம்பளமின்றி வேலை பார்க்கவேண்டும்.

நிதிக்கு வரி வசூலிப்பதை எல்லாரிடமுமே வசூலிக்கவேண்டும். ஆனுல், 'பெருநிலக் கிழவர்'கள் இதனுல் உதவி பெறமாட்டார்கள். இரண்டு வேலி நிலத்துக்குக் குறைவாயுடையவர்களே உதவி பெறுவார்கள். பேச்சளவில் இல்லாமல் செயல் முறையில் இந்த நிதி சமதர்மத்தைப் பரவச் செய்வதாகும்.

18

சில்லறை மரவசதி

கருவேல மரத்தில் கலப்பைக்கு 'வாள்கட்டை' போடுவது பற்றிய சம்பவம் ஒன்று முன்னமே பார்த்தோம். இத்தகைய வேலைகள் பற்றி, சர்க்கார் பயிர்த்தொழில் செய்வோருக்கு உதவி செய்வது அவசியம்; இவ்வுதவி செய்வதும் எளிது. கோடரிக் காம்பு, மண்வெட்டிக் காம்பு, கலப்பையில் வாள்கட்டை, ஏர்க்கால், வண்டி அல்லது ஏர்க்காலின் நுகத்தடி முதலான பல சில்லறை வேலைகளுக்கு மரம் வேண்டியிருக்கிறது. காம்புக்கும் வாள்கட்டைக்கும் கருவேலங்கட்டை வேண்டும். ஏர்க்காலுக்கு, பூவரசம்கட்டை உபயோகப்படும். நுகத்தடிக்கு நுணு முதலிய மரங்கள் பயன்படும். இம்மரங்கள், வேறு பலனற்ற அற்ப மரங்கள். இவை சாதாரணமாய் விவசாயிகளின் வீட்டுக் கொல்லையிலேயே இருக்கும். சர்க்கார் புறம்போக்கு, ஆற்றங்கரை முதலியவற்றிலும் இவை அதிகமாய் இருக்கும். விவசாயிக்குத் தேவை இருக்கும்போது, சர்க்கார் இவற்றைக் கொடுத்துதவ ஏற்பாடு செய்யவேண்டும். இன்று எவ்வித ஏற்பாடும் இல்லாமலே, விவசாயிகள், கிராமக் கணக்கப்பிள்ளை வேண்டியவராயுள்ள இடங்களில் இவற்றைத் தாமே வெட்டி

உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்; இதைப் பற்றிக் கேள்வி ஏற்படாது. கணக்கப்பிள்ளை பேராசை பிடித்தவராகவோ, வீண் வம்புக்காரராகவோ உள்ள இடத்தில், ஒருவர் அரையணுக்கூடப் பெறாத ஒரு கட்டை வெட்டியதற்காக ரெவினியூ அதிகாரிகள் ஆறு ரூபாய் அபராதம் போடுவதுகூட உண்டு. இந்த அக்கிரமம் முதலாவதாக நிற்க வேண்டும். எங்கேயோ ஒரு பட்டிக்காட்டில் உள்ள பைசாப் பெறாத புறம்போக்கு மரம், அவ்வூராருக்குச் சொந்தமாயிருக்கவேண்டுமே யொழிய, அதிலிருந்து வரும்படி திரட்டித் தாலுக்காக் கச்சேரிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இருத்தலாகாது. அரையணு ஓரணுப் பெறக்கூடிய மரங்களை, கேளாமலும் பணம் கொடுக்காமலும் குடிகளே வெட்டிக்கொள்ளலாம் என்று விட்டதனால் இந்திய அரசாங்கம் கவிழ்ந்துவிடாது. மரங்களை அனுவசியமாக வெட்டி, விறகுக்காக உபயோகித்து வீண் சேதப்படுத்தாமல் பார்ப்பது ஒன்றுமட்டுமே கிராமத்திலுள்ள குட்டித் தேவதைகளின் பொறுப்பா யிருக்கவேண்டும்; மற்றப்படி, தாங்களும், ரெவினியு இன்ஸ்பெக்டர் முதலாகவுள்ள அதிகாரிகளும் உபயோகித்துக் கொள்வதற்காகக் கிராமங்களில் மரம் பயிராகவில்லை என்பதை அவர்கள் உணரும்படி செய்வது சர்க்காரின் முக்கியக் கடமையாகும்.

19

கிணறு வெட்ட உதவி

சென்னை அரசாங்கத்தாரும், பயிர்த்தொழிலுக்காக, கிணறு வெட்டுவோருக்கு உதவிசெய்யத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. கல உமியில் ஏதோ ஒரு மணி நெல் என்பதுபோல இது நல்ல அம்சந்தான். வட ஆர்க்காடு, சித்தூர், செங்கல்பட்டு ஆகிய ஜில்லாக்களுக்குத்தான் இந்த உதவி என்று பத்திரிகைகளில் அறிக்கை வந்திருக்கிறது. இது போதாது. எந்த ஜில்லாவில் - தஞ்சாவூராய்த்தான் இருக்கட்டும், திருநெல்வேலியாகத்தான் இருக்கட்டும் - பயிர்த்தொழிலை உத்தேசித்து ஒருவர் நன்செய்யிலோ புன்செய்யிலோ கிணறு அல்லது துரவு எடுத்தால், அதற்காகும் செலவில் ஒரு பாதியைச் சர்க்கார் இனாமாகக் கொடுக்கவேண்டும்; கடன் கொடுத்துப் பயனில்லை. கடனை விவசாயி திருப்பியடைக்க முடியாது. தவிர, சர்க்கார் பணமெல்லாம் விவசாயியின் பணந்தானே? எங்கேயோ ஒரு விவசாயிக்கு ஒரு நூறு ரூபாய் தானம் செய்துவிட்டால், சர்க்கார் அப்படியே கவிழ்ந்துபோய் விடாது.

இந்த உதவி கொடுப்பதில் அதிகாரிகளின் தொந்தரவு அளவுக்கு மிஞ்சிப் போய்விடுதல் கூடாது. கிணறு நல்ல கிணறுதானு, தண்ணீர் ஊறுகிறதா, அது பயிர்த்தொழிலுக்குத்தான் பயன்படுகிறதா, விவசாயி என்ன செலவு செய்திருப்பார் - என்பவற்றை மட்டும கவனித்துப் பண உதவி செய்தல் போதுமானது. கட்டுவதற்குரிய திட்டத்தைச் சர்க்காரே தந்து, இப்படிக் கட்டினுல்தான் உதவி செய்வோம் என்றெல்லாம் கட்டாயப்படுத்தினுல் ஒரு காரியமும் நடவாது. அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை மறந்து, நல்ல பயன் விளையவேண்டும் என்ற ஒரு நோக்கமே கொண்டு இவற்றைக் கவனித்தல் வேண்டும்.

20

கைக்குத்தல் அரிசி

உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்கும் பொருட்டு, அரசாங்கத்தாரும், ஸ்தாபனங்களும், தனி மனிதரும் செய்யக்கூடிய முதல்வேலை, மில்லரிசி என்பது இனி இல்லாதபடி செய்வதாகும். அரிசியை மில்லிலரைப்பதால் உண்டாகும் கெடுதி இந்தக் காலத்தில் புத்தகங்கள், பத்திரிகைகள், பிரசாரம் மூலமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

நாம் அனைவரும் சாப்பிடுகிற அரிசியானது, நெல் ரூபத்தில், நான்கு அம்சங்கள் அல்லது பாகங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது, உமி : இந்தப் பகுதி உண்மையாகவே பயனற்றது. இதை நீக்கிவிட வேண்டியதுதான். இதை நீக்கியதனுல் அரிசியின் உணவுச் சத்து எவ்விதத்திலும் குறைந்து போகவில்லை. இரண்டாவது உமியை யொட்டி, அரிசியைச் சூழ்ந்துள்ள மாத்தவிடு ; மூன்ருவது, முளை ; அரிசியின் முளையிலுள்ள மிருதுவான முளைக்கும் பகுதி. நான்காவது, அரிசி. சாதாரணமாய் எல்லோரும் உண்பது, இந்த நான்காவது பகுதியாகிய அரிசிதான். நெல்லில் பெரும்பகுதி அரிசிதான் ; மாத்தவிடும் முளையும் மிக மிக அற்பமான பகுதிகளேயாகும். ஆனுல் அவற்றின் தன்மை யாது என்று அறிதல் நல்லது. முக்கியமான உணவுச் சத்துக்களான புரோட்டீன் சத்து, பாஸ்பரஸ் சத்து, B வைட்டமின் என்பன இவ்விரண்டு பகுதிகளிலும் அடங்கியுள்ளன. வெறும் அரிசியில் இவை இல்லவே இல்லை. அரிசியை மனிதனுக்கு உணவாக வேண்டும் என்ற நோக்கத்தோடு கடவுள் படைத்தார் என்று சொல்லமுடியாது. நெற்பயிர் என்ற தாவர உயிர் பல்கிப் பெருகவேண்டி, இயற்கையானது, நெற்பயிர் வளர்வ

தற்கு வேண்டிய சத்தை நெல்மணியினுள் அரிசி ரூபமாய்ச் சேர்த்து வைத்திருக்கிறது. ஆகவே, அவ்வரிசி, நெல்முளை வளர்வதற்குப் போதியதாகுமே யன்றி, மனிதனுக்குப் போதியதாகாது.

இந்த அரிசியை நாம் நான்கு விதமாக எடுக்கிறோம்: 1. பச்சையரிசி - மில்லரைவை: 2. பச்சையரிசி - கைக்குத்தல் (அதாவது கையினாலே குற்றிய அரிசி); 3. புழுங்கலரிசி - மில்லரைவை; 4. புழுங்கலரிசி - கைக்குத்தல். இந்த நான்கில் மிகவும் கீழானது, அதாவது உணவுச்சத்துக் குன்றந்தது, 1. பச்சையரிசி - மில்லரைவை. நெல்லை, அதுவும் பச்சை நெல்லை, மில்லில் அரைப்பதில், அதன் இரண்டாவது மூன்றாவது பாகங்களான மாத்தவிடும் முளையும் அரைபட்டு வெளியே உமியோடு போய்விடுகின்றன. மிச்சமுள்ள நான்காம் பாகமாகிய சக்கையே மக்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே, பச்சை மில்லரிசி உபயோகிப்பவர்களுக்கு, முற்கூறியபடி புரோட்டீன், பாஸ்பரஸ், பி வைட்டமின் ஆகிய சத்துக்கள் இல்லாத உணவுதான் கிடைக்கிறது. இயந்திர நாகரிகத்தின் விளைவாய்த் தமிழ்நாட்டில் இன்று சாமானியமாய் மூன்று மைலுக்கு ஒரு நெல்லரைவை மில் இருக்கிறது. ஏழை மக்களும் எளிதாக நெல்லைத் தலையில் சுமந்து சென்று இங்கு அரிசியாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

நெல்லை மில்லில் அரைப்பதோடுகூட, பெரிய மனிதர்கள், அரிசியை விசேஷமாய்த் தீட்டவும் சொல்லுகிறார்கள். அரிசியை மில்லில் தீட்டுவதென்பது, மீண்டுமொரு தடவை அவ்வரிசியை இயந்திரத்தில் இழைக்கச் செய்து புடைத்தெடுப்பதுதான். இதனால் அரிசியில் ஒட்டியிருக்கும் சொற்பத் தவிடும், அதாவது உணவுச் சத்தும், எடுபட்டுப்போய், அரிசி, தும்பைப்பூ என்று சொல்லும்படி வெண்ணிற மடைகிறது. இப்படி 'வண்ணானுக்குப் போட்ட' அரிசி பார்வைக்கு அழகா யிருக்கிறது; உடலுக்கு இதனால் உபயோகமில்லை.

கைக்குத்த லரிசியில், முளையும் மாத்தவிட்டில் பெரும்பகுதியும் அரிசியைவிட்டு அகல்வதில்லை. எனவே, உணவுச் சத்தும அரிசியில் குறைவதில்லை. ஆகவே, கைக்குத்தலரிசி உபயோகிப்பதனால், அரிசியிலுள்ள உணவுச் சத்து முழுமையும் கிடைக்கிறது.

புழுங்க லரிசிக்குச் சிறப்பான ஒரு குணம் உண்டு; நெல்லைப் புழுக்கும்போது, அதன் உட்புறம் அரிசியின் மீதுள்ள தவிட்டுச் சத்தில் பெரும்பகுதி அரிசியினுள் ஏறிவிடுகிறது. தவிர அத் தவிடு, உமியிலுள்ள பிடிப்பைவிட்டு அரிசியோடு ஒட்டிக்கொள்கிறது. ஆகவே, புழுங்கலரிசியை மில்லில் அரைக்கும்போதுகூட,

அதன் முளையும் மாத்தவிட்டில் பெரும்பகுதியும் பெயர்ந்து போய் விடாமல், அரிசியோடு ஒட்டிக் கொள்கின்றன; உமி மட்டுமே பெயர்கிறது. இந்தியாவில் ஏழை மக்கள் பெரும்பாலும் புழுங்கலாகவேதான் அரிசியை உபயோகிக்கிறார்கள். உபயோகத்திலுள்ள அரிசியில் ஏறக்குறையப் பாதி, புழுங்கலே யாகும். இது ஒரு நல்ல அம்சம் என்பதில் சந்தேக மில்லை. ஆயினும், இந்த அரிசியும் மில்லிலரைக்காமல், கைக்குத்தலா யிருந்தால் இன்னும் சிறப்புடையதாகும்.

கைக்குத்த லரிசி இவ்விதம் உணவுச் சத்து அதிகமுடையது என்பது உண்மை. அதனோடுகூட, இந்த உணவுப் பஞ்ச காலத்தில் இதனிடமுள்ள இன்னும் இரண்டு அம்சங்கள் கவனிக்கத் தகுந்தவை. முதலாவதாக, கைக்குத்த லரிசி 'வியன் காணும்'. இரண்டாவதாக, கைக்குத்த லரிசி அதிகம் சாப்பிடமுடியாது.

உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த நெல்லைப் பக்குவமாய் உலர்த்தி எடுத்து வைத்திருந்து அரைத்தால், நெல்லுக்குப் பாதி அரிசி தேறும். அதாவது, ஒரு கல நெல்லை இடிபடாமல் அரைத்தால், அதில் பாதியாகிய ஆறு மரக்கால் அரிசி கிடைக்கும். பக்குவமான உயர்ந்த ரக நெல்தான் இப்படி அரிசி தரும்; கொத்தமல்லிச் சம்பா, நெல்லூர்ச் சம்பா என்பன இப்படித் தரும். மட்ட நெல், அரிசி இன்னும் குறைவாகவே தரும். குறுவை, ஒட்டடை முதலிய நெல், கலத்துக்கு ஐந்து மரக்காலே அரிசி தரும். ஈர நெல்லா யிருந்து, அரிசி அரைவையில் இடிந்துபோனால், அளவு இன்னும் குறையும். அபூர்வமாகச் சில நல்ல நெல்லில் ஆறரை மரக்கால் அரிசி கிடைப்பதுமுண்டு. மில்லில் அரைக்காமல், வீட்டில் நெல்லைக் குற்றும்போது சாதாரணமாய் ஆறு மரக்கால் காண்பது ஆறரை மரக்கால் காணும். இதையே 'வியன் காணும்' என்பார்கள். ஆகவே, இப்போதுள்ள நெல்லை வைத்துக்கொண்டு கைக்குத்தலின்மூலம் அதிகமான அரிசியைப் பெறமுடிகிறது.

இனி, இரண்டாவதாகக் கைக்குத்தல் அரிசியுணவானது அதிகம் சாப்பிட முடியாது. இதில் உணவுச் சத்து அதிகமிருப்பதால், மில்லரிசிச் சாதத்தைவிட இதில் குறைவாய்ச் சாப்பிட்டாலே வயிற்றுக்குப் போதுமானதாகும். மெதுவான மில்லரிசிச் சாதம் சாப்பிட்டவர்கள் கைக்குத்த லரிசிச் சாதத்தை முதல்முதல் சாப்பிடும்போது, என்னவோ ஒரு மாதிரி யிருக்கும். வாய்க்கு அதிக ருசியா யிருப்பது உண்மை. ஆனால் கொஞ்சம் மெல்ல வேண்டியிருக்கும்; பார்வைக்கு, வண்ணான் வெளுத்தது போன்ற வெண்

ணிறமிராது. இதனால், அவர்களுக்கு ஆரம்பத்தில் சாப்பிடுவது கஷ்டமாயிருக்கும். கொஞ்சம் பழகியபின், இக்கஷ்டம் நீங்கிவிடும். கொஞ்சம் சாப்பிட்டவுடனே, வயிறு திருப்தியடைந்துவிடும். இதற்கு மாறாக, கைக்குத்த லரிசிச் சாதம் சாப்பிட்டுப் பழக்கமானவர்கள். மில்லரிசிச் சாதம் போதிய அளவு சாப்பிட்டபோதிலுங் கூடச் சாப்பிட்டதாகவே தோன்றாது. வயிற்றில் கொஞ்சம் பசியிருக்கும். சாதாரணமாய் எட்டு ஆழாக்குக் கொண்ட பட்டணம் படியால் ஒருபடி மில்லரிசிகொண்டு சமைத்த சாதத்தை எட்டுப் பேர் சாப்பிட முடியும் என்றால், அதே ஒரு படி அளவுள்ள கைக்குத்த லரிசியைச் சமைத்தால் ஒன்பது பேர் திருப்தியாய்ச் சாப்பிட்டு எழுந்திருக்கலாம்.

இங்ஙனமாகக் கைக்குத்த லரிசியில் இரண்டு விதத்திலும் லாபமிருக்கிறது. இரண்டு கலம் நெல்லை இப்போது எடுத்துக்கொள்வோம்; அதாவது 24 மரக்கால் நெல். இதை மில்லில் அரைத்தால் அதிகம் 12 மரக்கால் அரிசி கிடைக்கும்; அதாவது, பட்டணம் படி 24; ஒருவர் சாப்பாட்டுக்கு ஓர் ஆழாக்கு வீதம் இதை 192 பேர் சாப்பிடலாம். இன்னோர் இரண்டு கலம் நெல்லைக் குற்றுவதாக வைத்துக்கொள்வோம். முன் சொன்னபடி, கைக்குத்தலின் மூலம் 24 மரக்கால் நெல்லுக்கு 13 மரக்கால் அரிசி கிடைக்கிறது. அதாவது பட்டணம்படி 26. ஒரு படிக்கு ஒன்பது பேர் வீதம், இது 234 பேருக்குப் போதுமான ஆகாரமாகிறது. போதுமானதாயிருப்பதோடுகூட, உணவுச் சத்தும் நிறைந்ததாகிறது. இவ்விதம் 192 பேருக்குப் போதுமான மில்லரிசி தரும் நெல், 234 பேருக்குப் போதுமான கைக்குத்தலரிசி யுணவு தருகிறது: அதாவது கைக்குத்தலின் மூலம் 192 பேர் உணவைச் சுமார் 42 பேர் அதிகப்படியாகச் சாப்பிட முடிகிறது; இது நூற்றுக்கு 22 வீதம் ஆகிறது. நம் நாட்டில் உற்பத்தியாகிற நெல்லில், 60 சத வீதம் மில்லில் அரைவையாகிறதென்றும், மிச்சமுள்ள 40 சத வீதம்தான் கைக்குத்த லென்றும் தெரிகிறது. இந்த 60 சத வீதமும் கைக்குத்தல் ஆகுமானால், அதன்மூலம் முற்கூறியபடி $60\% \times 22\% = 13{\cdot}2\%$ அதிகப்படியான உணவு கிடைக்கும்.

தேசத்துக்கு $13{\cdot}2\%$ அதிகப்படியான அரிசி யென்றால், அரிசியைப் பொறுத்தவரையில் இந்த உணவுப் பஞ்சப் பிரசினை அரைக்கால் பங்கு $(=12{\cdot}5\%)$ குறைந்து போகிறது. நாற்பது கோடி மக்களுள்ள நமது நாட்டில் 24 கோடி மக்கள் வெறும் அரிசியுணவே உண்பவர்கள். இவர்களில் அரைக்கால் பங்கு என்பது சுமார் மூன்று கோடி. எனவே, இந்த நாட்டில் மில்லரிசியே

கிடையாது, கைக்குத்தலரிசி ஒன்றுதான் உண்டு என்று ஏற்பட்டு விட்டால், இதன்மூலம் மட்டும் - எவ்விதப் புது உற்பத்தியும் இல்லாமலே, 3 கோடி மக்களுக்கு உணவு புதிதாய்க் கிடைக்கிறது. எனவே, அரசாங்கத்தாரும், ஸ்தாபனங்களும், தனி மனிதரும் இதைச் சிந்தித்து இதற்காவன செய்தல் வேண்டும்.

மில்லரிசியைச் சாப்பிடுவோர் ஒவ்வொருவரும், இந்தப் பஞ்ச காலத்தில், '3 கோடி மக்களுடைய சோற்றை அவர்களிடமிருந்து நான் பறிக்கிறேன்' என்று உணர்தல் வேண்டும். அவ்விதம் உணர்ந்தால், வரவிருக்கிற பஞ்சம் நிச்சயம் வராது மக்கள் அவ்விதம் உணர்ந்து ஆவன செய்வார்களா?

நெல்லைச் சுமந்து கொண்டுபோய் அரைத்து வருவது, ஏழை மக்களுக்கும் இன்று மிகவும் எளிய வழக்கமாகிவிட்டது. இவ்விதமாக, சொற்ப கூலியே பெறுகிற நாட்டுப்புறத்து ஏழைத் தொழிலாளியும், கலத்துக்கு இரண்டணு மூன்றணு அரைவைக் கூலி மில்லுக்குக் கொடுக்கத் தயாரா யிருக்கிருனே யொழிய, அந்தக் கூலியை மிச்சப்படுத்தித் தன் வீட்டில் நெல்லைக் குத்தச் செய்கிற வழக்கமே இல்லை. வாழ்க்கைத் தரத்தை வளரச் செய்கிற முறைகளில் இதுவும் ஒன்ருகும்.

இந்த நிலைமையைப் பரிகரிப்ப தென்ருல், 'கைக்குத்த லரிசியைத் தான் உண்பேன்' என்று சங்கல்யம் செய்துகொண்டால் மட்டும் போதாது. கைக்குத்த லரிசி கிடைப்பதற்கும் வழிதேடவேண்டும். ஏராளமாய் இது கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும். இதற்கு அரசாங்கத்தாருடைய முயற்சிதான் முக்கியமாக வேண்டும். முதலாவதாக, தேசத்தில் நெல்லரைக்கும இயந்திரங்கள் வேறு வேலைகளை மேற்கொள்ள வேண்டுமே யொழிய, எந்த மில்லிலும் நெல் அரைவை கூடாது என்று சட்டம் ஏற்படுத்தல் வேண்டும். நெல்லை அதிகமாகத் தீட்டக்கூடாது என்று சில ஜில்லாக்களில் சட்டம் பிறப்பித்திருக்கிருர்கள். இது மிகவும் பயனுடைய நல்ல செயல் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு மேலும் போய், அரைவையே கூடாது என்று சட்டமியற்றுதல் மிகவும் நல்லதாகும். அரிசி மில்லானது, ஏழை மக்களின் வரும்படியைக் குறைத்து, சோமபேறித்தனத்தை வளர்க்கிறது. அரிசிமில இல்லாது போனல், ஏழைமக்கள் தங்கள் நெல்லைத் தாங்களே குத்திக்கொள்ளுதல் கூடும்.

கிராமாந்தரங்களிலுள்ள மக்கள் தங்கள் நெல்லைத் தாங்களே குத்திக்கொள்வதில் கஷ்டமொன்று மிராது. ஒரு தலைமுறைக்கு முன்னே, நெல்லைக் குத்திக்கொண்டார்களே யொழிய, அரைப்ப

தற்கு அப்போது மில்லுக்குப் போனதில்லை, மில்லும் அதிகமாய் இருந்ததில்லை. இந்த யுத்தத்துக்குமுன், இயந்திரங்களை ஏராளமாய்ச் செய்து வைத்திருந்த மேலை நாட்டு வியாபாரிகள் தங்கள் சாமான்களை விற்க எண்ணியதன் பயனாய், இங்கு அரிசி மில்கள் பெருகின. எனவே, இந்த மில்களின் உதவியை நாடாமல் உயிர் வாழ்வது, ஒன்றும் முடியாத காரியமன்று. நகர்ப்புறங்களில் கைக்குத்தல் கிடைப்பதில் கஷ்டம் ஏற்படக் கூடும். அங்கு ஜன நெருக்கம் அதிகம்; ஏழைத் தொழிலாளிகளுக்கு ஓய்வு நேரம் குறைவு; ஆதலால் எல்லோரும் தங்கள் நெல்லைக் குத்திக் கொள்வது சாத்திய மன்று. இதனால் அங்குமட்டும் மில்கள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொல்வது சரியாகாது. இதன் மூலம் திருட்டுத்தனமாக நெல்லரைப்பது பெருகும். ஆகவே, நெல் குத்துவதை அங்கும் பெருகச் செய்யவேண்டும். இதன்பொருட்டு, இரண்டு காரியங்கள் ஆகவேண்டும். ஒன்று உணவுப் பங்கீட்டை அரிசி உருவத்தில் செய்வதற்குப் பதிலாக, நெல்லாகவே செய்ய வேண்டும். மற்றொன்று, இப்போது நெல் அரைக்கும் மில்கள் ஏற்பட்டு நெல்லரைத்து வருவதுபோல, நெல் குத்தும் இடங்கள் ஏராளமாக ஏற்பட்டு, நெல்லைக் குத்தித் தர வசதி செய்யவேண்டும்.

நெல் பங்கீட்டைக் கவனிப்போம். அரிசிப் பங்கீட்டைவிட நெல் பங்கீட்டில் ஒரு பெரிய அனுகூலமுண்டு. நீண்டநாள் சேமித்து வைத்தால், அரிசியில் புழு உண்டாகும். ஈரம் பட்டு அரிசி மட்கலடிக்கும். நெல்லோ இவ்வளவு எளிதில் கெடாது. நெடுநாள் அப்படியே இருக்கும். என்றைக்கு எடுத்து அரைத்தாலும், அதன் அரிசி புதிய சுவையோடும் மணத்தோடும் இருக்கும். ஆனால், இதற்கு ஓர் ஆட்சேபம் எழக்கூடும். அரிசியைப்போல் நெல் இரண்டு பங்கு இடம் அடைக்கும்; ஆதலால் நெல்லைக் கொண்டுபோவது சிரமம் என்று பலர் கூறக்கூடும். யுத்தமோ நின்றுபோய்விட்டது. உணவுப் பஞ்சத்தைச் சமாளிப்பதற்கான முறைகளுக்கே அரசாங்கத்தார் விசேஷச் சலுகை யளித்துப் போக்குவரத்து வசதிகள் செய்துதரக் கடமைப்பட்டவர்கள். ஆகவே, நெல்லாகவே வைத்திருப்பதால் விளையும் பெரும் பயனைக் கருதும்போது, நெல் விளையும் இடத்திலிருந்து பெரிய நகர்ப் பிரதேசங்களுக்கும் பிற இடங்களுக்கும் ரெயில் மூலமாகவோ, மோட்டார் மூலமாகவோ, வண்டி மூலமாகவோ கொண்டுபோவது கஷ்டமாயிராது.

இரண்டாவது அம்சம், நெல்குத்தல் நெல் அரைக்கும் அரவை இயந்திரங்களும் மில்களும் ஒன்று பாக்கி யில்லாமல் மூடப்பட்ட

பின், எல்லா நெல்லையும் குத்துவதைத் தவிர வேறு வழி இடையாது. 'வீதிதோறும் இரண்டொரு பள்ளி' என்று பாரதியார் கல்வி சம்பந்தமாகப் பாடினார். பள்ளியிருக்கிறதாக நாம் கூறமுடியாது. ஆனால், நகரங்களில 'கிளப்' இருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இந்நிலைக்குக் காரணம், ஜன நெருக்கம், தொழில்களின் விரிவு, வாழ்க்கைத் துறையின் வெவ்வேறான பகுதிகள் முதலியனவாகும். எனவே, இப்படிப்பட்ட பலவகையான ஜன சமூகத்தின் தேவைக்குத் தக்கபடி, நெல் குத்துவதற்கான கைக்குத்தல் சாலைகள், வீதிக்கொன்றாவது அல்லது நான்கு வீதிகளுக்கொன்றாவது ஏற்படவேண்டும். இப்போதெல்லாம், கிராமத்துக்கு ஓர் அரிசி மில் இருக்கிறது. இவை எடுபட்டுப் போகுங் காலத்தில், கிராமத்தில் தம் நெல்லைத் தாமே குத்தி யுண்ண இயலாதவர்களை மட்டும் உத்தேசித்துக் கிராமந்தோறும் ஒரு கைக்குத்தல் சாலை ஏற்படவேண்டும். இந்தக் கைக்குத்தல் சாலையில், கனத்த மரத்தினாலோ சிமிட்டியாலோ செய்த நெல்லரைக்கும் கை - இயந்திரங்கள் பல இருத்தல்வேண்டும். உலக்கை கொண்டு உரலில் நெல் குத்துவதற்கும் வசதி யிருக்கவேண்டும். இவற்றில் நெல் குத்தித் தருவதற்காக, தொழிலாளிகள் பலரை அமர்த்திக் கொள்ளலாம். சென்னை நகரம் முதலிய பல இடங்களில் தெரு, சாலை மராமத்து வேலை செய்துவரும் ஒட்டர், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து குடும்பமாக ஈடுபட்டிருப்பதுபோல, இந்த நெல் குத்தும் வேலையில் வேலையற்ற ஏழைத் தொழிலாளி மக்களைக் குடும்பம் குடும்பமாக ஈடுபடுத்தலாம். இதன் மூலம், வேலையில்லாதவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி வேலை கிடைக்கிறது. கைக்குத்தலரிசிக்கு அரிசியுமாகி, உணவுப் பஞ்சம் சிறிதளவு நீங்குகிறது.

ராணுவத்தைக் கலைக்கும்போது, அதிலிருந்து விடுபடுபவர்களுக்கு எப்படி வேலை கொடுப்பது என்பதே யுத்தப் பிற்காலத் திட்டங்களில் தீர்க்க முடியாத பெருஞ் சிக்கலாக இருந்துவருகிறது. ராணுவத்தி லுள்ளவர்கள் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அல்லர். கல்வி சம்பந்தமான சிறந்த தகுதி பெற்று அதிகாரிகளாக மிக்க அந்தஸ்தோடு ராணுவத்தில் இருந்தவர்களை நமது காருண்ய சர்க்கார் வேலையில்லாமல் வீட்டுக்கு அனுப்பிவிடப் போவதில்லை. கொழுத்த சம்பளத்தில் அவர்களுக் கென்று எத்தனையோ வேலைகளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்; ஒதுக்கி வைத்தும் வருகிறார்கள்; புதிதாகச் சிருஷ்டித்தும் வருகிறார்கள்.

இவர்கள் பிரசினை பெரிய பிரசினை யாகாது. ஆனால் படிப்பே யில்லாமல் பட்டாளத்தில் சேர்ந்த நமது பாமரத் தோழர்களே பல்லாயிரவர். இவர்களை வேலையி லீடுபடுத்துவது பெரிதும் கஷ்ட மான பிரசினை தான். மேற்குறித்தபடி, கைக்குத்தல் சாலைகளில் இவர்களை ஈடுபடுத்துவது, இவர்களுக்கும் தேசத்துக்கும் சிறந்த பலன் தருவதாகும். ஒழுங்கான உடற்பயிற்சி, கவலையற்ற கொழுத்த சாப்பாடு ஆகியவற்றால் இவர்களுக்குக் கடினவேலை செய்வதற்கு வேண்டிய உடலாற்றல் இருக்கிறது. நெடுகிலும் இவர்கள் கடின வேலை செய்தே பழக்கப்பட்டவர்கள். ஆதலால் இவர்கள் இப்படிப்பட்ட சாலைகளில் வேலைக்கு அமர்ந்து நெல் குத்தும் தொழிலில் ஈடுபடுவது மிகவும் நல்ல காரியமாகும். வேலையில் உயர்வு தாழ்வு இல்லை என்ற உணர்வு மட்டும் இருக்குமானால், இவ்வேலை செய்வதற்கு எவ்வித ஆட்சேபமும் இருக்கவியலாது. இவர்கள் தங்கள் தங்கள் தாய் தந்தையரோடும மனைவி மக்களோடும் உடன்பிறந்தாரோடும் குடும்பமாக அமர்ந்து, நெல் குத்தும் வேலையை வெற்றிகரமாக நடத்தலாம்; திட்டப்படி பின்வாங்கும் கஷ்டம் இங்கு இல்லை. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற லட்சியம் எவ்வளவோ உயர்ந்த லட்சியம். எனவே, இத்தகைய நெல் குத்தும் நிலையங்கள் ஏற்படுத்தி நடத்தி வருவது நடைபெறக் கூடாத தொன்றல்ல.

இப்படி ஏற்படுத்தும் நெல் குத்தும் சாலைகளில், குத்தும் நெல்லுக்குக் குத்துக் கூலி, இப்போது அரிசி மில்லில் வழங்கும் கூலியை விடச் சற்றே அதிகமாக ஏற்படுத்தலாம். கூலி அதிகமா யிருப்பது, குத்துவோருக்கு வேலையில் ஊக்கந் தருவதா யிருக்கும். தவிர, கலத்துக்கு இரண்டு அல்லது மூன்றணைக் கூலி கொடுத்து அரைத்ததற்குப் பதிலாக, குத்துக் கூலி நாலணு என்று ஏற்பட்டதானல், அதிகம் காசு செலவழிக்கத் தயாரா யிருப்போர்மட்டும் நெல் குத்தக் கொண்டுவருவார்களே யன்றி, சோம்பல் காரணமாக மில்லுக்கு நெல்லைச் சுமந்து செல்லும் பழக்கம் பெற்றுவிட்ட ஏழை மக்கள், தம் நெல்லைத் தாமே குத்திக்கொள்ளத் தொடங்குவார்கள். இதனல் அவர்களுக்கு மிச்சமாகிற சில அணைக் காசு எவ்வளவோ பயனுடையது.

கைக்குத்தலின் மூலம் இப்படிச் சிறிதளவு உணவுப் பஞ்சத்தைப் போக்கமுடியும் என்று கூறின இதே இடத்தில், அரிசியைச் சமைப்பது பற்றிய ஒரு கருத்தையும் சொல்லலாம். நம்மவர்கள் அரிசியை உலையில் போடுமுன் கழுவுகிருர்கள். இதை 'அரிசி

களைதல்' என்று சொல்வார்கள். அரிசியில் ஏற்பட்டிருக்கும் தூசு முதலியவற்றைப் போக்க லேசாய்க் கழுவுவது ஓரளவு அவசியம், நியாயம் என்று சொல்லலாம். ஆனால், இரண்டு மூன்று தடவை நீரை விட்டுக் கையால் நன்றாய்த் தேய்த்துக் கழுவுவது எல்லோருக்கும் வழக்கமா யிருக்கிறது. அரிசியோடு ஒட்டிக்கொண் டிருக்கும் தவிட்டுச் சத்தைக் கழுவிப் போக்குவதே அரிசி களைவதன் நோக்கமா யிருக்கிற தென்று தெரிகிறது. இந்த நோக்கம் கேடானது. இத் தவிட்டுச் சத்தில், இரும்பு புரோட்டீன், பாஸ் பரஸ் ஆகிய சத்துக்களும் பி வைட்டமின் சத்தும் உள்ளனவாம். கையால் அரிசியைப் பிசைந்து பிசைந்து தவிட்டைப் போக்குவதால், புரோட்டீன் சத்தில் பத்திலொரு பங்கும், இரும்புச் சத்தில் முக்கால் பங்கும், பாஸ்பரஸ் சத்தில் பாதியும், களைந்த நீரோடு போகின்றன. மில் பச்சையரிசியா யிருந்தால் பி வைட்டமினில் 60 சதவீதமும், மில் புழுங்கலரிசியா யிருந்தால் இதில் 8 சதவீதமும் போய்விடு கின்றன. எனவே, தவிட்டைப் போக்கும் நோக்கத்துடன் அழுத்திக் களைவது எவ்வளவு கேடானது என்பதை யறியலாம்.

வடித்து எடுத்த கஞ்சியை மாட்டுத் தொட்டியில் ஊற்றி விடுவது மற்றொரு கெட்ட வழக்கம். மேற்கூறிய தவிட்டுச் சத்தானது நீரில் ஊறி, சூட்டால் வெந்து குறைந்து கஞ்சி யாகிறது. இதை மாட்டுத் தொட்டியில் கொட்டிவிட்டால், மாடு பயனடை கிறது. மனிதன் பயனை இழந்துவிடுகிறான். மில்லில் தீட்டி, நன்றாய்த் தேய்த்துக் கழுவிக் கஞ்சி வடித்த சாதம், வெறும் சக்கை என்பதில் கொஞ்சமும் சந்தேகமே யில்லை. இச்சக்கையை உண்ட நம் மக்கள் வாழ்க்கையில் உற்சாக மிழந்து, உடல் வலி குன்றிச் சோம்பி யிருப்பதில் வியப்படைய வேண்டிய தில்லை; இந்தச் சக்கையை உண்டு எப்படி உயிர் தரிக்கிறார்கள் என்பதை நினைத் துப் பார்த்தால்தான் ஆச்சரியமடைய வேண்டி யிருக்கிறது.

கஞ்சி வடிக்காமல் சமைப்பதற்குரிய முறைகள், பலவகையான 'குக்கர்'களிலும் அமைந்துள்ளன. இவற்றில், அரிசி காய்கறிகள் முதலியன யாவும் நீராவியில் வேகின்றன. எடுத்துத் தனியே வடிக் காதபடி, முதலில் அரிசிக்கு வேண்டிய அளவு திட்டமாய்த் தண் ணீரை வைத்துவிட்டு, இறக்கிவிடுவது வழக்கம். அரிசி நீராவியில் வெந்து, நீர் முழுவதையும் இழுத்துக்கொண்டு சாதமாகி யிருக்கிறது. சாதாரணமாய் உலையில் கொட்டிக் கஞ்சியை வடித்துவிடுவதைவிட, இவ்வகையான குக்கர் சமையல் பல மடங்கு மேலானது. ஆனால், நாட்டு வைத்தியர்கள், கஞ்சி வடிக்காமல் சாப்பிடுவதனால், 'வாயு'

அதிகமாகும் என்று சொல்லுகிறார்கள். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு மேலாகக் குக்கர் சமையலே செய்து சாப்பிட்டவர்கள் எவ்வித உபத்திரவமும் அடைந்ததாகத் தெரியவில்லை. தவிர, வாயு அதிகமாகும் என்றெண்ணிப் பயப்படுகிறவர்கள், ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை பேதிக்குச் சாப்பிட்டு வந்தால், வாயு தங்கும் என்ற பயத்துக்கு இடமிராது.

எனவே, கைக்குத்த லரிசி எப்படிப் பயனுடையது என்பதையும், எங்கும் கைக்குத்த லரிசியே உபயோகிக்கும்படி செய்வதன் மூலம், நம் நாட்டில் உணவுப் பஞ்சத்தை எவ்வாறு குறைத்தல் சாத்தியம் என்பதையும் பார்த்தோம். தவிர, இது வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பூச்சாண்டியைப் போக்கும் என்பதும் விளங்கிற்று. நமது சகோதரிகள், அரிசியில் தவிட்டைப் போக்கிக் கழுவாமலும், கஞ்சி வடியாமலுமாவது இனிச் சமைத்து வருவார்களாக.

21

காந்தியடிகளின் கருத்து

இந்த உணவு நெருக்கடி சம்பந்தமாய், காந்தியடிகள் கூறியுள்ள கருத்துக்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவை. முதலாவதாகப் பெருந்தீனி தின்போர் அத்தீனியைக் குறைத்து, எந்த அளவு குறைந்த உணவு கொண்டால் உடலின் வலியும் ஆரோக்கியமும் குன்றாவோ, அந்த அளவு உண்பது போதும் என்பதை உணர்தல் வேண்டும். இரண்டாவதாக, எல்லாவகை மக்களும் தொட்டியிலாவது சில காய்கறி வகைகளையும் கீரை வகைகளையும், தம் சொந்த உபயோகத்துக்கேனும் விலைக்கு விற்பதற்கேனும் பயிரிடவேண்டும். மூன்றாவதாக, பூந்தோட்டங்களில செலவழிக்கும நேரத்தையும் பணத்தையும் முயற்சியையும் காய்கறி உற்பத்தியிலும் பிற உணவுப் பொருள் உற்பத்தியிலும் செலவழிக்க வேண்டும். நான்காவதாக, ராணுவத்தினர் தங்கள் உணவைக் குறைத்துக்கொண்டு, பிற ஆடம்பர வாழ்க்கையினருக்கு இந்த விஷயத்தில் வழிகாட்ட வேண்டும். ஐந்தாவதாக, அரசாங்கத்தார் எண்ணெய் விதை, எண்ணெய், பிண்ணாக்கு முதலியன எவ்விதத்திலும் ஏற்றுமதியாகலாகாதென்று தடைசெய்ய வேண்டும். ஆறாவதாக, நீர்ப் பாசனத்துக்கேற்ற கிணறுகளைத் தோண்டவேண்டும். ஏழாவதாக, வெறும் பீதியைக் கிளப்பிவிடுவதோடு தங்கள் கடமை தீர்ந்தது என்று

எண்ணுமல், சர்க்கார் பொது ஜனங்களுடைய குறைகளையும் தேவைகளையும் தெரிந்து உண்மையாகவே ஆவன செய்யவேண்டும். கடைசியாக, எவ்வகையான கள்ள வியாபாரமும் ஓங்கச் சர்க்கார் இடங்கொடுக்காமல், கள்ளமும் ஏமாற்றுதலும் உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வரையிலாவது சர்க்கார் ஒழித்துவிடவேண்டும்.

22

உபவாசம்

உபவாசத்தால் எவ்வளவோ நல்ல பலன் உண்டு என்று பெரியோர் சொல்வார்கள். இதைக் கண்கூடாக மகாத்மா காந்தியின் வாழ்க்கை மூலம் நாம் அனைவரும் கண்டிருக்கிறோம். இனிமேல் வரப்போகிற உணவுப் பஞ்சத்தால் சோற்றுக் கில்லாது மக்கள் மடியும்படி நேரலாம் என்று அரசாங்க அதிகாரிகள் பயமுறுத்தி வருகிறார்கள். பஞ்சம் வந்தபிறகே ஏதேனும் செய்வோம் என்று எண்ணுவதைவிட, மக்களெல்லோரும் இப்போதே உபவாசமிருக்கப் பழகிக்கொள்வது பயனுடையதாகும். தமிழ்நாட்டுப் பாமர மக்களும் வைதிகர்களும், உபவாச வழக்கத்தை இன்றும் அனுஷ்டிக்கிறார்கள். அனேகமாக இந்துக்களில் எல்லோருமே வருஷத்தில் ஒரு நாள் உபவாசமிருக்கிறார்கள். சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை ஆகிய தினங்களில் உபவாசமிருப்பதுண்டு. இப்படி உபவாசமிருப்போர் இதை ஒரு சமயச் சடங்காய்க் கருதி இருக்கிறார்களே யன்றி, உணவுப் பஞ்சத்தைக் கருதி இருக்கவில்லை. எப்படியாயினும், ஒரு நாளைய உணவு மிச்சம் மிச்சந்தானே?

'ஒருநாள் உண்ணுவிட்டால், அதையும் சேர்த்து அடுத்த நாள் உண்டுவிடுவோமே!' என்று சிலர் கருதக்கூடும். இது முடியாது. நம் வயிறு 'இருநாளைக்கு ஏல் என்றால் ஏலாது'. ஆகவே, ஒருநாள் உண்ணவில்லை என்றால், அன்றைய உணவு மிச்சந்தான்.

ஆகவே, நம்மவர்க ளனைவரும், சமயச் சடங்காகவோ, உடல் நலத்தைக் கருதியோ, மாதமொருநாள் முழுப்பட்டினி யிருப்பார்களானால் பெரும்பயனுண்டு. மாதக் கார்த்திகை அல்லது ஏகாதசிகளில் பட்டினி யிருப்பது பலர் வழக்கம். எல்லோரும் இப்படியொரு வழக்கத்தை மேற்கொண்டால், உணவு முப்பதிலொரு பங்கு மிச்சமாகிறது! பஞ்சத்தில் பெரும்பகுதியை இது குறைக்க உதவும்.

23

உணவை வீணாக்கலாகாது

உணவைப் பற்றி உபநிஷதம் கூறும் சில வாக்கியங்கள் மிகவும் பொருள் பொதிந்தனவா யிருக்கின்றன. அவற்றை இங்கு அறிதல் மிக்க பயனுடையதா யிருக்கும்.

" அன்னம் ந நிந்த்யாத், தத் வ்ரதம் " என்பது தைத்திரியோப நிஷத், பிருகுவல்லியின் ஏழாவது அனுவாகத் தொடக்கம். '(அன்னத்தின் வாயிலாகப் பிரம்ம ஞானம் பிறப்பதால்,) அன்னத்தை நிந்தித்த லாகாது; அதை ஒரு விரதமாகக் கொள்ளுக' என்று அம் மந்திரம் உபதேசிக்கிறது. கடவுளை அறிய முற்படுகிறவன்கூட, உணவைப் பழிக்கக்கூடாது என்பதே நம் ஆன்றோர்களின் அபிப் பிராயம். ஏனெனில், கடவுளை அறிய, உயிரானது உடம்போடு கூடியிருத்தல் வேண்டும்; 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' (திருமந்திரம்) அல்லவா? எனவே, குருவை வழிபடுவதுபோல அன்னத்தையும் ஒருவன் வழிபடுதல்வேண்டும். தானியமும் ஒரு லட்சுமி என்று நம்முன்னோர் கருதி வழிபட்டதும் இக்கருத்துப் பற்றியே எனலாம்.

'பூஜயேத் அசனம் நித்யம் அத்யாத் ச ஏதத் அகுத்ஸயன், த்ருஷ்ட்வா ஹ்ருஷ்யேத் ப்ரஸீதேத் ச ப்ரதி நந்தேத் ச ஸர்வச:' என்பது மனு ஸ்மிருதி. 'ஒருவன் தினந்தோறும், சோற்றைப் பூசை செய்து அதை இழித்துரைக்காமல் உண்பானாக; அதைக் கண்ணால் கண்டதுமே மகிழ்ச்சி பெற்று, மரியாதையோடு எல்லாவகையினும் அதைப் போற்றுவானாக' என்பது இதன் பொருள். இக்கருத்துப் பற்றித்தான், 'சந்நியாசியானவன், கொடுத்த பிச்சை எதுவா யிருந்தாலும் அதைக்கொண்டு திருப்தியடைய வேண்டும்; அது குறையென்று கருதி வேறொன்றை இச்சிக்கலாகாது' என்று சாஸ்திரம் கூறுவதும்.

உபநிஷத்தில், மேற்கூறியதற்கு அடுத்த மந்திரம் இன்னும் முக்கியமானது; எட்டாவது அனுவாகம: " அன்னம் ந பரிசக்ஷீத, தத் வ்ரதம்." இதன் பொருள், 'அன்னத்தை வீணாக்கலாகாது; அதை விரதமாகக் கொள்ளுக' என்பதாகும். உயிர் வாழ்க்கைக்கு எல்லா வுயிர்க்கும் ஆதாரமாயுள்ள பொருள் உணவானமையால், அதை வீணாக்கலாகாது என்பதை ஒரு நியமமாகக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். தீயிலோ நீரிலோ (ஆற்றிலாகட்டும், கடலிலாகட்டும்) உணவுப் பொருளைப் போட்டுப் பாழ்படுத்துவதைக்

கொடிய பாவமென்று நம் ஆன்ருேர் கருதினூர்கள். நம்மைப் படைத்த கடவுளுக்கும் இது துரோகம். நம் உடலைப் பேணி வளர்க்கிற பிரகிருதிக்கும் இது பெருந்துரோகம் என்று அவர்கள் கொண்டார்கள். 'ஸர்வேஷாமேவ தாஞனும் அன்னதானம் பரம் ஸ்ம்ருதம், ஸர்வேஷாமேவ ஜந்தூனும் யதஸ்தத் ஜீவிதம் பரம்' என்பது ஸ்மிருதி வாக்கியம். 'அன்னத்தைப் பிறருக்குக் கொடுத்துண்பதே தானங்களனைத்திலும் மேலான தானம்; ஏனெனில், உணவே எல்லா உயிர்களுக்கும் வாழ்வதற்கு முதன்மையான ஆதாரமா யுள்ளது' என்பது இதன் பொருள்.

லட்சம் லட்சமான டன் கணக்கில் உணவுப்பொருளை வீணுக்கின இந்தக் காலத்தில், 'அன்னத்தை வீணுக்காதே' என்று உபதேசிக்கிற இந்த உபநிஷத் மந்திரம் மிக்க பொருளுடையது. எத்தனையோ ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் நம் முன்ேனூர் செய்த இந்த உபதேசம், அன்னத்தை வீண் விரயம் செய்துவரும் அரசாங்கத்தாரை நோக்கி இன்று கூறியதுபோல் அமைந்திருப்பது உணர்ந்து வியக்கத் தக்கது.

அரசாங்கத்தார் மட்டுமன்றி, பல்வேறு துறைகளிலு முள்ள எல்லாவகை மக்களும் இவ்வுபதேசத்தைக் கடைப்பிடித் தொழுகல் பெரும் பயன்தருவதாகும். சிறப்பாக இரண்டு துறைகளை இங்குச் சுட்டிக் காட்டலா மென்று தோன்றுகிறது. ஒன்று, மாணுக்கர் விடுதிகள்; மற்ருென்று, தரும ஸ்தாபனங்கள்.

பொதுவாக மாணுக்கர் விடுதிகளில், தட்டுகளிலும் இலையிலுமாக வீணே தூக்கிக் குப்பையி லெறிகிற சோற்று வகைக்கு எல்லையே இல்லை. தமிழ்நாட்டில் மாணுக்கர் விடுதிகளுக்கு மேற்பார்வை யதிகாரி ஒருவர் (வார்டன்) இருப்பார். பெரும்பான்மையும் இவர் பள்ளிக்கூட ஆசிரிய ராகவும் அவரையொத்த தகுதியுடையவ ராகவுமே இருப்பார். சில விடுதிகளில், இந்த வார்டன்கள் சாப்பிட்ட மிச்சமே பையன்களுக்குக் கிடைக்கிறது. அங்கே, பையன்களுக்குப் பசி தணிக்கப் போதுமான உணவு கிடைப்பதே அருமை யாகையால், உணவை வீணுக்குவது என்ற பேச்சு எழுவதற்கே இடமிராது. ஆனூல், பெரும்பாலான விடுதிகள் இந்த நிலைமையில் இல்லை. விடுதி நடப்பது மாணுக்கரை உத்தேசித்தே என்று கருதும் வார்டன்களும் இருக்கிறூர்கள். இங்கெல்லாம், பிள்ளைகளுக்குத் திருப்தியான உணவு கிடைக்கிறது. ஆனூல், உணவின் அருமையைப் பிள்ளைகள் உணர்வதில்லை. உணராமையால், தட்டிலும் இலையிலுமாக, சோற்றையும் காய்கறி பலகார வகைகளை

யும் அதிகமாக மிச்சம் வைத்து எறிந்துவிடுகிறார்கள். இவ்வளவும் குப்பை மேட்டுக்குப் போகிறது. விடுதிகளில் வந்து இருந்து சாப்பிட்டுப் படிக்கும் பிள்ளைகள், ஓரளவேனும் செல்வரா யுள்ளோர் வீட்டுப் பிள்ளைகளே. இலையில் போட்ட அவ்வளவும் சாப்பிடுவது, ஏழைக்கு அடையாளம், பாதி மிச்சம் எறிவது செல்வருக்கு லட்சணம் என்ற தத்துவத்தில் இவர்கள் வளர்ந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது.

உணவை வீணாக்குவதென்பது புதிதாய் விடுதியில் பழகிக் கொள்ளும் பழக்கமன்று. பத்துப் பிள்ளைகள் சோற்றை வீணே எறிகிற வழக்க முடையவர்களா யிருந்தால் அவர்களிடையே சாப்பிடுகிற பையன் தானும் அவ்விதமே எறியப் பழகிவிடுகிறான். எனவே, இது ஓரளவு பழக்கத்தாலும் வருவதாகும். சமூகத்திலும் வீட்டிலும் உள்ள ஒரு தப்பான பழக்கமே இதற்குக் காரணமாகும். நண்பரொருவர் வீட்டில் விருந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாலைந்து பேர் சாப்பிடுகிறோம். படைத்த சாதமும் கறி வகைகளும் பிடித்தனவா யிருக்கின்றன. இருந்தும், இலையில் கொஞ்சம் கொஞ்சம் மிச்சம் வைத்துவிட்டு எழுந்திருக்கும் வழக்கம் நம்மிடையில் இன்று உள்ளது. ஏன்? படைத்த அவ்வளவையும் சாப்பிட்டுவிட்டால், நம்மைப் பிறர் சாப்பாட்டு ராமன் என்று எண்ணி விடுவார்கள் என்ற பயம். பாதி சாப்பிட்டுப் பாதி சாப்பிடாது எறிந்துவிட்டால்தான் நமக்குக் கௌரவம் என்ற ஒரு போலி நினைப்பு. இது காரணமாகத்தான், உணவை இலையில் மீதிவைத்து எறிந்து விடுகிற தீய வழக்கம் வளர்ந்து வந்திருக்கிறது.

'மாப்பிள்ளை முறுக்கு' என்ற ஒரு கெட்ட சம்பிரதாயம் இதற்கு மூலகாரணம் என்று கூறலாம். மாப்பிள்ளையா யிருப்பவன் அதிக முடுக்கா யிருப்பான் என்று மாமனார் வீட்டில் எதிர்பார்ப்பார்களாம். முடுக்காக நடந்துகொண்டால்தான் அவனுக்கும் கௌரவமாம். முடுக்கை வேறெதிலும் காட்டமுடியாது. சாப்பாடு ஒன்றில்தான் காட்டலாம். ஆகவே, மாப்பிள்ளையா யிருப்பவர்கள், இந்த முடுக்கைக் காட்டத் தவறுவதில்லை. தனக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை என்று காட்டிக்கொள்வதிலும், தனக்குச் சாப்பாடு இறங்கவில்லை என்று காட்டிக்கொள்வதிலும், தனியான ஒரு பெருமை. இதற்காக, மாப்பிள்ளைகளில் சிலர் மாமனார் வீட்டில் விருந்துச் சாப்பாட்டுக்குப் போவதென்றால்,வழியில் ஒரு சிற்றுண்டிச் சாலையில் புகுந்து, முக்கால் வயிறு நிறையும்படி சாப்பிட்டு விட்டுச் செல்வார்கள். வேறு சில மாப்பிள்ளைகள், அவ்விருந்தில் அரை வயிறு மட்டும் சாப்பிட்டுப் பின் நேரே வந்து ஒரு சிற்றுண்டிச்

சாலையில் புகுந்து குறை வயிற்றை நிரப்பிக்கொள்வதும் உண்டு. ஒரு மாப்பிள்ளை, இதேபோல் கௌரவத்துக்காக, இலையில் பலகாரம் படைத்தபோது வேண்டாமென்று சொல்லி மறுத்துவிட்டு, பின் நடு ராத்திரியில், பசி பொறுக்காமலும், பலகார வாசனையால் கவரப் பட்டும், அடுக்களைக்குச் சென்று தாழ்வாரத்தி லிருந்த உரலில் இடித்த பலகாரத்தை நாவால் நக்கத் தலையைவிட்டுத் தலை எடுக்க முடியாமல் தவித்தான் என்ற நாடோடிக் கதையை நாம் அறிவோம்.

இப்படிப்பட்ட போலி மாப்பிள்ளை முடுக்கால் விளைந்த தப்பான சமூகப் பழக்கந்தான் உணவுப் பண்டத்தை எறிவதென்பது. போன தலைமுறையி லிருந்த பெரியவர்கள் உணவுப் பஞ்சத்தை அறியாத வர்கள். ஏனென்றால் அவர்கள் உணவை ஒருபோதும் வீணாக்கிய தில்லை; இலையில் போட்டு எறிவதில்லை. 'அன்ன லட்சுமி; இதை எறியக் கூடாது' என்பது அவர்கள் விரதம். மற்றவர்கள் யாரேனும் எறிவதா யிருந்தாலும், பெரியவர்களா யுள்ளோர் கூடவே உட்கார்ந்திருந்து, ஆர அமரச் சாப்பிடச் செய்து, எறியாத படி காப்பார்கள். உணவினிடத்தில் அவர்களுக்கு விசேஷமான பக்தி யிருந்ததென்றால், மிகையன்று.

இந்த பக்தி இன்று குறைந்து போனதற்கு முக்கியக் காரணம், போலி உபசாரம். அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடும்படி உபத்திரவம் பண்ணுவதே, அன்பு காட்டுவதற்கு அடையாளம் என்று பலர் தப்பாக எண்ணுகிறார்கள். ஒரு வடை சாப்பிடக் கூடியவருக்கு நாலு வடை போட்டால்தான் அன்பு வெளிப்படுகிறது என்று எண்ணுவோரே நம்மில் அதிகம் பேர். இலையில் உட்கார்ந்தவர், இரண்டையேனும் எறியாமல் 'என்ன செய்வார்! 'என் ஆயுளில் இதுவரையில் இலையில் எதையும் நான் எறிந்தது கிடையாது. இன்றுதான் முதல் முதலாக உங்கள் வீட்டில் எறியும்படி நேர் கிறது' என்று சிலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். காரணம், வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும் கேளாமல் அளவுக்கு மிஞ்சிப் படைப்பதுதான்.

ஆகவே, சமூகத்தில் இப்படி உணவு விஷயத்தில் மிதமிஞ்சி உபசாரம் செய்வதை விட்டுவிட வேண்டும். சாப்பிடுபவர்களும், அன்னத்தை எறிவது மகா பாதகம் என்பதை உணர்வதோடு அன்னத்தை எறிவதால் கௌரவம் உயராது என்பதையும் அறிய வேண்டும். சமூகத்தில் இப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுமானால், செல்வர் வீடுகளிலுங்கூடச் சாப்பாட்டை இலையில் எறிகிற நாகரிகம் இடம் பெறாது. இந்த நாகரிகம் பின்னர் மாணுக்கர் விடுதிகளிலும் தலை காட்டாது. இவ்விஷயத்தில் பெரியோர், தாங்களே செய்து

காட்டவேண்டும். அன்னத்தை நிந்தித்ததனாலும், அன்னத்தை எறிந்ததனாலுமே நாம் இன்று இந்த நிலைக்கு வந்திருக்கிறோம். ஆகவே, பெரியோர்கள் இங்கே கூறியவற்றின் உண்மையை உணர்ந்து, நடப்பார்களானால், பிள்ளைகள் அந்நடையை அப்படியே எளிதில் பின்பற்றுவார்கள். அன்றியும் பிள்ளைகளிடத்திலும் மாணாக்கர் களிடத்திலும் இதுபற்றி விரிவான பிரசாரம் செய்வது அவசியம். 'நாலு பிள்ளைகள் வீணாக்குவது ஐந்தாவது பிள்ளைக்குப் போது மான உணவாகும். வங்காளத்தில் இப்படி முப்பத்தைந்து லட்சம் மக்களும் குழந்தைகளும் சோறு கிடைக்காமல் செத்திருக்க, நீங்கள் இப்படி வீணாக்க லாமா' என்று பக்குவமாக மனத்தில் படும்படி எடுத்துச் சொன்னால், இதைக் குழந்தைகள் நன்றாய் உணரும். குழந்தைகளின் வெள்ளை யுள்ளத்தில் இப்படிப்பட்ட நல்ல விஷயங் கள் படிந்தால், சிறந்த பலன் விளையுமென்று எதிர்பார்க்கலாம். எனவே, உபநிஷத மந்திரத்தை மறவாமல்,

அன்னம் ந நிந்த்யாத், தத் வ்ரதம்—
அன்னம் ந பரிசக்ஷீத, தத் வ்ரதம்—

என்ற சொற்களையே மாணாக்கர் விடுதிகளுக்கு ஏற்ற உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டால், உணவாகச் சமைத்து வீண் போவதில் பாதியாவது மிஞ்சும். இந்தப் பஞ்ச காலத்தில் இது எவ்வளவோ பயனுடையது என்பதைச் சொல்லவேண்டிய தில்லை.

இனி இரண்டாவது, தரும ஸ்தாபனங்களின் விஷயம். கோயில், மடம், சத்திரம் இவற்றில் அன்னதானத்துக்கு நம் நாட் டில் எவ்வளவோ ஏற்பாடு செய்யப்பெற் றிருக்கிறது. இந்த ஏற் பாடுகள் இன்று எவ்வளவு சீர்கெட் டிருக்கின்றன, எவ்வளவு வீண் விரயம் ஆகிறது என்பன எல்லோருக்கும் தெரியும். கோயில்களில் வௌவால்கள் குடியிருப்பதுபோல, மேற்சொன்ன வற்றின் நிர்வாகத்தில் 'பெருச்சாளிகள்' புகுந்து சாப்பிட்டு ஏப்பம விடுகின்றன. ஊழலும் விரயமும் கணக்கில்லை. சமூகத்திலுள்ள சீர்கேடுதான் கோயிலிலும் மடத்திலும் சத்திரத்திலும் பிரதிபலிக் கிறதே யொழிய, இவற்றுக் கென்று தனியாக ஒரு சீர்கேடு வந்து விடவில்லை. சமூகம் விழிப்படையுமானால்தான், இவைகளும் முன் னேற்ற மடையும்; ஊழலும் விரயமும் நீங்கும்.

தரும ஸ்தாபனங்களி லாகட்டும், வீடுகளி லாகட்டும், சில சமயம் விருந்து அல்லது ஆடம்பரச் சமையலானது வீண் விரயத்துக்கே இடமா யிருக்கிறது. பச்சடி ஆறுவகை, பொரியல் அஞ்சு வகை, வறுவல் நான்கு வகை என்று கணக்கு விரிவாய்ப் போய்க்கொண்

டிருக்கிறது. பல வகைக் கறிகளைச் சமைப்பதும், அவற்றை இலையில் அழகுபெறப் படைப்பதும், தமிழ் மக்களிடம் ஒப்பற்ற அருங்கலையாக வளர்ந்து வந்திருக்கிறது. எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகத் தமிழகத்தில் ஊன்றி வளர்ந்த பண்பாட்டு விருந்து விளைந்ததே இச்சமையற் கலை. ஆனால், காலநிலையை உத்தேசித்து, இக்கலையின் பிரகாசத்தைச் சிறிது மட்டப்படுத்திக்கொண்டால் நல்லது. உலகத்தில் மக்களுடைய ருசி பல விதம். எல்லோருக்கும் எல்லா ருசியும் வேண்டியிரா, பிடிக்கவும்-பிடிக்கா; ஆதலால் பலவேறு ருசியுடைய கறிவகைகளை மிதமாகச் சமைத்துப் படைத்தால், அவரவருக்கு வேண்டாதன சில இருக்கவே இருக்கும். இவற்றை விலக்கி மற்றவற்றையே அவரவர் உண்ணமுடியும், இப்படி எல்லோரும் சிறிது சிறிது ஒதுக்கிவிடுவதால், மொத்தத்தில் வீணாவது அளவு கடந்து போய்விடும். ஆகவே, முக்கியமாக விருந்துகளில், அதிகப்படியான கறிவகைகள் செய்வதில்லை - என்ற விரதம் இப்போது வேண்டும். உணவுப் பஞ்சத்தை மனத்தி லிருத்தி, மூன்று கறிவகைகளுக்குமேல் விருந்தில் சமைப்பதில்லை என்று வரையறை செய்துகொள்ளலாம். பருப்பு சாம்பார் ரசம் மோர் - என்ற நாலு பிரிவுகளுக்குமேல் இடம் வைக்கவும் வேண்டியதில்லை. வடை பாயசம் என்று ஏற்பட்டால், இந்நான்கு பிரிவில் ஒன்றையேனும், கறிகளில் இரண்டையேனும் குறைக்க வேண்டும். மோர்க் குழம்பு அல்லது வற்றல் குழம்பு வைத்தால், சாம்பாரை நிறுத்திவிட வேண்டும். இப்படியாக நாமாகவே சாப்பாட்டைக் கட்டுப்படுத்திக்கொண்டால் மிகவும் நல்லது.

ஐக்கிய மகாணத்தில் ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஹோட்டல்களில், சாப்பாட்டில் மூன்று வகைகளுக்குமேல் பரிமாறக் கூடாது என்பது சட்டம். ரொட்டியும் பருப்பும் ஒன்று; சாதம் (தயிர் அல்லது கறியோடு) இரண்டாவது; ரசகுல்லா முதலான இனிப்பு வகையுள் ஒன்று மூன்றாவது. இதற்குமேல் ஹோட்டல் காரன் பரிமாறக் கூடாது. இந்தக் கட்டுப்பாட்டினால், சாப்பாடு வீணாவது குறையும் என்பது உறுதி

24

உணவு உற்பத்தியைப் பெருக்குக

அன்னத்தை நிந்திக்காதே, அன்னத்தை வீணாக்காதே என்று உபதேசித்த உபநிஷதம், அடுத்தபடி இன்னும் பயனுள்ள உபதேசமொன்றையும் கூறுகிறது: "அன்னம் பஹு குர்வீத, தத் வ்ரதம்"

என்பது மந்திரம். 'அன்னத்தை மிகுதியாக உண்டுபண்ணவேண்டும்; அதுவே விரதமாய்க் கொள்ளுக' என்பது இதன் பொருள். சுருங்கச் சொன்னால், உணவு உற்பத்திப் பெருக்க இயக்கத்துக்கு உபநிஷதம் ஆதரவளிக்கிறது.'

இப்போது நடந்த யுத்தத்தால், போருக்கு உணவு வசதி அல்லது உணவுப் பெருக்கம் எவ்வளவு அவசியமானது என்று அறிகிறோம். ஊக்கங் குன்றாத வலி மிகுந்த படைகள் இருக்கலாம். அப்படைகளுக்குப் பயன்படத் தக்க உயர்தரமான போர்க் கருவிகளும் அமைத்துக் கொடுக்கலாம். ஆனால், இவ்விரண்டுக்கும் முதலாவதாக அமைய வேண்டியது உணவு வசதி. இது எவ்விதத்திலும் குறையாமல் இருந்தால்தான், போரிடுவோர் வலிகுன்றாதிருக்க முடியும; அவர்கள் நீங்கலாக நாட்டி லிருப்போரும் ஊக்கந் தளராது போர்க் கருவிகள் செய்துகொண்டே யிருக்கமுடியும்; முற்காலத்தில், வில் வாள் வேல் முதலாக எண்ணப்பட்ட போர்க் கருவிகள் சிலவே யிருந்தன. 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்றவாறு, போர்க்கருவி செய்துதருவது சிலருக்கு மட்டுமே உரிய தொழிலா யிருந்தது. இன்று நிலைமை அப்படி யில்லை. இன்னதுதான் போர்க்கருவி என்று வரையறை செய்யமுடியாது. வெடிகுண்டு, துப்பாக்கி என்ற ஆயுதங்கள் ஒருபுற மிருக்க, துணியும் ஒரு முக்கியமான போர்க்கருவியா யிருக்கிறது; படைகள் தங்கியுள்ள இடம் எதிரி விமானங்களுக்குத் தெரியாமல் மறைந்து கொள்ளவேண்டி வலையாலும் பலநிறத் துணியாலும், மரம் செடி கொடிகள்போல மூடிக்கொள்கிறார்கள். இதற்குத் துணி வேண்டி யிருக்கிறது. விமானத்தி லிருந்து குதிக்கும்பொருட்டு, பட்டினால் செய்த பாரச்சூட் குடைகள் வேண்டி யிருக்கின்றன. விமானங்களும் டாங்கிகளும் இயங்குவதற்குப் பெட்ரோல் முதலான எண்ணெய் வகைகள் வேண்டி யிருக்கின்றன. 'காயம்பட்டு இரத்த மிழந்த வீரருக்கு உதவும பொருட்டு, 'இரத்த நிதி' தேவையா யிருக்கிறது.

இவை யாவும் போக, படை வீரருக்கு அடிக்கடி ஊக்கமளிப்பது மிகவும் அவசியமா யிருக்கிறது. போர்முகத்து எவர் வரினும் புறங்கொடாத வீரமெல்லாம் முற்காலத்தில் இருந்ததென்று நாம் பாடல்கள் மூலமாகவும் கதைகள் மூலமாகவும் கேட்டிருக்கிறோம். இன்றையப் போர் நிகழ்ச்சிகளை ஊன்றிப் பார்க்கும்போது, அவை யாவும உண்மையல்ல எனறு நாம முடிவு செய்ய நேர்ந்தால் தவறாகாது. போருக்குப் புறப்படு முன்னமேயே, திரும்பி ஓடி வருவதற்கான திட்டங்களைத் தெளிவாக வகுத்துக்கொண்டுதான் இன்று

வீரப் படைகள் போகின்றன. போர் மும்முரமாக ஆகிவிட்டால், கஷ்டமொன்று மில்லை; படைகள் திட்டப்படி வெற்றிகரமாய் வாபஸ் ஆகின்றன. எனவே, போரில் முன்னேறுவது என்பது, இரண்டாந்தரமான நடவடிக்கை; முதல்தரமான ஏற்பாடு, வெற்றி கரமான வாபஸ்.

இந்த நிலையில் முற்காலத்து மக்கள், ஆடவரும் பெண்டிரும் வீரமக்களா யிருந்தார்க ளென்பது நம்ப இயலாதது. ட்ரோஜன் மண்ணில் இறங்கிய கிரேக்கப் படைகளின் தலைவனான யுலிஸ்ஸிஸ் என்பவன், திரும்பி கிரேக்கநாடு செல்லலாம் என்று படைகள் எண்ணிவிடாதபடி, தாங்கள் வந்த கப்பல்களையெல்லாம் கொளுத்தி விட்டானும்; எனவே அவர்கள் வெற்றி பெற்றால்தான், ஊருக்குத் திரும்பலாம்; தோற்றுத் திரும்புவது இயலாததாகிவிட்டது. கிரேக்க நாட்டில் ஸ்பார்த்தா என்ற நகரத்து மக்கள் சம்பந்தமாக ஒரு பழமொழி உண்டு. போருக்குச் செல்பவனை, "நீ வென்றால் கேடயமேந்தி ஜயசீலனாக வருவாயாக. அல்லது வெல்ல முடியா விட்டால், இறந்து வீழ்ந்து, உன் கேடயத்தில் உன்னைப் பிரேத மாகத் தூக்கிப் போட்டுப் பிறர் கொண்டு வருவார்களாக" என்று ஆசீர்வதிப்பார்களாம். புறப்புண் ஏற்பட்ட அவமானம் பொறுக்க மாட்டாமல் உயிர்விட்ட வீர அரசர்களையும் வீர மறவர்களையும் பற்றிய கதைகள் நம் நாட்டிலும் பல உண்டு.

ஆனால் இன்றோ, வாபஸ் திட்டத்தைப் பத்திரமாய்ச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு, படைகள் போர்முனைக்குச் செல் கின்றன. இப்படைகளுக்கு, சாப்பாடு அடுத்த வேளை இராது என்றால், போர் வீரம் எங்கிருந்து வரும்? அல்லது இப்படையினர் போர்முனையில் நிற்கும்போது, தேசத்தில் உணவுப் பஞ்சம் ஏற் பட்டு, மக்கள் சாகிறார்கள் என்ற செய்தி எட்டியதானால், 'நம் குடும்பத்தார் எப்படி இருக்கிறார்களோ!' என்ற கவலை அதிக மாகுமே யொழிய, போரில் ஊக்கம் எப்படிப் பிறக்கும்? இப்படிப் பட்ட பல காரணங்களை வைத்தே, 'உணவு உற்பத்தியே முக்கிய மானது' என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

இதையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த ஒரு புலவர் பாண்டிய மன்னன் ஒருவனுக்கு அழகாக உணர்த்துகிறார்: "அரசே! நாட்டிலுள்ள மற்றெல்லா அரசர்களையும் வென்று, நீயே தனி அரசனாக விளங்கவேண்டு மானாலும், உன்னுடைய புகழே எங்கும் பரவி நிற்கவேண்டினாலும், அதற்கு வழி ஒன்றே ஒன்றுதான் உள்ளது. உனக்குப் படைப்பெருக்கம் வேண்டும். படையாவது, வீரர்களாலானது. மனித சரீரம நீர்மயமானது.

உணவை யுண்டுதான் இந்த உடலில் உயிர் தங்கும். ஆகவே உண்டி கொடுத்தவர், உயிர் கொடுத்தவரே யாகிறார். உண வென்பது, நிலத்தில் நீரின் துணைகொண்டு விளைவதாகும். ஆகவே, விரிந்த நிலப்பரப்பும் அதற்கேற்ற நீர்வசதியும் உடைய அரசர், இங்கு உயிரும் உடம்பும் படைத்தவர்போல, எதையும் இயற்றும் ஆற்றல் பெற்றவராவார். உன் நிலவலம் எல்லாம் புன்செய்வளம். இது விதையை விதைத்துவிட்டு, மழையை எதிர்நோக்கிக்கொண்டே யிருக்கும் தன்மையுடையது. யுத்த முயற்சிக்கும், நீர்வள மில்லாத புன்செய்வளம் விசேஷப் பலன் தராது. எனவே, நீர்வளத்தை நீ பெருக்குவாயாக. நீர்வளம் பெருக்கியவரே உலகில் ஏராளமான உணவு உற்பத்திக்கு வழிசெய்து, நல்ல முயற்சி செய்து வெற்றி பெற்றவராவார்" என்று அப்புலவர் கூறுகிறார் :

மல்லல் மூதூர் வயவேந்தே
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ யாகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள்இனி, மிகுதி யாள !
நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே.
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உயிரும் உடம்பும் படைத்திசி னோரே,
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகல்
வைப்பிற் றாயினும்,
இறைவன் தாட்குத வாதே ; அதனால்
அடுபோர்ச் செழிய ! இகழாது, வல்லே,
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே,
தள்ளா தோர் இவண் தள்ளா தோரே.

இவ்விதமாக, பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய உபநிஷதம் 'அன்னம் பஹு குர்வீத' என்று உபதேசிப்பதையும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் புலவர், 'நீர் நிலை பெருகச் செய்து உணவு பெருகுவதற்கு வழி செய்வாயாக' என்று தம் அரசனுக்கு உபதேசிப்பதையும் நாம் கண்டு வியவா திருக்கமுடியாது.

நமது கடமை

யார் வைத்த கொள்ளியோ, வீடு வெந்துவிட்டது. உணவு ஏற்றுமதி ஒருகாரணம்; அளவில்லாத நாசவேலை ஒரு காரணம். கள்ள வியாபாரம் ஒரு காரணம்; அமெரிக்கர், ஆங்கிலேயர், ஆப்பிரிக்கர் முதலான எத்தனையோ நாட்டினருக்குத் தீனி போட்டது ஒரு காரணம் — இப்படிப்பட்ட பல காரணங்களால் இன்று உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தார் இப்படிச் செய்தார்கள். அப்படிச் செய்யத் தவறிவிட்டார்கள் என்றெல்லாம் எவ்வளவோ சொல்லிக் காட்டலாம். அதனால் இப்போது உணவு வந்துவிடாது. உணவில்லாமல் இறப்பது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டால், இறப்பவர்கள் அன்னியரல்லர்; நம் ஏழை மக்களே. எனவே, இதை நாம் மனத்தில் இருத்தி, இனிச் செய்ய வேண்டுவது யாது என்பதைச் சிந்திப்போம்.

ஒரு விஷயத்தில் நாம் புண்ணியம் செய்தவர்கள். பட்டினி, உணவுப் பஞ்சம் என்று மேலை நாடுகளில் ஏற்பட்டதானால், மக்கள் தாங்க முடியாது. பொதுவாய்க் குளிர்நாடுகளில் உடலுக்கு வெப்பம் அதிகம் தேவையானபடியால், உணவும் அதிகம் தேவை. உணவு கிடைக்காதபோது, அங்கு மக்கள் பெருவாரியாய் மடிவார்கள். பஞ்சத்தால் வங்க மக்கள் 35 லட்சம் பேர் மடிந்த துயரக் கதையை நாம நேரில் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழ்நாடு குளிர் நாடன்று, வெப்பநாடு; இங்கு உடலுக்கு வெப்பந் தர வேண்டி, அதிக உணவு வேண்டியதில்லை. ஏதோ சொற்பக் கூழோ கஞ்சியோ கிடைத்தாலும, அதை உண்டு நம் மக்கள் நன்றாகவே ஓரளவுக்கு வாழ முடியும். வங்கத்தில் ஏற்பட்டவை போன்ற பட்டினிச் சாவுகள் இங்கு ஏற்பட மாட்டா.

இனி, உணவுப் பஞ்சம் சம்பந்தமாக, சர்க்காரே எதையும் சாதித்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பது பயனுடையதாகாது. வெள்ளையர் கறுப்பர் என்ற நிறபேதத்தால் வந்த நிறத் திமிரும், அதிகார மமதையும், ஏகாதிபத்தியச் சுரண்டலுமே மூல மந்திரங்களாயுடைய அதிகார வர்க்கத்தை நம்பியிருத்தலும் அறிவுடைமை யாகாது. அரசாங்கத்தார், 'செய்யவேண்டுமே' என்ற கடமைக்காக ஏதேனும் செய்ய முன்வரலாம்; இதெல்லாம் அந்தந்தச் சந்தர்ப்பத்தை யொட்டி, 'மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோலொக்கும்' என்றபடி, பலன் தந்தாலும தரலாம். அதை

நாம் குறைகூறவேண்டியதில்லை ; ஆனால் நம்பி யிருக்கவும் வேண்டியதில்லை. நம்மவர் வாழ வேண்டும் என்ற உணர்ச்சி மேலீட்டால், மிகவும் கஷ்டப்பட்டேனும் சிறந்த காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும்.

நகர மக்களுடைய வாழ்க்கையும் நாட்டுப்புறத்து மக்களுடைய வாழ்க்கையும் வெவ்வேறா யிருக்கின்றன. தொழிலாளர் வாழ்க்கை முறை வேறு, செல்வர் வாழ்க்கை முறை வேறு. எனவே, உணவுப் பஞ்சத்தைப் போக்குவது சம்பந்தமாய் அவரவர் உதவும் விதமும் வெவ்வேறா யிருக்கும்.

அரிசிப் பங்கீட்டை முக்கால் பங்காகக் குறைக்கவேண்டு மென்ற ஒரு யோசனை இருந்து வருகிறது. சில இடங்களில் இதை வழக்கத்தில் கொண்டு வந்தும் இருக்கிறார்கள். முழு உணவு சாப்பிடுகிற மனிதன் முக்கால் உணவில் காலந்தள்ள முடியுமா என்றெல்லாம் கேள்வி கேட்பதற்கு இது காலமல்ல. ஏனெனில், பொதுவாகவே, உணவு குறைவு என்று தெரியும்போது, பங்கீட்டைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்தக் குறைப்பு எல்லோரையும் ஒரே விதமாகப் பாதிக்கிறதென்று கருத முடியாது. இதனால் பாதிக்கப்படுகிற மக்கள் தொகையை நான்கு விதமாகப் பிரிப்போம். முதலாவதாக நகர வாழ்க்கை. இதில் ஒன்று: உழைப்பாளிகளாயும் தொழிலாளிகளாயு முள்ளோர்—அதாவது, உடல் வருந்தி யுழைத்து உயிர் வாழ்வோர். இரண்டு: செல்வர்களும் நடுத்தர வாழ்க்கையுடையோரும். இவர்களில் செல்வர்கள், உழைப்பென்பதையே அறியாமல் ' நகத்தில் அழுக்குப்படாமல் ' வாழ்க்கை நடத்துபவர்கள் ; செல்வம் காரணமாக, இவர்கள் வேலையை யெல்லாம் மற்றவர்கள் செய்கிறார்கள். உண்பதும் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதும் தவிர, இவர்களுக்குக் கஷ்டமான வேலை எதுவுமில்லை. நடுத்தர வாழ்க்கைநிலையி லுள்ளோருக்கும், இங்ஙனமே உடற் பிரயாசையுள்ள வேலை சிறிதும் இராது. இவர்கள் பெரும்பாலும் பெரிய காரியாலயங்களிலும் செல்வர்களின் கீழும் குமாஸ்தாக்களாகவும், பலவகை வியாபாரங்களில் ஈடுபட்டவர்களாகவும இருப்பார்கள். மற்றது, நாட்டுப்புற வாழ்க்கை ; இதிலும் இரண்டு பிரிவு உண்டு. மூன்று : உழைப்பாளிகளும் தொழிலாளிகளுமா யுள்ளோர் ; கலப்பை பிடித்து உழுகிறவர்கள், மண்வெட்டி பிடித்துக் கொத்துகிறவர்கள், சேற்றிலிறங்கி நடவு நடுகிற பெண்கள், சம்மட்டி பிடித்து அடிப்போர் ஆகிய எல்லோரும் இவ்வகையினர். நான்கு : செல்வர்களும், நடுத்தர வாழ்க்கையுடைய விவசாயிகளும். இந்த நான்கு வகையான மக்களையும் பங்கீட்டுக்

குறைவு எப்படிப் பாதிக்கும் என்பதையும் இவர்களில் யார் யாருக்கு எவ்வகையில் உதவமுடியும் என்பதையும் சற்று விளக்கமாகப் பார்ப்போம். நாட்டுப்புறங்களில் பங்கீட்டு முறை இன்னும் வரவில்லை. ஒரு வேளை வராமலே போகலாம். போனாலுங்கூட, மக்களுக்குப் பொறுப்பிருக்கிறது. இந்தப் பொறுப்பை யுணர்ந்து எல்லோரும் எப்படி நடக்கலாம் என்பதையே இங்குக் குறிப்பிடுகிறோம்.

26

நகரத் தொழிலாளர்

இங்கே குறிப்பிட்ட நான்கு வகையினருள் முதல் வகையினருக்கு, குறைந்த பங்கீடாகிய முக்கால் பங்கீடு என்பது போதவே போதாது. முழுப்பங்கீடும் இவர்களுக்கு அவசியம் தேவைதான். நகர வாழ்க்கையிலுள்ள போலி நாகரிகச் சின்னங்களான பீடி, சுருட்டு, காப்பி தேயிலைக் குடி முதலியன இவர்களிடம் மிகவும் அதிகம். இவை காரணமாகவே இவர்கள் உணவு குறைந்து போயிருக்கிறது. இந்தப் பழக்கங்கள் இல்லாதவர்களா யிருந்தால், தொழிலாளிகளுக்கும் உழைப்பாளிகளுக்கும் சராசரி ஒன்றேகால் பங்கீடு வேண்டியிருக்கும். ஆனால் நினைத்தபோது தேநீர் குடிப்பதும் பீடி பிடிப்பதும் மலிந்துபோன காரணத்தால், இவர்களுக்குச் சாப்பாடு குறைந்து, ஒன்றேகால் பங்கீட்டு அளவு என்பது ஒரு முழுப் பங்கீட்டு அளவு என்ற நிலைக்கு வந்திருக்கிறது. இதை முக்காலாக்கிவிட்டால், இவர்களுக்குப் பெருத்த கஷ்டம் என்பது தெளிவு. சாப்பாடு போதாது என்றால், வேலை எப்படி நிறைவேறும்? இவர்கள் வேலையோ, உடற்பிரயாசை மிகுதியும் வேண்டியிருக்கிற வேலை. காய்ந்து கிடக்கிற வயிற்றோடு வேலை நடவாது. எனவே, இவர்கள் விஷயத்தில் ஏதேனும் பரிகாரம் தேவை. சர்க்காரோ அல்லது பங்கீட்டு அதிகாரிகளோ, ஏதேனும் பரிகாரம் அல்லது உதவி செய்யக் கூடும் என்று எதிர்பார்ப்பது பயனற்ற காரியம். ஏனெனில், திட்டப்படி முக்கால் பங்கீடு கிடைப்பதற்கான காரியங்களைச் செய்வதற்கே அவர்களுக்கு நேரம் சரியாயிருக்கும். தவிர, தேசத்துக்கே பொதுவாய்க் குறைவாயுள்ள உணவு நிலைமையைச் சமாளிப்பதே அவர்களுக்குப் பெருங் கஷ்டம்; எனவே, முக்காலுக்கு அதிகமாய்ச் சிலருக்கு மட்டும் முழுப் பங்கீடு தரும்படி அவர்களைக் கேட்பது நியாயமாகாது.

ஆகவே, இந்தக் குறைவைச் சம்பந்தப்பட்டவர்களே சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். கடையிலே, கேழ்வரகு, கம்பு, சோளம்

முதலியன கிடைக்கின்றன. வேர்க்கடலையும் கிடைக்கிறது. எந்த அளவுக்குப் பங்கீட்டரிசி குறைந்து போகிறதோ அந்த அளவுக்கு எல்லோரும் இத்தவசங்களை உபயோகிக்கவேண்டும். உணவு அதிகமாய்ச் சாப்பிடுபவர்கள், தினம் ஒரு வேளை அரிசியுணவும் ஒரு வேளை இத்தகைய புன்செய்த் தவசம் அல்லது கடலையுணவும் வைத்துக் கொள்ளலாம். பழக்கமில்லாமையால் முதலில் இது வாய்க்குச் சற்றே பிடிக்காமலிருக்கலாம். ஆனால் வயிற்றுக்கும் உடம்புக்கும் பிடிக்காமலிராது. கேழ்வரகு மாவைக் குழந்தை முதல் முதியவர்கள் வரையில் எல்லோரும் உண்ணலாம். கரைத்து வேகவைத்துக் கஞ்சியாகவும் சாப்பிடலாம். அல்லது கம்பு, சோளம், கேழ்வரகு என்பவற்றின் மாவை அடைதட்டிச் சாப்பிடலாம். வாய்க்கு ஏற்றபடி பக்குவம் செய்து உண்பதற்கு எத்தனையோ முறைகள் நம் மக்கள் அறிவார்கள். இப்படித் தினமொரு வேளை உண்பதனால், இந்த மக்களுடைய உடல் திண்மை அதிகமாகும். முன்னிலும் திறமையாக வேலை செய்யவும் சம்பாதிக்கவும் முடியும். ஆரோக்கியம் குறையாது, சோர்வு வராது.

போதிய அளவு கேழ்வரகு முதலான புன்செய்த் தவசங்களோ கடலையோ கிடைக்காத இடங்களில், சர்க்காரும் பங்கீட்டு அதிகாரிகளும், பிற இடங்களிலிருந்து இவற்றைத் தருவித்துப் பங்கீட்டுக் கடைகளிலேயே வைத்து, கட்டுப்பாடான விலையில் ஏழை மக்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது முக்கியம். அன்றியும் வேர்க்கடலையானது இன்று முழுமையும் எண்ணெய் பிழிவதற்கே உபயோகப்படுகிறது. பச்சை வேர்க்கடலையை ஏழை மக்கள் மட்டுமன்றி எல்லா வகை மக்களும் உபயோகிக்கும் பழக்கத்தைப் பெருக்கி, நகர்ப்புறங்களில் இன்னும் ஏராளமாக வேர்க்கடலை வரவழைத்து வினியோகம் செய்யவேண்டும். காய்கறிகளை அதிகமாக உபயோகிப்பது பயனுடையதா யிருக்கும். ஆனால், தொழிலாளர் அனைவரும் ஏழைகளானமையாலும், காய்கறிகள் விலை அதிகமா யிருக்கிறபடியாலும், இது செயல்முறைக்கு ஒத்து வராது. ஆனால், குறைந்த விலைக்குக் கிடைக்கவேண்டியது கீரை; முக்கியமாக, முளைக்கீரை, முருங்கக்கீரை, அகத்திக்கீரை என்று மூன்று. இவற்று ளொன்றைத் தினந்தோறும் காலணாவுக்கேனும் தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றும் வாங்கி உபயோகிப்பது, அந்த அளவுக்குப் பங்கிட்டுக் குறைவை நிவர்த்தி செய்யும். கீரையில் எவ்வளவோ உணவுச் சத்து இருக்கிறதென்று எல்லோரும் பிரசாரம் செய்திருக்கிறார்கள். எனவே, மேற்கூறியவாறு, கம்பு கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை, கீரை என்பவற்றை உபயோகிப்

பதன் மூலம் ஏழைத் தொழிலாளி மக்கள் பங்கீட்டுக் குறைவால் எவ்விதக் கஷ்டமு மடையாமல் இந்த உணவுப் பஞ்ச காலத்தில் காலந்தள்ள முடியுமென்று கூறலாம்.

27

நகரத்துச் செல்வரும் நடுத்தர வாழ்க்கையினரும்

இனி, இரண்டாவது வகையினர் : நகரத்துத் செல்வர்களும், நடுத்தர வாழ்க்கை யுடையவர்களும். பொதுவாக இவர்களுக்கு உடற் பிரயாசை இல்லாதபடியாலும், காப்பிக் குடி முதலான பழக்கங்கள் இவர்களிடம் இருக்கிறபடியாலும், இவர்களுக்குச் சாப்பாடு அதிகம் செல்லாது. பெருந் தீனிக்காரர் என்று கூறக் கூடிய சிலரைத் தவிர மற்றெல்லோருக்கும் முக்கால் பங்கீட்டு அரிசியே போதுமானதா யிருக்கும். பங்கீடு போதவில்லை என்ற புகார் இவர்களிடம் எழாது. இந்த முக்கால் பங்கீட்டிலும் இவர்கள் தாங்களாகவே குறைத்துக்கொள்ள அதிக இடமிருக்கிறது. இதன் மூலம் பஞ்ச நிவாரணத்துக்கு இவர்கள் உண்மையிலேயே பேருதவி செய்யமுடியும். என்னென்ன வழிகளில் இவர்கள் உதவக் கூடுமென்பதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

சாதாரணமாய் இந்த மக்களுக்கு உணவு என்பது இரண்டு வேளை மட்டுமல்ல, நான்கு வேளை. மத்தியானச் சாப்பாடும் இராச் சாப்பாடு மட்டுமே சாப்பாடு: அதாவது அரிசிச் சோறு, மற்ற இரண்டும் பலகாரச் சாப்பாடு; 'டிபன்', 'இரண்டாம் வேளை' என்ற பெயர்களால் இவை வழங்கும். இவற்றுள் சிக்கனம் சாத்தியமானதே. சிக்கனம் என்றால், சாப்பாட்டை விட்டு விடுவதல்ல; மாற்றிக்கொள்வதுதான். குறைத்துச் சாப்பிடும்படி சொல்லவே இல்லை; பலகாரத்துக்கு உபயோகிக்கும் தானியத்தை மாற்றிக் கொள்ளவே சொல்கிறோம். இட்டிலி, தோசை என்ற இரண்டு பலகார வகைகள் தமிழருடைய ஏகபோக உரிமைகள்; இவற்றோடு கூட, உப்புமா, இடியாப்பம் முதலியனவும் உள்ளன. இவை யாவும், பெரும்பகுதி அரிசிமாவுப் பலகாரங்கள். நாட்டிலுள்ள பஞ்சத்தை மனத்தில் எண்ணி, செல்வர்களும் நடுத்தர வாழ்க்கை யுடையவர்களும், தாமாக மனமுவந்து அரிசிப் பலகாரத்தைக் குறைத்துக்கொள்ள முடியும். 'இரண்டு வேளை முழுச் சாப்பாட்டுக்குமட்டும் நாங்கள் அரிசி உபயோகிப்போம். இனி, பலகாரத்துக்கு அரிசி உபயோகிக்க மாட்டோம்' என்று இவர்கள் தீர்மானம் செய்வார்களே யானால், எவ்வளவோ மிச்சமுண்டு. இந்த நான்கு

வேளை உணவுக்கும் அவர்களுக்கு முக்கால் பங்கீட்டு அரிசி போதுமானது; இப்படிப் பலகாரத்துக்கு அரிசி வேண்டாம் என்று அரிசியைக் குறைத்துவிட்டால் அரைப்பங்கீட்டரிசியைக் கொண்டே இவர்கள் எவ்விதக் கஷ்டமுமில்லாமல் காலந்தள்ள முடியும். வேண்டாமென்று இவர்கள் ஒதுக்கிவிடுகிற கால் பங்கீட்டால் ஏழை மக்களுக்கு—முக்கியமாக, முழுப்பங்கீடும் தேவையுள்ள உழைப்பாளிகளான மேற்கூறிய மக்களுக்கு—பெருத்த உபகாரமாயிருக்கும். நடுத்தர மக்களே தங்களுக் குரிய முக்கால் பங்கீட்டையும் வாங்காமல் அரைப் பங்கீட்டை வாங்கிக்கொண்டு மிச்சத்தை விட்டுவிடலாம்; அதிகாரிகள் இம்மிச்சத்தை உழைப்பாளிகளுக்கோ, பஞ்ச நிவாரணத்துக்கோ தக்கபடி உபயோகிக்கலாம். அல்லது அவர்களே வாங்கி மிச்சப்படுத்தி உழைப்பாளிகளுக்குக் கொடுக்கலாம்; ஆனால் இதில் பதுக்கல் எண்ணம் இருத்தலாகாது.

'இட்டிலி தோசையை விட்டுவிடு' என்று தமிழனுக்குச் சொல்வது எளிது. ஆனால் முடியுமா? மனமிருந்தால் முடியும். சில வருஷங்களுக்குத்தானே இப்படிச் செய்யவேண்டியிருக்கும்? தவிர, தேசமக்கள்—தமிழ் மக்கள்—அனைவருமே இப்படி அரிசியைக் குறைத்துப் பிற தானியங்களை உபயோகிப்பதனால், சமூகத்துக்கே புத்துயிரும், புதுப்பலமும் ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும். இது ஒரு புறமிருக்க, அரிசியைக் குறைத்தால், அதற்குப் பதில் வேறு எதை உபயோகிப்பது என்ற கேள்வி எழுகிறது. முன்னமே கூறியவற்றையே இங்கும் குறிப்பிடலாம். கம்பு, கேழ்வரகு, சோளம், வேர்க்கடலை முதலியவற்றைப் பலகாரம் செய்ய உபயோகித்துக் கொள்ளலாம். பட்டாணி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு முதலியன கிடைக்குமிடத்தில் இவற்றையும் பலகார வேளைக்குரிய பிரதான உணவாய்க் கொள்ளலாம்.

இக்காலத்தில் நகரப் பிரதேசங்கள் விரிவடைந்துவருகின்றன. நகரங்கள்தோறும், தோட்ட வீடுகள் கொண்ட பகுதிகள் புதிதாய் அமைக்கப்பெறுகின்றன. முக்கியமான பெரிய நகரங்கள் அனைத்திலும் தோட்ட வீடுகள் அதிகமாக ஏற்பட்டுள்ளன. இங்கெல்லாம் பெரும்பாலும் வீட்டருகே ஒரு கிணறு இருக்கிறது கிணற்று நீரைப் பாய்ச்சி, அவரவர் தோட்டத்தில் முக்கால் பகுதிக்கு மேலாகக் காய்கறிகளைப் பயிராக்கிக் கொள்வது மிகவும் எளிதான காரியம். சில காய்கறி வகைகளை இங்குக் குறிப்பிடுவோம். மிகவும் எளிதில் பயிராகிப் பலன் தருபவை, கீரை வகைகள். இப்படித் தோட்ட வசதியுள்ளவர்கள் தினம் ஒரு கீரை உண்பதென்று, சங்கல்

பம் செய்துகொள்ளலாம். மிக்க விரைவில் கிடைக்கக்கூடிய கீரைகள் : முளைக்கீரை, அரைக்கீரை, பசலை, பொன்னங்கண்ணி, சீமைப் பொன்னங்கண்ணி, வெந்தயக்கீரை என்பன ; ஒரு மாதத்தில் இவை பயன்பட ஆரம்பிக்கும். ஒரு வருஷத்தில் உபயோகத்துக்கு வரத் தக்கவை - முருங்கை, அகத்தி என்பன. வாரம் ஏழு நாளைக்கும் ஏழு வகைக் கீரை என்று உறுதிசெய்து கொள்ளலாம் : உதாரணமாக : ஞாயிறு - முருங்கை ; திங்கள் - முளைக்கீரை ; செவ்வாய் - வெந்தயக்கீரை ; புதன் - பொன்னங்கண்ணி வகை ; வியாழன் - அகத்தி ; வெள்ளி - பசலை வகை ; சனி - அரைக்கீரை, சிறு கீரை அல்லது மணத்தக்காளி. இப்படிக் கீரை வகைகளைச் சேர்ப்பதால், முதல் லாபமாவது, செலவு மிச்சம். இரண்டாவது, இவற்றில் அதிகமாயுள்ள உலோகச் சத்து, வைட்டமின் சத்து, என்பன உடம்புக்குக் கிடைக்கின்றன. மூன்றுவது, இந்த உணவுப் பஞ்ச காலத்தில், எவ்வளவோ உணவு மிச்சமாகிறது

ஒவ்வொருவரும் சராசரி முப்பது கவளம் அன்னம் உண்கிறோம் என்று வைத்துக்கொள்வோம் பருப்பு, குழம்பு, ரசம், மோர் என்ற நால்வகைச் சாதமும் இவற்றுக்கேற்ற கறிவகைகளும் இருந்தால் தான், கவளம் முப்பதும் உட்செல்லும். கறிவகைகள் இரண்டொன்று அதிகமாயிருந்து, பிடித்த சாப்பாடாயிருக்கும் பட்சத்தில், முப்பது, முப்பத்திரண்டு கவளமாக உள்ளே போகும் ; முப்பது சாப்பிடும் வயிறு, நாற்பது ஒருநாளும் கொள்ளாது. ஆனல் வெறும் மோரைமட்டும் விட்டு, ஒரு கறியோடு சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம் ; அப்போது சாப்பாடு செல்லாது. அதாவது வாய்க்கு ருசியின்மையால், முப்பது கவளத்துக்குப் பதிலாக, இருபது கவளமே செல்லும். (இது வயிற்றுக்குக் காணுமல் பசியை உண்டு பண்ணக் கூடும்.) நல்ல சுவையுடைய கீரையாகச் சமைக்கிறோம், நாலு கவளம் கீரை சாப்பிடுவோம் என்றல், ஏறக்குறைய அந்த அளவுக்குச் சாதம் குறைந்துவிடும். நல்ல கறிகளாய்க் கீரையோடு கூட மேலும் இரண்டு கறி சமைத்துச் சாப்பிட்டால், சாப்பாடு ருசியில், முப்பத்திரண்டு கவளம் உள்ளே செல்லலாம். இந்த முப்பத்திரண்டில், பதினறு கறிவகைகளாயும் மிச்சம் பதினறுதான் வெறும் அரிசிச் சாதமாயும் இருக்கும். எனவே, கீரையையும் பல வகைக் கறிகளையும் அதிகமாய்ச் சேர்த்துக்கொண்டால், அரிசிச் செலவு குறைகிறது என்பது வெளிப்படை.

மேலே கீரை வகைகளைக் குறிப்பிட்டபோது, கடையில் வாங்கும் நோக்கத்தோடு அவற்றைக் குறிப்பிடவில்லை, வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்ட கீரை என்ற முறையில்தான் அவற்றைக் குறிப்

பிட்டோம். காய் வகைகள் சிலவற்றையும் இங்கே சொல்லலாம். இவற்றுள் எக்காலமும் கிடைக்கும்படி செய்துகொள்ளத் தக்கவை: வாழை, முருங்கை என்பன தோட்டத்தில் எப்போதுமே இருந்து வருஷக் கணக்காய்ப் பலன் தந்துகொண்டிருக்கும் மரங்கள். வருஷத்தில் இரண்டுமுறை அல்லது மூன்றுமுறை விதைத்துப் பயிர் செய்துகொள்ளத் தக்கவை: கத்தரி, கொத்தவரை, வெண்டை என்பன. சிமைத்தக்காளி, அவரை, புடல், பீர்க்கு, பூசணி, பாகல் முதலியன பருவத்தில்மட்டும் பலன் தருபவை. இப்படியே சர்க்கரைவள்ளி, மரவள்ளி ஆகிய கிழங்குகளும் பருவத்தில்மட்டுமே பலன் தருபவை. இவை யாவும், முன்சொன்னபடி, நகரப் பிரதேசங்களில், தோட்ட வீடு கட்டி வாழும் செல்வர்களும் நடுத்தர நிலையுடையவர்களும் தங்கள் தோட்டத்தில் பயிர் செய்துகொள்வதற் குரியவை.*

'பனி பெய்தா கடல் நிரம்பப் போகிறது? இந்த அற்ப முயற்சிகளால் உணவுப் பஞ்சம் தீருமா?' என்று பலர் நினைக்கலாம். உண்மை இதுவன்று. எல்லோருக்கும் போதுமான காய் கறி கிடைக்காமையால் நகரத்தில் பலர், தேவைக்குத் தக்கபடி காய்கறி வாங்க முடிவதில்லை. தோட்டமுடையோர் தங்கள் காய்கறிகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொண்டு, கடையில் வாங்குவதைக் குறைப்பார்களானால், அந்த அளவுக்குப் பிறர் - தோட்டமில்லாதவர்கள் - தாராளமாய்க் காய்கறி வாங்கி உண்ண முடியும். இதனால் அரிசித் தேவையும் அதிக அளவு குறையும். பஞ்சத்தைச் சமாளிக்க இதுவும் தக்க உதவியல்லவா?

ஓர் உதாரணம் குறிப்பிடுவோம்: மாம்பலத்தில் எல்லாம் தோட்ட வீடுகள். ஆயிரம் வீடுகள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தார் சராசரி அரை வீசைக் காய்கறிதான் இன்று உபயோகிக்கிறார்கள். அதுவும் பெரும்பகுதி கடையில் வாங்கி உபயோகிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். வீட்டுத் தோட்டத்தில் கீரை, கத்தரி முதலியன மிகுதியாக உற்பத்தி செய்யத் தொடங்கினால், தினம் இரண்டு வீசைக்குக் குறையாமல் அவர்கள் உபயோகிக்க முடியும். இதில் கால் பங்காவது அரிசிச் சாப்பாடு குறையுமென்று கருதலாம்; அதாவது அரை வீசை அரிசி; இது குடும்பமொன்றுக்குச் சுமார் ஒன்றரைப் பவுண்டு அரிசி மிச்சம். ஆயிரம் குடும்பங்

*இக் காய்கறி, கீரை வகைகளையும் இங்குக் குறிப்பிடாத பிறவற்றையும், சக்தி காரியாலய வெளியீடான காய்கறித் தோட்டம் என்ற எனது புத்தகத்தில் விரிவாய்க் காணலாம். தோட்ட மில்லாதவர்களும் தொட்டியில் பயிரிட்டுப் பலன்பெறத் தக்க லாபகரமான முறையையும் அதனுள் விளக்கமாய்க் காணலாம்.

களுக்கு ஒரு மாதம் எவ்வளவு மிச்சமென்று கணக்கிட்டால், சுமார் 20 டன் அரிசி மிச்சமாகு மென்று சொல்லலாம். இந்த அரிசி, ஆயிரம் பேருக்கு ஒரு மாதத்துக் குரிய அரிசியுணவாகும். எனவே, காய்கறியைத் தோட்ட முள்ளோர் தாங்களே ஏராளமாய்ப் பயிரிட்டு நிறைய உபயோகிப்பதனால் உண்டாகும் அரிசி மிச்சம் கொஞ்சமென்று சொல்ல முடியாது. சென்னையில் தோட்டமுள்ள இடங்களான மாம்பலம், மயிலாப்பூர், தண்டையார் பேட்டை முதலிய இடங்களிலுள்ளோர் இவ்வாறு காய்கறித் தோட்டம் போட்டு, (விற்பனைக்காக அல்ல) மிகுதியாகத் தாங்களே உபயோகிப்பார்களானால், சென்னை நகரத்துக்கு வரவிருக்கும் பஞ்சத்தில் மூன்றிலொரு பங்கு குறையுமென்பது நிச்சயம்

எனவே, இப்படிப்பட்ட இடங்களில் தோட்ட வீடு உடையோர், ஒரே சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும். 'இன்று கீரை விதைப்போம்; அடுத்த மாதம்முதல் நாம் கடையில் காய்கறி வாங்குவதில்லை. இப்போதைப்போல் நான்கு மடங்கு அதிகமாகக் காய்கறி உண்போம்' என்று உறுதி செய்துகொள்ளவேண்டும். அபூர்வமாக உருளைக்கிழங்கோ, முட்டைக்கோஸோ இவர்கள் கடையில் வாங்கலாம். மற்றவை வாங்குதல் கூடாது என்ற உறுதிவேண்டும்.

இதனோடு கூட, இன்னும் ஒரு நல்ல காரியம் இவர்கள் செய்தல் கூடும். கீரை பயிரிடுவது மிகவும் எளிது. பயிரிடும் கீரையில் தினம் ஒரு பிடி கீரை, தங்கள் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரன் அல்லது வேலைக்காரிக்குக் கொடுப்பது எவ்வளவோ பயனுடையது.

> வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பில்,
> தூங்கும் களிறோ துயருறா; - ஆங்கு அதுகொண்டு
> ஊரும் எறும்புஇங்கு ஒருகோடி உய்யுமால்
> ஆருங் கிளையோடு அயின்று.

என்ற அருமைத் திருவாக்கை நினைவுகூர்தல் வேண்டும். செல்வர்களுக்கு ஒரு பிடிக் கீரையினால் நஷ்டம் யாதும் இல்லை. அவர்களிடம் ஊழியம் செய்யும் ஏழை மக்களுக்கு அது அரைக்கால் வயிறு நிறைக்கும் என்பதை அச்செல்வர் நினைப்பார்களாக.

28

நாட்டுப்புறத்துத் தொழிலாளர்

இத்தொழிலாளரில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டவர்கள். நம்நாட்டுப் பயிர்த்தொழில் முறையில் உள்ள ஒரு நல்ல பழக்கமே இவர்களைச் சோற்றுப் பஞ்சம் நெருங்காதவாறு காப்பாற்றி வருகிறது. அதாவது, இவர்கள்

செய்யும் வேலைக்குப் பணமாகக் கூலி கொடுக்கும் வழக்கமில்லாமல், நெல்லாகவே கூலி கொடுக்கும் வழக்கம். இது காரணமாக எப்படியோ இவர்கள் உணவுக்குக் கஷ்டப்படுவது இல்லை. துணிமணிகளுக்கும் பிற வாழ்க்கை வசதிகளுக்கும் இவர்கள் ஒருவேளை அதிகக் கஷ்டப்பட நேரலாம். சோற்றுக் கஷ்டம் மட்டும் இருப்பதில்லை.

கிராமாந்தரங்களில் அரிசிப் பங்கீடு வந்துவிடப் போவதில்லை. எனவே, இவர்களுக்கு அரிசிப் பங்கீடு முழுப்பங்கீடா முக்கால் பங்கீடா என்ற பிரசினையே எழாது. எனினும், ஒரு லட்சிய நிலையில், இவர்களுக்கும் பங்கீடு என்று வந்து, முக்கால் பங்கீடு என்று ஏற்பட்டால், நிலைமை எவ்வாறிருக்கும் என்று ஆராய்வது பொருத்தமுடையது. பொதுவாக இந்தத் தொழிலாளிகளனைவருக்கும், முழுப் பங்கீடே போதாது; எனவே, முக்கால் பங்கீடு என்ற பேச்சுக்கு இடமில்லை. பயிர்த்தொழில் செய்யும் உழவர் முதலான தொழிலாளருக்குக் குறைந்தது ஒன்றரைப் பங்கீடு முதல் இரண்டு பங்கீடு அளவு வரையில் வேண்டும். பங்கீடு ஒன்றுக்கு எவ்வளவு அரிசி என்று அதிகாரிகள் கணக்கு வைத்திருக்கிறார்களோ, அது உழவர்களுக்குப் போதவே போதாது. அவர்களுடைய உழைப்புக் கடின உழைப்பானபடியால், உணவும் அவர்களுக்கு அதிகமாகவே வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உணவு அவ்வளவும் அரிசியாகத்தான் வேண்டும் என்ற நியதி அவர்களுக்கு இல்லை. தவிர, கடின உழைப்புக்கு அரிசியுணவுமட்டும் போதியதில்லை. கேழ்வரகு, கம்பு சோளம், காராமணி, கடலை என்பன அவர்களுக்கு முக்கியமான உணவாயுள்ளன; இவற்றுக்கு அடுத்தபடியாகத்தான் அரிசி இருக்கிறது. ஆகவே, பங்கீடு என்று வரும்போது அரிசியில் எவ்வளவு குறைந்தாலும், அதைப்பற்றி அவர்கள் விசேஷமாய்க் கவலைப்படமாட்டார்கள்; ஆனால் மேற்சொன்ன பிற தவசங்கள் கிடைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

ஆதலால், இத்தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இவ்வகை உணவுத் தவசங்கள் அளவில் அதிகமாயும் தாராளமாயும் கிடைக்கும்படி செய்வது, அரசாங்கத்தாருடைய பொறுப்பு மட்டுமன்று, எல்லா மிராசுதார்கள், விவசாயிகளுடைய பொறுப்புமாகும். ஏனெனில், நெல் முதலான தானிய தவசங்களின் சாகுபடி அவ்வளவும் இவர்களுடைய பேருழைப்பினால்தான் நடைபெற வேண்டியிருக்கிறது. அடிப்படையில் உணவு உற்பத்திப் பெருக்கமென்பது இம் மக்களுக்குத் தாராளமாய் உணவு கிடைத்தால்தான் சாத்தியம்.

நாட்டுப்புறத்துச் செல்வரும் நடுத்தர நிலையினரும்

இந்தத் தலைப்பில் குறிப்பிடுவது, மிராசுதார்களையும் பண்ணையார்களையுமாகும்; பெரிய மிராசுதார்கள், சின்ன மிராசுதார்கள் ஆகிய எல்லோரையும் இத்தலைப்பில் சேர்த்துக் குறிப்பிடுகிறோம். உணவுப் பொருள் உற்பத்தி சம்பந்தமாகவும், உற்பத்திப் பெருக்கம் சம்பந்தமாகவும், முக்கியமாகத் தமிழ்நாட்டில் இவர்களுடைய பொறுப்புப் பெரிது. அரசாங்கத்தார் பொறுப்பைவிடவும் இவர்களுடைய பொறுப்புப் பெரிது. அரசாங்கத்தார், விளைந்த நெல்லைப் பங்கீடு செய்கிறார்கள். மற்றப்படி, ஏதோ வாய்க்காலில் வரும் நீரைத் தேக்கித் திறந்துவிடுகிறார்களே யன்றி, வேறெந்தக் காரியமும் பயிர்த் தொழில் சம்பந்தமாய்ச் செய்துவிடவில்லை. ஆனால், இந்த தார்களே எல்லா வேலைக்கும் காரணரா யிருக்கிறார்கள். இவர் மிராசுகளில் தாங்களே உழுவோரும் உண்டு; ஆள் வைத்து உழுவோரும் உண்டு. இன்னதுதான் சாகுபடி செய்யவேண்டும், இவ்வளவு மாசூல் அறுவடை செய்யவேண்டும் என்று இவர்களை யாரும் கட்டாயப்படுத்துவதற் கில்லை. நல்லதோ கெட்டதோ, பக்குவமோ பக்குவமில்லையோ, நெல்போன்ற தானியமோ அல்லது கேழ்வரகுபோன்ற தவசமோ—எதுவாயினும் இவர்கள் மனம் வைத்துப் பயிர் செய்தால்தான் உண்டு. ஆகவே உணவுப் பொருள் உற்பத்தி என்பதில் இவர்கள் பொறுப்புப் பெரிது என்பது தெளிவு.

பங்கீடு என்று வந்தால் இவர்களுடைய நிலைமை என்ன? நெல்லை விளைவிப்பவர்கள் இவர்களே யாதலால், பங்கீட்டுக்கு இவர்களே நெல் தருபவர்கள் ஆகிறார்கள். ஆதலால், கொடுக்குமுன், இவர்கள் தங்கள் தேவைகளுக்கு வேண்டியது முழுமையும் எடுத்து வைத்துக்கொண்டு, மிச்சமுள்ளதை மட்டுமே பங்கீட்டுக்கோ விற்பனைக்கோ தரமுடியும். என்னென்ன செலவுகளுக்காக இவர்கள் நெல் ஒதுக்கிவைக்கிறார்கள்:

க. விதை நெல்.

உ. தசுக் கூலி.

ங. மராமத்துச் செலவு.

ச. சாப்பாட்டு நெல்,

ரு. தொழிலாளி வர்த்தனைகள்.

இந்தச் செலவினங்கள் ஒவ்வொன்றிலும் விவசாயியின் தேவை என்ன, எவ்வளவு அவர் செலவு செய்வார் என்பதை நிர்ணயிப்பது

எளிதல்ல ; நிர்ணயித்தாலும், அதை அமுலுக்குக் கொண்டுவருவது கடினம்.

முதலாவதாக, விதை நெல் என்பதைக் கவனிப்போம். இவ்வளவு நிலத்துக்கு இவ்வளவுதான் விதை நெல் வேண்டும் என்பதைச் சுமாராக யாரும் நிர்ணயிக்கலாம். ஆனால், ஒன்றுக்கு இரண்டு பங்காக விதை எடுத்துக் காயப்போட்டுக் கோட்டை கட்டி வைப்பதுதான் மிராசுதார் வழக்கம். 'விதைக்கு ஒரு பங்கு போதுமே, இரண்டு ஏன் வைத்திருக்கிறீர்? பாதியை விலைக்கு விற்றுவிடும்' என்று மிராசுதாரைச் சர்க்காரோ அதிகாரியோ கேட்பது சரியாகாது. இதற்குக் காரணங்கள் பல. களத்தில் விதை காயப்போட்டது, காய்ச்சல் போதாமலிருக்கலாம், அல்லது நெல் கொஞ்சம் பசுமையாயிருந்திருக்கலாம். இவற்றால் விதைப் பழுது ஏற்படக்கூடுமோ என்றஞ்சி, விவசாயி அதிக விதை வைக்கிறார். அல்லது ஒருமுறை விதை தெளித்தபின் நீரின்மையால் நாற்றுக்கள் காய்ந்துபோக நேரிட்டு, மறுபடியும் இரண்டாம்முறை விதை வேண்டியிருக்கக்கூடும். அல்லது வெள்ளப் பாழ் ஏற்பட்டு, மறுபடியும் விதை தெளிக்க நேரலாம். அல்லது தம்மோடொத்த வேறெந்த விவசாயிக்கேனும் விதை நெல் கெட்டுப்போய் விதை வேண்டியிருக்கலாம். இப்படிப் பட்ட நிலைமைகளில், அவசரமாய் விதை வேண்டுமென்றால் யார் கொடுப்பார்? வரி விதித்து வசூல் செய்வதுதான் சர்க்கார் பொறுப்பே யொழிய, விதை தருவது சர்க்கார் பொறுப்பன்று என்று சொல்லிவிடுவார்கள். நிலம் தரிசாய்க் கிடக்கிறதே என்ற கவலை விவசாயிக்குத்தான் ஏற்படுமே ஒழிய, சர்க்கார் வரி வசூல் நிற்காது, அவர்களுக்கு இந்தக் கவலையும் இராது. ஆதலால் இப்படிப்பட்ட அசாதாரண சமயத்தையும் எதிர்நோக்கி, விவசாயி அதிக விதை நெல் - அதாவது ஒன்றுக்கு ஒன்றரை அல்லது இரண்டு மடங்கு - எடுத்து வைப்பது வழக்கம் ; இது நல்ல வழக்கம் என்பதில் சந்தேகமில்லை. இதிலெல்லாம் போய்ச் சர்க்காரோ கொள்முதல் அதிகாரியோ தலையிடுவது விபரீதமாய் முடியும்.

தசுக் கூலி நெல் என்பதும் இப்படியேதான். வேலிக்குத் தசுக் கூலி இருபது கலம் செல்லும் என்றால், பின்னும் இருபது கலம் அதிகமாக வைத்திருப்பதே விவசாயி வழக்கம். அதிவிருஷ்டி அனாவிருஷ்டி போன்ற காரணங்களால், ஒவ்வொரு சமயம் சாகுபடிச் செலவு ஒன்றுக்கு இரண்டு பங்கு ஆகிவிடுதல் இயற்கை. இப்ப

டியே சில மராமத்துகள் திடீரென்று செய்யும்படி நேரிடலாம்; செய்ய உத்தேசித்தவை செய்யமுடியாமலும் போகலாம்.

இனி, நான்காவதாகிய சாப்பாட்டு நெல் என்பது, பெரும்பாலும் திட்டமாய்ச் சொல்லக்கூடியது; இதில் விசேஷமாய்த் திட்டத்துக்குமேல் கூடுதல் குறைதல் ஏற்படாது. ஆனால் இதிலும் ஓர் அம்சம் கவனித்தற் குரியது. விவசாயிகள் பெரும்பாலும் அந்தந்த வருஷத்து நெல்லை அந்தந்த வருஷம் உணவுக்கு உபயோகிப்பதில்லை. நெல்லாக அப்படியே ஒரு வருஷம் வைத்திருந்து, மறு வருஷம்தான் 'பழைய நெல்லை'க் குற்றி அரிசியாக்கி உபயோகிப்பார்கள். புது நெல்லை உபயோகிக்கமாட்டார்கள். ஆகவே, அவர்களிடம் சாப்பாட்டு நெல்லாக எப்போதும் இரண்டு வருஷத்து நெல் கையிருப்பிலிருக்கும். ஒரு வருஷத்து நெல்லை மட்டும் வைத்திருந்தால் போதும், மற்றதை விற்றுவிடவேண்டும் என்று அவர்களிடம் கூறுவது அவர்களுடைய பகைமையைத் தேடுவதாகும்.

தொழிலாளி வர்த்தனை என்பதில் என்னதான் அடங்கும், என்ன அடங்காது என்று வரையறை செய்யமுடியாது. வண்ணான், பரியாரி, தச்சன், கொல்லன், தலையாரி, வெட்டியான், வைத்தியன், நோக்கன், ஐயனார் கோயில் பூசாரி, புரோகிதர் - இத்தனை பேருடைய சம்பளமும் இந்தப் பகுதியில் செலவாக வேண்டும். தவிர, கிராமக் கணக்கப்பிள்ளைக்குத தக்ஷிணை, லஸ்கர், மேஸ்திரி தக்ஷிணைகள், வேறு பலவகையான பொங்கல் தீபாவளி இனம்கள்—எல்லாம் இந்தப் பகுதியிலதான் செலவாக வேண்டும். ஒரு வேலி நிலமுடையவருக்கு இச்செலவுகள் பத்துக் கல நெல்லோடு நின்றாலும் நிற்கலாம், இருபத்தைந்து கல நெல் ஆனாலும் ஆகலாம். தவிர, நினைத்த போதெல்லாம் பண்ணையாள் வந்து சாப்பாட்டுக் கில்லையென்று நிற்பான். அல்லது தன் 'மச்சா'னுக்குக் கல்யாணம்; அதற்கு மரியாதையும் விருந்தும் செய்யவேண்டும், பத்துக் கல நெல் வேண்டுமென்பான். மிராசுதார் இப்படிப்பட்ட சமயத்தில் அவனுக்கு நெல் உதவாவிட்டால், அவருடைய கௌரவம் அன்றோடு தொலைந்தது; அடுத்த வருஷம் அவருக்குச் சாகுபடி நடக்காது; பின்னர் ஆளைப் போய்க் கூப்பிட்டால், 'அன்றைக்கு வயிற்றுக்கு இல்லையென்று கேட்டேன். சர்க்கார் ரேஷன் பண்ணிவிட்டார்கள் என்று சொன்னாரு ஐயா, இப்போ வேலைக்குக் கூப்பிட வந்துவிட்டாரு, வேலைக்கு' என்று சொல்லிக் காட்டுவான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், மிராசுதார் ஒரு சமயம் சர்க்காருக்குப் பயப்படாமல், சர்க்காரை ஏமாற்றினாலும் ஏமாற்றலாம்; ஆனால், பண்ணையாளுக்

குப் பயந்து நடக்கத்தான் வேண்டும்; பண்ணையாளே செயல் முறையில் அவருக்கு யஜமானன்; பெயரளவில்தான் மிராசுதார் யஜமானர் என்பது.

மேலே கூறிய செய்திகளனைத்தையும் சர்க்காரும் பங்கீட்டதிகாரியும் ஞாபகம் வைக்கவேண்டும். தங்கள் இஷ்டம்போல் கணக்குப்போட்டு, அல்லது தங்கள் குட்டித் தேவதைகளின் சொற்படி ஏகராவுக்கு இத்தனை கலம் நெல் வசூல் செய்வது என்றெல்லாம் ஆரம்பிப்பது வெறும் பைத்தியக்காரத்தனமாய் முடியும். பத்து ஏகரா நிலம் உள்ளவன் ஒருவனுக்குக் குடும்பம் பெரிதாயிருந்து, விளைவு முழுதும் மேற்கூறிய ஐந்துவகைச் செலவுகளுக்கே கட்டி வருவதா யிருக்கும். இஸ்திச் செலவுக்குக்கூட அவன் கடன் வாங்க நேரிடலாம். 'ஒண்டிக்காரனு யுள்ள பக்கத்துவீட்டு ஐந்து ஏகராக்காரன், ஐம்பது கலம் நெல் விற்ருன், நீ நூறு கலம் நெல் கொடு' என்று கண்மூடித்தனமாகக் கேட்பதோ கட்டளையிடுவதோ சிறிதும் நியாயமாகாது. இது ஒரு நாளும் உணவுப் பஞ்சத்தைப் போக்க எண்ணும் சர்க்காரின் செயலாகாது.

ஆட்களைக் குறித்த பேச்சு வந்த இந்த இடத்தில் முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிடுதல் மிகப் பொருத்தமுடையது. 'பிளாக் மார்க்கெட்' (கள்ள வியாபாரம்) பற்றிய பேச்சு எங்கும் அதிகமாய்க் காதில் விழுகிறது. தொடக்கத்தில் நாமும் இதைக் குறிப்பிட்டிருக்கிறோம். நாட்டுப்புறங்களில இப்படிக் கள்ள வியாபாரம் பெருகுவதற்கு 'லைஸென்ஸ்' கொடுப்பதோடுகூடப் பலவகையான திருட்டுக்கள் பெருகவும் சர்க்காரே காரணமா யிருக்கிறுர்கள் என்ருல், இது வீண் அபவாதம் என்று சொல்லத் தோன்றும்; ஆனல் உண்மையில், சர்க்கார் லைஸென்ஸ் பெற்ற கள்ளுக்கடைகளே எல்லாவகையான கள்ள வியாபாரத்துக்கும திருட்டுக்கும் பிறப்பிடமா யிருக்கின்றன. ஆதலால் சர்க்கார் தரும கள்ளு லைஸென்ஸே சகலவகைக் கள்ளத் தொழிலுக்கும் லைசென்ஸாகிறது.

கிராமாந்தரங்களிலுள்ள கள்ளுக் கடையில் நெல்லுக்குக் கள்ளுக் கொடுப்பதுதான் அதிகம். நெல் மாத்திரமல்ல; பண்டமாற்று என்பது மிகச் சிறந்த முறையில் அங்கு நடைபெறுகிறது. நெல், வைக்கோல், கோணிப்பை, அரிவாள், மண்வெட்டி, கோடரி, பாரை முதலான எல்லாப் பொருள்களையும் பெற்றுக்கொண்டு கள் விநியோகம நடைபெறுகிறது. தொழிலாளர் பலர் (உழவர்கள்) மாலை நேரத் தாக சாந்திக்காக, எதையும் திருடி விற்றுக் கள் குடிக்கத் தூண்டுதலா யிருப்பது இக்கள்ளுக்கடை. திருட

ஒன்றும் சாமான் கிடைக்காவிட்டால், நெல் திருடுகிறான்." அல்லது அன்று தனக்குக் கிடைத்த கூலி நெல்லைக் கொடுத்துவிடுகிறான். தானும் தன் குடும்பமும் நான்கு நாள் பட்டினி கிடந்தாலும் அவனுக்குக் கவலை யில்லை; எப்படியோ நெல்லைக் கள்ளுக்கடையில் போட்டுக் கள்ளுக் குடிக்கிறான். கிரமவிலை எட்டணாப் பெறுமான நெல் போட்டானானால், மூன்றணா விலையுள்ள ஒரு மொந்தைக் கள் கிடைத்தால் அவன் அதிர்ஷ்டம். இவ்விதம் ஒரு நாளைக்கு ஒரு நாட்டுப்புறத்துக் கள்ளுக்கடையில் வருவாகும் நெல் பத்துப் பன்னிரண்டு கல மிருக்கும். இவ்வளவும், கள்ளவழியில் வந்த தாகையால், 'கள்ள மார்க்கெட்'டுக்கே போகிறது. எனவே, இந்தப் பஞ்ச காலத்தில், கள்ளுக்கடைக்குச் சர்க்கார் கொடுக்கும் லைசென்ஸ் ஒவ்வொன்றும் (நாட்டுப்புறத்தைப் பொறுத்தவரை யில்) கள்ளக்கடைக்கு (பிளாக்-மார்க்கெட்டுக்கு)க் கொடுக்கும் லைசென்ஸ் என்றுதான் சொல்லவேண்டும்.

சர்க்காரோ, ஒரு பக்கம் கள்ளக்கடை ஒழிக என்று பிரசாரம் செய்கிறார்கள்; ஒரு பக்கம் கள்ளுக்கடைக்கு லைசென்ஸ் அமோகமாக வழங்குகிறார்கள். கள்ளுக்கடையின் வாழ்வே உண்மையில் கள்ளக் கடையின் வாழ்வு. கள்ளுக்கடையை அப்படியே வைத்துக்கொண்டு, கிராமத்தில் செய்கிற எந்தச் சீர்திருத்தமும், முன்னேற்ற ஏற்பாடும் பங்கீட்டு முறையும், உருப்பட முடியுமா என்பது சர்க்காரும் கள்ளக்கடைக்காரரும் கூடி முடிவு செய்யவேண்டிய விஷயம்.

இதுவரை முற்கூறிய நான்கு வகையினருள், நான்காம் வகை யினரான மிராசுதார் - விவசாயிகள் சம்பந்தமாய் உணவுப் பங்கீடு செய்வதில், சர்க்கார் கடமை எத்தன்மையது என்பதைப் பார்த் தோம். இந்த மிராசுதார், விவசாயிகள் கடமை என்னவென்பதை இனிக் கூறலாம்.

'உழவினார் கைம்மடங்கின் இல்லை—விழைவதூஉம் விட் டேம் என்பார்க்கு நிலை' என்ற அருமைத் திருக்குறள் எக்காலத் திலும் வாழ்க்கையில் எழுத்துக் கெழுத்து உண்மை என்பதை இவர் களனைவரும் நினைவுகூர்தல் வேண்டும். பயிர்த்தொழில் செய்பவர் கள் தங்கள் தொழிலைச் செய்வதில் சிறிதே சோம்பியிருப்பார்க ளாயின், உலகமே நிலை தவறிவிடும். ஆகவே, உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்களான இவர்கள், என்ன குறைகள் இருப்பி னும், தங்கள் தொழிலில் - உலகத்தின் பசிப்பிணிக்கு மருந்துவம் செய்யும் தொழிலாகிய நெற்சாகுபடி செய்வதில் - சிறிதேனும் அசிரத்தை காட்டலாகாது அரசாங்கம் எவ்வளவுதான் கடமை

யில் தவறிவிட்ட போதிலும், எவ்வளவுதான் அநீதி யிழைத்த போதிலும், சமூக நிலையிலும் வாழ்க்கை முறையிலும் எவ்வளவு கொடுமைகள் வந்து சூழ்ந்த போதிலும், அவற்றாலெல்லாம் மனங் கலங்காது, இவர்கள் தங்கள் தொழிலைச் செய்து வரவேண்டும்; செய்து வருவதோடு, நாட்டின் இன்றைய தேவையை உணர்ந்து, தங்கள் சாகுபடியைப் பல வகையாலும் பெருக்க, அறிவோடு முயல வேண்டும். தங்களுடைய நிலத்தில் எல்லாப் பகுதியிலும் சாகுபடி வேலை நடக்கவேண்டும்; வாய்க்கால்களில் தண்ணீர் கிடைக்கிற வரையிலும், சாத்தியமானவரையிலும் எல்லாக் காலத்திலும், சாகுபடி நடக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இவர்கள் வேலை செய்து வரவேண்டும்.

நெல் வயல்களில், அறுவடையாகும் சமயத்தில், பருவம் பார்த்து உளுந்து பயறு விதைப்பதைத் தவறாமல் விதைக்க வேண்டும். வரப்புக்களிலெல்லாம், துவரை உளுந்து பயறு முதலியவற்றை ஊன்றவேண்டும். களங்களில் பக்குவத்துக் கேற்றபடி துவரை உளுந்து காராமணி மஞ்சள் மிளகாய் முதலியவற்றைப் பயிரிடவேண்டும். வீட்டுத் தோட்டங்களில் தவறாது வாழை முதலியன பயிரிட்டுக் கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சுவதோடுகூட, ஏராளமான அளவில் காய்கறிகளைப் பயிரிடவேண்டும். முன்னமே, நகரத்து மக்களுடைய கடமையைக் கூறிய இடத்தில் விவரமாய்க் குறிப்பிட்டுள்ளபடி, இவர்களும கீரை தினமொருவகை உணவாய்த் திட்டம் செய்துகொள்ளவேண்டும். நகர மக்களைவிட இவர் களுக்குக் கீரை உற்பத்தி செய்யவும் காய்கறி உற்பத்தி செய்யவும் வசதி மிக அதிகம்.

இவர்கள் ஒரு சங்கல்பம் செய்துகொள்ளவேண்டும்; அதாவது சாமானியமாய்க் கிராமத்தில் உண்டாகக் கூடியவற்றைக் கடையில் வாங்குவதில்லை என்று உறுதியாய் முடிவு செய்யவேண்டும். உணவுப் பொருள்களில் முக்கியமானவை உளுந்து, பயறு, துவரை என்பன. எல்லோரும் தம் தம் நிலத்தில் இவற்றைப் பயிரிட்டுக் கொள்வது முடியும்; மொச்சைக்கடலை, காராமணி என்பன அடுத்த படியாக வுள்ள முக்கியப் பொருள்கள். இனி, எண்ணெய்க்காகப் பல வேறு வித்துக்கள் தேவையா யிருக்கின்றன; தேங்காய், வேர்க் கடலை, எள் என்பன. தேங்காய் எங்கும் வீட்டுத் தோட் டத்தில் காய்க்கும். நன்றாய்க் காய்க்கக் கூடிய மரங்கள் சுமார் நாற்பது ஐம்பது இருக்குமானால், அவரவர் குடும்பத்துக்கு வருஷ முழுமைக்கும் தேவையான எண்ணெய் கிடைக்கும். வீட்டுத் தோட்

டத்திலாயினும், சொற்பப் புன்செய்த் திடல் இருக்குமாஞல் அதிலாயினும், வேர்க்கடலை பயிரிடுவது எளிது. தக்க பருவத்தில் பயிரிட்டுப் போதுமானபடி எரு வைத்தால், நல்ல பலன் கிடைக்கும். மழையும் துணை செய்ததாஞல், கடலை மாசூல் மிகுதியாயிருக்கும். எள் பயிர் இவ்வளவு நிச்சயமாய் நம்புவதற்கில்லை. ஒரொரு சமயம் பிடித்துக்கொண்டதாஞல், ஐந்தாறு வருஷத்து லாபத்தை ஒரே வருஷத்தில் கொடுத்துவிடும்; பிடிக்காமற் போஞல் பல வருஷங்கள் விதைத்த விதைகூட எடுக்க முடியாமல் நஷ்டமாவதுண்டு. பெரும்பாலும் இது பருவகாலத்தையும் மழையையும் பொறுத்ததாகும். இதைக் கருதியே விவசாயிகள் சாதாரணமாய்க் கடலையும் எள்ளும், அல்லது எள்ளும் காராமணியும் கலந்து தெளிப்பார்கள். அதிக வெப்பத்தால் ஒன்று பலனின்றிப் போஞல் மற்ருென்ருவது பிடித்துப் பலன் தரும். அதிக மழையால் ஒன்று போய்விடும்; ஆயினும் மற்ருென்று பலன் தரும். எனவே, இவ்விதம் அனுபவத்தை யொட்டி, இரண்டு பயிர்களைக் கலந்து தெளிப்பது, மழை இருந்தாலும் மழையே இல்லாது வெப்பமே மிகுந்தாலும், பலன் குன்ருது காப்பதற்குரிய வழியாகும்.

30

கோதுமை

யுத்தம் தொடங்கிய புதிதில், இந்தியாவில் விளைபொருள்கள் குன்றிவிடவில்லை. மாசூல் ஏராளமாயிருந்தது. உணவுப் பஞ்சத்துக்கிடமில்லை. அக்காலத்தி லெல்லாம், நமது அரசாங்கத்தார் ஆஸ்திரேலியக் கோதுமையை வரவழைத்துக் கிராமாந்தரங்க ளெங்கும், நகரங்க ளெங்கும், விற்பனை செய்வித்தார்கள். நம் மக்கள் அக் கோதுமையை அப்போது வாங்க மறுத்தார்கள். ஆயினும், கடைக்கு இவ்வளவு கோதுமை என்று மூட்டைகளைத் தள்ளிவிட்டமை காரணமாகக் கடைக்காரரும் இவ்வளவு அரிசி வாங்குவதாஞல் இவ்வளவு கோதுமையும் சேர்த்து வாங்கத்தான் வேண்டும் என்று கட்டாயப்படுத்த ஆரம்பித்தார். வேறு வழியின்றி மக்கள் அக்கோதுமையை வாங்க நேர்ந்தது.

‘அன்னத்தை நிந்திக்கலாகாது’ என்று வேதம் சொல்லுகிறது. கோதுமையை நிந்திப்பது நம நோக்கமல்ல. ஆஞல், அக்காலத்தில் வந்த மேற்சொன்ன கோதுமை முழுமையும் ‘கூடு’; அதாவது, ஒரு படி கோதுமையில முழுக் கோதுமை ஒன்றுகூட இருந்ததில்லை; எல்லாம வண்டு துளைத்திருந்தது தென்னிந்தியாவில் தானியங்

களைப்படியால் அளந்து கொடுப்பதுதான் வழக்கம்; வட இந்தியாவில் நடப்பது போல், எடைபோட்டுக் கொடுப்பது வழக்கமில்லை. எனவே, கோதுமை வாங்கினால் படியளவுக்குச் சரியாயிருந்த போதிலுங்கூட, முக்கால்வாசி நஷ்டமாகிக் கால்வாசித்தான் தேறும். இவ்விதம் வண்டு தொளைத்த கோதுமை எப்படி இந்தியாவுக்கு வர நேர்ந்தது என்றறிவதும் கஷ்டமில்லை. சண்டையில் ஆஸ்திரேலிய மக்களைப் பெருவாரியாகத் திரட்ட எண்ணிய பிரிட்டிஷ் சர்க்கார், அந்நாட்டுக்கு ஏதேனும் உதவி செய்தாக வேண்டியிருந்தது. மிஸ்டர் கேஸியை வங்க கவர்னராகத் தூக்கிப் போட்டது ஆஸ்திரேலியாவுக்குச் செய்த ஒரு பேருதவி. இரண்டாவது உதவி, ஆஸ்திரேலியாவில் நெடுநாள் கட்டுக்கிடையாய்த் தேங்கிப் புழுத்துக் கிடந்த கோதுமையை இந்தியாவில் கொண்டு வந்து விற்றுப் பணமாக்கிக் கொடுத்தது. இந்த இரண்டு ஏற்பாடுகளாலும், ஆஸ்திரேலிய மக்களை யுத்த வலையில் நன்றாய்ச் சிக்கவைக்க இயன்றது.

இதுவே இந்தியாவில் முன்னே வண்டு தொளைத்த கோதுமை வழங்கியதற்குக் காரணமாகும். எனவே, அக்காலத்தில் இங்கு மக்கள் அந்தக் கோதுமையை வாங்க மறுத்ததில் வியப்பில்லை. ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. கோதுமை வாங்க மறுக்க நியாயமில்லை. ஆஸ்திரேலியாவில் புழுத்த கோதுமை எல்லாம் தீர்ந்துவிட்டது; நம் பணப்பையிலிருந்த பணம் அவர்கள் பணப்பையில் போய் நிறைந்துவிட்டது; இப்போது வருவது அவ்வளவும் நல்ல கோதுமை. ஆகவே, கிராமாந்தரங்களிலோ, நகரப்பிரதேசத்திலோ, கோதுமை வாங்கும்படி நிர்ப்பந்திக்கிறார்கள் என்றால், வாங்குவதே நல்லது, கெடுதலே ஒன்றுமில்லை. கோதுமை, அரிசியை விடப் பல மடங்கு சத்து அதிகமான ஆகாரம். ஆகவே, நாட்டுப்புறத்திலுள்ளவர்கள் யாராயிருந்தாலும், கோதுமை வாங்கத் தயங்கவேகூடாது. கோதுமை வருவதெல்லாம் நல்ல கோதுமை, சிறந்த உணவு; தவிர, இந்தப் பஞ்சகாலத்தில் கிடைத்தவரையில் லாபம் என்ற எண்ணத்தோடு வாங்கிக் கொள்ளவேண்டும். ஆஸ்திரேலிய மக்களுடைய லாபத்தைக் கருதி அவர்கள் கொடுத்தபோதிலுங்கூட, நம் பசியைப் போக்க உதவுகிறதே என்று நாம் மகிழ்ச்சியடையவேண்டும்.

வட இந்தியக் கோதுமை தென்னாட்டுக்கு வருவது இப்போது அருமை. ஏனெனில், வட இந்தியாவில் விளைவது, வட இந்தியாவுக்கே போதாது. இந்த நிலைமையில், அது தென்னிந்தியாவுக்கு உதவுவது இயலாத காரியம். அஸ்ஸாம் அரிசி வரக்கூடுமென்று தெரிகிறது. சந்தோஷம்.

எள் கடலை என்பவற்றை மேலே குறிப்பிட்டோம். அடுத்தபடியாக, பயறு, உளுந்து, துவரை என்ற மூன்றையும் குறிப்பிடலாம். இங்கு நாம் கருதுகிற நான்காம் வகையினரான நாட்டுப்புறத்து விவசாயிகள், மிராசுதார்கள், முதலாயினோருடைய சாப்பாட்டில், அரிசிக்கு அடுத்த ஸ்தானம் வகிப்பவை இப் பருப்புவகைகளேயாகும். விவசாயிகள் இவற்றைத் தாங்களே விளைவித்துக் கொள்கிறார்கள். மூன்றும் ஒரு வயலிலேயே விளைவது அபூர்வம். சிலரிடம் உளுந்து அதிகம் விளையும், சிலரிடம் பயறு விளையும். இரண்டும் விளைந்தால் துவரை விளையாது. இருந்த போதிலும், அவரவர் தமக்குத் தேவையான அளவு கொஞ்சமாவது தம் வயலிலோ வரப்பிலோ வீட்டுத் தோட்டத்திலோ சாகுபடி செய்துகொள்ளவேண்டும். இவற்றைக் கடையில் வாங்குவதில்லை என்று கிராமத்திலுள்ளோர் உறுதி செய்துகொள்வது அவசியம். மூன்றில் ஒன்றையேனும் ஒருவர் பயிரிடுதல் சாத்தியம். துவரை அதிகம் மாசூல் அடைந்தவர், உளுந்து அல்லது பயறு சாகுபடி செய்தவரிடம் தமக்கு வேண்டிய உளுந்து அல்லது பயறு பெற்றுத் துவரை கொடுப்பது எளிது. இதில் நோக்கம் எப்படி இருக்கவேண்டுமென்றால், பயறு உளுந்து துவரை என்ற மூன்று தவசங்களும், சாகுபடியான கிராமத்தை விட்டுக் கடைக்கு வருமுன்பு, அக் கிராமத்திலுள்ள அனைவருடைய தேவையும் பூர்த்தியாகியிருக்கவேண்டும் என்பதாகும். ஒருவர் கடையில் வாங்கவேண்டிய நிலையிருந்தால், மற்றவர் கடையில் கொண்டுபோய்ப் போடுவதோ வியாபாரிக்குக் கொடுப்பதோ கூடாது. எல்லோருடைய தேவையும் தீர்ந்தபிறகுதான் சரக்கு கடைக்கு வரவேண்டும்.

அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவை, உப்பு - புளி - மிளகாய் என்ற மூன்று. உப்பு இன்று கடையில் வாங்கித்தான் ஆக வேண்டும். இது கடல்படு திரவியமானமையால், நடுநாட்டிலுள்ளோர் பணத்துக்கு வாங்கவேண்டியதுதான் முறை. தவிர, கடற்கரையில் வாழ்வோரும் உப்பைத் தாமே உற்பத்தி செய்துகொள்ள வழியில்லை. இதுசம்பந்தமான உரிமை வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னே நடந்த உப்பு சத்தியாக்கிரகம் சரித்திரப்பிரசித்தி பெற்றது.

அடுத்தது புளி. நாட்டுப்புறங்களில் எங்குப் பார்த்தாலும் புளிய மரங்கள் மிகுதி. எவ்விதப் பராமரிப்பும் இல்லாமல், மரங்கள் தாமே காய்த்துப் புளி தரும். காற்று மழை முதலிய பருவங்களின் கோளாற்றால், சில சமயம் புளியில் ஒரு நோய் விழுந்து புளி

அடியோடு ஒன்றுமில்லாமல் போய்விடும். இதற்கு நிவர்த்தியில்லை. இன்னும் சில இடங்களில் குரங்கு உபத்திரவம் சொல்லமுடியாது; நூறு எடை புளி காய்க்கக் கூடிய ஒரு மரத்தில், குரங்குகளின் சேஷ்டையால் ஓர் எடைப் புளிகூடக் கிடைக்காது போய்விடும். குரங்குகளெல்லாவற்றையும் கொன்றுலொழிய, புளி கொஞ்சமும் மிஞ்சாது. ஆனால், குரங்கை இராம தூதனென்று கொண்டாடும் நம்மவர்கள், குரங்கை ஒழிக்கத் துணியமாட்டார்கள். எனவே, இந்த நிலைமைக்கு விமோசனமுமில்லை.

நோயும் குரங்கும், மனிதனுடைய செயலைக் கடந்தவை. ஆனால் மனிதனே செய்கிற செயலும் இது சம்பந்தமாய் ஒன்று உண்டு. சென்ற சில வருஷங்களாய் ஏற்பட்டிருந்த விறகுப் பஞ்சம் காரணமாக, தனி மனிதர்களும், அரசாங்கம் முதலியவைகளும், வெட்டிச் சாய்த்த புளி, இலுப்பை போன்ற பயனுடைய மரங்கள் எண்ணற்றவை. நகரப் பிரதேசங்களில் வாழ்ந்தோர், தோட்டந் தோறும் விறகுக்காகப் புளியமரம் வெட்டி வீழ்த்தப்பட்டதை, நகரத்திலும் சுற்றுப்புறத்திலும் பார்த்திருப்பார்கள். உதாரணமாக, மாம்பலத்திலிருந்து கோடம்பாக்கம் ரயிலடிக்குப் போகும் வழி நெடுகிலும் வெட்டி வீழ்த்தப்பட்ட புளிய மரங்களுக்குக் கணக்கில்லை. இப்படி வெட்டியவர்கள், தங்கள் சொந்த உபயோகத்துக்கு விறகில்லாமையால் மரம் வெட்டவில்லை; விற்பனைக்காகவே வெட்டினார்கள். இவ்விதம் லாபத்தைக் கருதி, பலன் தரும் மரத்தை வெட்டுவது மிகவும் அற்பமான காரியமாகும். இந்த அற்ப புத்தி நம்மைவிட்டுப் போகும்வரையில், நாம் எதற்கும் - சுயராஜ்யத்துக்கே யாகட்டும் - தகுதியுடையவர்களென்று நம்மைச் சொல்லிக்கொள்ள முடியாது.

மக்களின் நல்வாழ்வில் கவலையுள்ள எந்த அரசாங்கமாயிருந்தாலும், பழந்தரும் புளிய மரத்தையும், எண்ணெய் தரும் இலுப்பை மரத்தையும் விறகுக்காக வெட்டுவதைச் சட்டமூலம் நிச்சயம் தடை செய்திருக்கும். மாடுகளையே கோடிக் கணக்கில் ராணுவத்தார் தின்ன விட்டுவிட்டு, உழவுக்கு மாடில்லாமலும் கறவைக்குப் பசு இல்லாமலும் மக்கள் கஷ்டப்பட, அன்னிய நாட்டிலிருந்து டப்பியிலடைத்த பால் பவுடர் வரவழைக்கத் திட்டம் போடுகிற நமது கருணைமிக்க இன்றைய அரசாங்கம் அல்லது அதிகாரவர்க்கத்திடம் நாம் என்ன எதிர்பார்க்க முடியும்?

ஆனால், புளி வேண்டுமா என்பதுதான் இது பற்றிய முக்கியமான பிரசினை. புளி வேண்டாம், மிகவும் 'உஷ்ணம்' ஆனபடியால் புளியே அவசியமில்லை என்பதே நமது அபிப்பிராயம்; புளிக்

குப் பதில் எலுமிச்சம் பழம் உபயோகிப்பது எவ்வளவோ நல்லது. வட இந்தியாவில் குளிர்காலத்தில், ஏழை மக்கள் புளியே உபயோகிக்கமாட்டார்கள். புளி 'உஷ்ணம்' அதிகம் உடைமையால் உடம்பை வறளச் செய்கிறது. இவ்வறட்சி காரணமாய்த்தான், குளிர்காலத்தில் சிலருக்கு உதடு வெடித்தால்; உடம்பில் சில பகுதிகளில் தோல் வெடித்து இரத்தம் வருதல் போன்ற கெடுதிகள் நிகழ்கின்றன என்பது அவர்கள் கருத்து. எனவே, நம்மவருக்குங் கூட, புளியைக் குறைத்துக்கொள்வது எவ்வளவோ நன்மை தருவதாகும்.

அடுத்த வஸ்து மிளகாய். மிளகாய் நம் நாட்டுக்குரிய காயன்று. மிளகுதான் நம் நாட்டுக் குரியதேயன்றி, மிளகாய் வேற்று நாட்டுக் காய். சிலி என்ற தென்னமெரிக்க நாட்டுக் குரியது இது; ஆங்கிலத்தில் இதன் பெயர் சில்லி என்பதேயாகும். மிளகொத்த காரம் இதற்கிருப்பதால், நம்மவர்கள் இதை மிளகாய் என்றார்கள். மிளகாயை நீக்கிவிட்டதனால் நமக்குக் குறைவொன்றுமில்லை. மிளகின் காரமொன்றே போதும். உள்ள மிளகாய் அவ்வளவையும், நாம் மனமொப்பி நமது ஆந்திர சகோதரர்களுக்குக் கொடுத்து, கோங்குரா சட்டினி செய்து சாப்பிடுமாறு விட்டுவிட்டு, மிளகா யில்லாமலே காலங் கழிக்கலாம்.

நூறு அடி நீளம் அகலம் உள்ள தோட்டநிலம் உடையவர் எவரும் கடையில் மிளகாய் வாங்குவது அவசியமேயில்லை. மிளகாய் ஓரளவுக்கு எல்லாக் காலத்திலும் பயிராகும். பலன் தரும்; ஆகவே, அவரவர் தமக்குத் தேவையான மிளகாயைப் பயிரிட்டுக் கொள்வது மிகவும் எளிது. காரம் மிகுந்த சாத்தூர் மிளகாய் எங்கே கிடைக்கும் என்று கடை கடையாய்த் தேடவேண்டியதில்லை. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு சமயம் சென்னையில் மிளகாயே கிடைக்கவில்லை என்ற கூப்பாடு அதிகமாயிருந்தது. இது அவசியமேயில்லை. தமிழ் மக்கள் அனேகமாக எல்லா இடங்களிலும், மிளகாய் பயிர் செய்யலாம். அவ்வளவையும் உபயோகிக்காமல் விற்றுப் பணமாக்கவோ, கிடைக்காத மற்ற உணவுப்பொருள்கள் வாங்கவோ, முயலவேண்டுமே யொழிய, மிளகாயை அதிகமாய் உபயோகிக்க எண்ணக்கூடாது.

உணவைப் பொறுத்த வரையில், மற்றவை யாவும் சில்லறைச் சம்பாரத் திரவியங்கள் : மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம், கொத்துமல்லி முதலியன. பெரும்பான்மையும் இவை மலைநாட்டுப் பயிர்கள், அல்லது குளிர்நாட்டுப் பயிர்களானமையால், தமிழ் நாட்டில் பயி

ராவதில்லை. இவற்றில் விசேஷ உணவுச்சத்து இருக்கிறதென்று கூறமுடியாது. சொற்பத் தீனியைப் பெருந்தீனியாக்குவதற்காக, அதாவது உணவுப்பொருளுக்கு மணமும் சுவையும் ஊட்டும் பொருட்டே, மக்கள் இவற்றைத் தேடுகிறார்கள். ஆகவே, இவை இன்றியமையாத உணவுப் பொருள்கள் என்று சொல்வதற்கில்லை. இந்தப் பஞ்ச காலத்தில் மக்கள் - நடுத்தர நிலையிலுள்ள மக்கள்— இந்தச் சம்பாரப் பொருள்கள் இல்லாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கறிவேப்பிலையும் பச்சைக் கொத்துமல்லியும், யாரும் எளிதில் பயிர் செய்துகொள்ள முடியும். வெங்காயமும் அப்படியே. எனவே, பிறவகைச் சம்பாரப் பொருள்கள் இல்லாத குறையை, இவற்றைமட்டும் கொண்டு நிரப்பிக் கொள்வது, அதிகமும் கஷ்டமான காரியமன்று. ஏழை மக்கள், ஒரு வெங்காயம் வைத்துக் கொண்டே, ஒரு வேளை உணவு உண்டுவிடுவார்கள். மற்றவர்களுக்கும், இதைப்போலவே, சிறப்பான 'மசாலா' இல்லாமல் உண்பது சாத்தியமாயிருக்கவேண்டும்.

காய்கறித் தோட்டம் சம்பந்தமாய்ச் சொன்னதவ்வளவையும் நாட்டுப்புறத்து விவசாயிகள் கவனித்துச் செய்து கொள்வதோடு கூட, பழ உற்பத்தியையும் பெருக்கவேண்டும். பழம் மிகுதியாய் இவர்கள் பயிரிட்டு உண்ணவும் விற்பனை செய்யவும் ஆரம்பிப்பார்களானால், தமிழ் மக்கள் இப்போதைவிட இன்னும் பல மடங்கு மேலான உடல் வலிமை பெறுவார்கள் என்பதோடு, விசேஷ லாபமும் பெறுவார்கள். வியாபார ரீதியில் விரிவாய்ப் பயிரிட்டு, நல்ல பலன் அடையக்கூடிய பழவகைகள், தமிழ்நாட்டுச் சமவெளிப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் பின்வருவனவாகும்:

செடி: சீமைத் தக்காளிப் பழம் (புரட்டாசி ஐப்பசி முதல் சித்திரை வரை: பெரு மழை நின்றவுடன் பலன் தர ஆரம்பிக்கும்.) அன்னாசி: வருஷ முழுமையும் பலன் தரக்கூடியது, எனினும் விசேஷப் பலன் கிடைப்பது அருமை.

கொடி: வெள்ளரி முலாம்பழம் என்ற வகைகள். இவை பொதுவாய் இரண்டு பருவங்களில் பயிராகும்.*

மரம்: வாழை—சுமார் 25 வகைகள்; இவற்றுள் சில வகைகள் மிக எளிதில் அதிக பலன் தரும்: மொந்தன், பேயன், பூவன், பச்சை வாழை, பச்சை நாடன், கற்பூர வாழை. மா: மூன்று வருஷத்தில் பலன் தர ஆரம்பித்து, ஆறு வருஷத்துக்குப் பிறகு

*விரிவை எனது காய்கறித் தோட்டம் என்ற புத்தகத்துட் காண்க.

அதிக லாபந் தரும்; ருமானி, நீலம், பங்களூரா, குண்டு, பங்கனபல்லி, பாதிரி முதலியன குறிப்பிடத்தக்கன.

எலுமிச்சை நாரத்தை: மூன்று வருஷத்தில் லாபகரமான பலன்; நாட்டு எலுமிச்சை, சாத்துக்குடி, கமலா, பொம்பிளிமாஸ் என்பன.

சப்போட்டா: விசேஷ லாபம்; இரண்டே வருஷத்தில் பலன்: அடையாறு உருண்டை ரகம் சிறந்தது.

தென்னை: ஐந்து வருஷத்தில் நல்ல பலன்; அதிராம் பட்டினம், மலையாளம் என்ற நெற்றுக்கள் பயிரிடச் சிறந்தவை; அடுத்தபடி யாழ்ப்பாண ரகம்.

மேலே குறிப்பிட்ட பழவகைகள் இவ்வருஷமும் அடுத்த சில வருஷங்களிலும் வரக்கூடிய உணவுப் பஞ்சத்தைப் போக்க உதவ வேண்டுமென்ற நோக்கத்தோடும், விரைவில் லாபந் தர வேண்டும் என்ற நோக்கத்தோடும் மட்டுமே குறிப்பிடப்பட்டவை.

முடிவாக, மிராசுதார்களும் விவசாயிகளும் ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்வார்களானால், உணவு உற்பத்திப் பெருக்கத்தில் அவர்களுக்கு ஊக்கம் என்றும் தளராமலிருக்கும். தேசத்தின் உண்மையான செல்வத்தை யார் படைக்கிறார்கள் என்று பார்த்தால், உழவர்களே என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். பூமிதான் எல்லா வகையான செல்வத்தையும் தருகிறது. நீர்வீழ்ச்சிகள் பூமியினிடமாய்ப் பிறக்கும் ஆற்றில் தோன்றி மின்சாரத்தைத் தருகின்றன. மின்சாரம்தான் அணுவை உடைக்கவும் அணுக் குண்டைச் செய்யவும் உதவியது; உண்மையே ஆனால் மின்சாரம் செல்வமாகாது. வயிற்றுப் பசியை மின்சாரம் போக்குமா? பூமியின்கண் உள்ள சுரங்கங்கள் பொன்னும் வெள்ளியும் தருகின்றன. இவற்றால் நாட்டில் செல்வநிலை உயருமென்று சொல்வார்கள். பொன்னும் வெள்ளியும் வயிற்றுப் பசியைப் போக்க மாட்டா; போக்க ஒரு வேளை உதவலாம். பொன்னின் மதிப்பு, வெள்ளியின் மதிப்பு என்று தனியான மதிப்புக் கிடையாது. அவற்றால் விளையும் சௌகரியத்தைக் கருதியே அவற்றுக்கு மதிப்பு ஏற்படுகிறது. பசியைத் தீர்க்க இவை உதவாவிட்டால், அவற்றுக்கு மதிப்பு ஏது?

எனவே, மின்சாரமும் பொன்னும் வெள்ளியும் பூமியினிடத்துப் பிறந்த போதிலும், அவை செல்வமாகா. 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம், அதனால், உழன்றும் உழவே தலை' என்றார் குறளாசிரியர். உழவுத் தொழில் ஒன்றுதான் மனிதனுடைய

வயிற்றுப் பசியைத் தீர்க்கிறது. இதனோடு ஒப்புநோக்கும்போது, ராட்டையும் சம்மட்டியுங்கூட மிக நெடுந்தூரத்திலுள்ளன.

இவ்வுழவுச் செல்வத்தைத் தோற்றுவிப்பவர்களாயும் இதற்குப் பாதுகாவலர்களாயும் உள்ளவர்கள் விவசாயிகள். இராவண வதமெல்லாம் முடிந்த பின், அயோத்தியில் நடந்த இராம பட்டாபிஷேகத்தைக் கூறும்போது, "வெண்ணெய்ச் சடையன்தன் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மவுலி" என்று கம்பர் பாடுகிறார் என்றால், உழவுச் செல்வத்தின் அருமையை உணர்த்தவே. சக்கரவர்த்தியின் கிரீடம் உழவர்களான வேளாளர் வசமே உள்ளது என்று குறிப்பிடுகிறார். மிராசுதாரும் விவசாயிகளுமாயுள்ளோர், இன்றைய நெருக்கடியில் தங்கள் கடமையை யுணர்ந்து 'மேழிச் செல்வம் கோழை படாது' என்ற பேருண்மை என்றும் ஓங்கி நிற்க உதவுவார்களாக. அரசாங்கத்தாரின் பராமுகத்தையும் அவர்களால் விளையும் இன்னல்களையும் சற்றே மறந்து, உற்பத்தியை எல்லா வகையாலும் பெருக்கி, தமிழ்நாட்டில் பஞ்சத்தைச் சமாளிக்க முன் வருவார்களாக.

31

ஆடுமாடுகளின் தீனிப்பஞ்சம்

மக்களுடைய உணவுப் பஞ்சத்தைக் கவனிக்கும்போது, கூடவே, ஆடு மாடுகளின் உணவுப் பஞ்சத்தைக் குறித்து இரண்டொரு கருத்துக்களைக் கூறுவதும் அவசியமாகிறது. ஆடு மாடுகள் மக்களுக்கு மூன்று விதத்தில் பயன்படுகின்றன. முதலாவது, ஆடுகளும் மாடுகளும் உணவுக்குரிய பால் தருகின்றன. இரண்டாவது, ஆடு மாடுகள் தங்கள் சாணத்தின்மூலம் பயிர்த்தொழிலுக்கு மிகவும் முக்கியமான உரம் தருகின்றன. மூன்றாவதாக, மாடுகள், மனிதனுக்குப் பயிர்த்தொழில் செய்வதற்கு விசேஷ உதவி செய்கின்றன; நிலத்தை உழ, பரம்படிக்க, நெல்லை வீட்டில் கொண்டு சேர்க்க, எருவை வயலில் கொண்டு சேர்க்க – முதலிய பலவகையான வேலைகளுக்கு மாடுகள் இன்றியமையாதன ஆகின்றன. எனவே, ஆடுமாடுகளின் உணவுப் பஞ்சம் இங்குக் கவனித்தற் குரியதே. உலகத்திலேயே ஆடு மாடுகள் பெருத்த நாடு இந்திய நாடு. இவற்றின் பலன் இந்நாட்டில் மிக மிக அற்பமா யிருந்தபோதிலுங்கூட, எண்ணிக்கையில் இவை மிகவும் அதிகம் என்பதில் சந்தேகமில்லை. எனினும், யுத்தம் முடிந்தபின், இந்த நிலைமையானது நமது காருண்ய கவர்ன்மெண்டாரின் சிறந்த கைங்கரியம் காரணமாக, மாறியிருந்

தாலும், வியப்படைவதற்கில்லை. படைவீரரின் குண்டோதரப் பசியைத் தணிக்கும்பொருட்டுப் பலியான ஆடு மாடு கன்று குட்டி காளை பசு என்பவற்றுக்குக் கணக்குண்டா, எல்லையுண்டா ?

போனவை போக, மிச்சமுள்ளவை சம்பந்தமாக, சர்க்காருக்கும் பொறுப்பிருக்கிறது, மக்களுக்கும் பொறுப்பிருக்கிறது. வண்டி மாடுகளுக்கும் கறவைப் பசுக்களுக்கும் சிறந்த தீனி, பருத்திக் கொட்டை. இந்தியாவில் பஞ்சாலைகள் பெருகியதன் பயனாய், பருத்தித் தோட்டங்கள் பெருகியுள்ளமை ஒரு நல்ல அம்சமென்று கருதவேண்டும். இதன் பயனாய்ப் பருத்தி விதையும் சுமாராய்க் கிடைக்கிறது. இவ்விதை, மாட்டுக்கேற்ற சிறந்த தீனி. ஆனால் இன்றைய நவநாகரிகத்தின் விளைவாய், இம்மாட்டுத் தீனியை மாட்டுக்குக் கொடுக்காமல் மனிதனே தின்றுவிடுகிறான் ! இது கொடுமையல்லவா ?

தாவர நெய்யென்றும் வனஸ்பதி யென்றும் இக்காலத்தில் ஒரு நூதன வஸ்துவைப்பற்றி விளம்பரங்கள் அடிக்கடி பத்திரிகையில் பார்க்கிறோம். இது நெய்யும் அல்ல, ஒரு மண்ணுமல்ல ; எண்ணெய்தான். எந்த எண்ணெயையும் ஓர் இராசாயன முறையினால், இப்படிப்பட்ட தாவர நெய்யாக்கலாம். இதற்கும் நெய்க்கும் யாரும் வேற்றுமை சொல்ல முடியாது ; அவ்வளவு வெண்மையாயும் உறைந்தும் மணல் மணலாயும் மணமூட்டப்பெற்றும் இது இருக்கும். உண்மை நெய்க்கும் இதற்கும் ஒரு வித்தியாசம் : உண்மை நெய், நெய்ச் சத்து (கொழுப்புச் சத்து) மிகுதியுமுடையது, வைட்டமினுடையது ; தாவர நெய்யில் இரண்டுமில்லை. உண்மை நெய் சீரணமாகும் ; தாவர நெய் சீரணமாவது அபூர்வம் ; உடம்பினுள் நுழைந்து வெளியே போய்விடும் ; உடம்போடு ஒட்டவே ஒட்டாது. எண்ணெயைவிட இத் தாவர நெய் கீழ்த்தரமானது ; எண்ணெய், நெய்ச் சத்துடையது, சீரணிக்கும். இத் தாவர நெய் சீரணிப்பது அருமையாகையால், நெய்ச் சத்தைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

இப்படியிருந்தும், தாவர நெய் மோகம் அதிகமாகி வருகிறது. இப்போதைய வருஷ உற்பத்தி லட்சம் டன் ; இனி இதை இரட்டிப்பாக்கப் போகிறார்களாம் !

தாவர நெய் உற்பத்தி செய்ய, எந்த எண்ணெயையும் உபயோகிக்கலாம் ; இவற்றுள் மிகவும் விலையுயர்ந்தது, தேங்காய் எண்ணெய் ; விலை மலிவானது, பருத்திக்கொட்டை எண்ணெய்! பருத்திக் கொட்டையெல்லாம் எப்படி எண்ணெய் பிழிந்து தாவர நெய்

யாக்கி, மனிதர் உண்டுவிடுவதனால், மாடுகளின் தீனிக்குப் பருத்திக் கொட்டை கிடைப்பது குறைகிறது. எனவே, இதுபற்றிச் சர்க்கார் கடமை என்னவென்பது மிகவும் தெளிவாயிருக்கிறது. வன்ஸ்பதி உற்பத்தியே வேண்டாம் என்று சர்க்கார் தடைசெய்ய வேண்டும்; இது முடியாவிட்டால், வனஸ்பதி அல்லது தாவர நெய் செய்து விற்கிற கம்பெனிகளை 'ரெஜிஸ்தர்' செய்யும் காலத்தில், 'பருத்திக் கொட்டை எண்ணெயை உபயோகிக்கக் கூடாது' என்ற நிபந்தனை விதிக்கவாவது வேண்டும்; தவிர, மாட்டுத் தீனியாகப் பயன்படுவது முக்கியமானபடியால், பருத்திக்கொட்டையில் எண்ணெய் பிழி யவே கூடாது என்று சட்டம் ஏற்படுத்த வேண்டும். தாவர நெய் செய்பவர்கள் வேப்பெண்ணெய் வேண்டுமானாலும் (அல்லது முடியு மானால் மண்ணெண்ணெய்கூட) உபயோகித்துக் கொள்ளட்டும்; ஆட்சேபமே யில்லை.

பருத்திக்கொட்டையில் எண்ணெய் பிழியக்கூடாது என்று சட்டம் ஏற்படுத்திவிட்டு, சீமையிலிருந்து தாவர நெய் இறக்கு மதிக்கு ஏற்பாடு செய்துவிடக்கூடாது. பருத்திக்கொட்டை எண் ணெய் இல்லாது தாவர நெய் செய்வது கஷ்டமானால், தாவர நெய்யே வேண்டாம். அவ்வளவுதானே யொழிய, அயல்நாட்டுச் சரக்கு இங்கு வரவே வேண்டாம்.

எனவே, இன்று உணவுப் பஞ்சத்தைப் போக்கச் சர்க்கார் செய்யத்தக்க துணைக்காரியங்களில் இதுவே முதற்காரியமாகும். இனி அடுத்ததைச் சொல்வோம்.

32

சில்லறை விஷயங்கள்

ஆறுகள், வாய்க்கால்கள் இவற்றின் கரைகளில், சர்க் காரின் மராமத்திலாகாவுக்குச் சொந்தமான கருவேல மரம் முத லிய மரங்கள் ஏராளமாய் உள்ளன. கிராமாந்தரத்துச் சேரிகளி லுள்ள சிறுவரும் சிறுமியரும், தங்கள் வீட்டு ஆடுகளை ஓட்டிச் சென்று மரத்தினடியில் நிறுத்திக்கொண்டு, ஓர் அலக்கை வைத்துக் கொண்டு ஆடுகள் தின்னத் தழை ஒடித்துப் போடுவார்கள். இவர் கள் பராக்காய் இருக்கும் சமயத்தில், தூரத்திலிருந்து வாய்க்கால் கரை மேற்பார்வை பார்க்கும் லஸ்கர் அல்லது மேஸ்திரி அந்தப் பக்கம் வருவான். அவன் இவர்களைத் துரத்தி, அலக்கு அரிவாள் முதலியவற்றைப் பிடுங்கிக்கொண்டு, அத்தனை ஆடுகளையும் கொண்டுபோய்ப் பட்டியிலடைத்துவிடுவான். ஆடு வைத்திருந்த

ஏழை மக்களுக்கு, இரண்டு ரூபாய் பெறுமானமுடைய அரிவாள் முதலியன நஷ்டத்தோடு, ஆடொன்றுக்கு இரண்டணு வீதம் கொடுத்துவிட்டுத்தான் ஆடுகளைப் பட்டியிலிருந்து மீட்க முடியும்.

இந்த நிலைமைக்கு விமோசனம் இன்று இருப்பதாகத் தெரிய வில்லை. ஏனென்று கேட்டால், சர்க்கார் மரத்தில் யாரும் கைவைக்கக் கூடாதென்று சட்டமிருப்பதைக் காட்டுவார்கள். ஒரு தம்பிடி கூடப் பெறாத தழை ஒடித்த ஓர் உழவனுக்கு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் நஷ்டமேற்பட்டிருக்கும்.

ஆனல். அடுத்த மாதம் பார்த்தால், அந்தக் கருவேல மரம் அடியோடு காணமற் போயிருக்கும். கணக்கப்பிள்ளை வீட்டுக் கலியாணத்துக்கேனும், ஓவர்சியர் வீட்டில் நடக்கும் உபநயனத்துக்கேனும், விறகுக்குக்காக அம்மரத்தை லஸ்கரே வெட்டிப் பிளந்து கொண்டுபோய்ப் போட்டிருப்பான். சர்க்கார் மரம் சர்க்காரின் குட்டித்தேவதைக்கே அர்ப்பணம், வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே படைப்பதுபோல!

இந்த நிலைமை ஒழியவேண்டும். வாய்க்கால் கரை, ஆற்றங்கரை முதலியன கெட்டுப்போகக்கூடாது என்பது உண்மை. இதற்குத் தக்க பாதுகாவல் ஏற்படுத்துவதும் அவசியம். ஆனல் இதையே முதன்மையாய்க் கருதி, ஆடுமாடுகள் நடமாடக்கூடாது, வெறுந் தழையைக்கூட மேயக்கூடாது என்று தடை விதித்தல் நியாய மாகாது. கிராமத்து ஏழை மக்கள் ஆடுமாடுகள் வைத்திருப்ப தெல்லாம், தாங்கள் வயிறு கழுவவும், சாகுபடி வேலைக்குத் துணை செய்யவுமேயாகும்; வளர்த்து ராணுவத்தார் அடித்துத் தின்பதற்காகக் கொடுக்கும்பொருட்டு அன்று. எனவே, இதைச் சர்க்கார் அதிகாரிகள் ஞாபகம் வைத்திருந்து, விதிகளைக் கொஞ்சம் 'தளர்த்து' வார்களானல், பொதுவாக ஏழைகளுக்கு நல்லது. இல்லையானல், பிராணிகளை வதைத்துத் தின்னும் ராணுவத்தாரைவிட, ஏழை மக்களையே வதைக்கிற இவர்கள் இன்னும் கொடியவர்களாகி ருர்கள்.

இப்படியே, ஆற்றுப்படுகையிலுள்ள நாணலில் மாடுகள் இறங்கி மேய்ந்துவிட்டால், மாடொன்றுக்கு அபராதம் ஒரு ரூபாய் வரையில் இருக்கிறது. இதையும், முன் சொன்னதுபோலவே அனுதாபத்துடன் சர்க்கார் கவனித்து, நாணற் பயிர் கெடாதவகையில் மாடு மேய்வதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும்.

மூன்ருவது: புன்செய்த் திடல்களில், ஒன்றும் விளையாத கீழ்த் தரமான புன்செய்த்திடல்கள் சில வுள்ளன. இங்கு எவ்விதப் புயிரும் பயிராகாமையைக் கண்டு மிராசுதார்கள் சிலர் சோளம்

போடுகிறார்கள்: இச்சோளம் கதிர் கொய்வதற்காக அன்று; சோளத் தட்டை மாட்டுத் தீவனத்துக்கு ஆகட்டும் என்ற உத்தேசத்தோடுதான். வைக்கோல் அதிகம் கிடைக்காமையாலும், விலை அதிகமாயிருத்தலாலும், குறித்த திடல் ஒரு பயனும் இல்லாது போவதாலுமே அவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இத்திடல்கள் சம்பந்தமாக, அவர்கள் சர்க்கார் பாசன வாய்க்கால் முதலியவற்றிலிருந்து நீர் பாய்ச்சுவதில்லை. இருந்தும், சோளம் என்று விதை தெளித்துவிட்டால், அதற்குரிய வரி கட்டியாகவேண்டி யிருக்கிறது. மனமாரக் கதிருக்காக விதைக்கவில்லை, மாட்டுத் தீவனத்துக்காகத் தான் என்றுள்ள இடத்திலும்கூட, வரி செலுத்துவதனின்றும் தப்பமுடியாது. இப்படிப்பட்ட விஷயத்தில் வரி வசூல் செய்வதைச் சர்க்கார் நிறுத்துவது அவசியம். விளைந்த தானியத்துக்கு வரி விதிப்பது நியாயமாகுமே யன்றி, வெறும் தட்டை முளைத்திருப்பதற்கு, அதுவும் நீர்பாய்ச்சலின்றி மானவாரியாய்ப் பயிராவதற்கு வரி விதிப்பது, துக்ளக் ராஜ்யமென்றால் பொருந்தும்; பகுத்தறிவுடைய வேறெந்த ராஜ்யத்துக்கும் பொருந்தமாட்டாது. நிலத்துக்குப் பசுந்தாள் உரம் கிடைப்பதற்காகச் சில சமயம் அவுரி, கொளுஞ்சி, காவாளை, நரிப் பயறு, டேன்சா முதலியவற்றை விதிப்பதுண்டு. நல்லகாலமாக நம் சர்க்கார் இந்தப் பசுந்தாள் உரப் பயிருக்கு இன்னும் வரி விதிக்கக் கற்றுக்கொள்ளவில்லை. மாட்டுத் தீவனப் பயிரும் இதை யொத்ததுதான். எனவே, சர்க்கார், இந்த நியாயத்தைக் கருதியும், இன்றுள்ள உணவுப் பஞ்சத்தைக் கருதியும், மாட்டுத் தீவனம் பெரிதும் குறைவாயுள்ளதைக் கருதியும், தீவனப் பயிருக்கு வரி விதிப்பதை உடனே நிறுத்திவிடுவார்களாக.

நான்காவது: காடுகளில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் வசதி ஏராளமாக வேண்டுமென்று பலரும் பலமுறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். காடுகள் சர்க்காருக்கு வருமானம் தருவதற்காக மட்டும் ஏற்பட்டவையல்ல; குடிகளுக்கு அற்ப நன்மையாவது அவற்றால் விளையவேண்டும். இதை அரசாங்கத்தார் ஞாபகம் வைத்திருந்து வேண்டுவன செய்வது அவசியமானது.

ஐந்தாவது: 'கிராமச் சமுதாய நிலங்கள் என்று சொல்லப்பெறும் நிலங்களும் திடல்களும் ஒவ்வொரு சிற்றூரிலுமுள்ளன. இவை பொதுவாக அவ்வூர் ஏழை மக்களுடைய நல்வாழ்வைக் குறித்தும், சிறப்பாக ஆடுமாடுகள் காலாறுவதற்கும், மேய்வதற்கும், கோடையிலும் மாரியிலும் போய் நடமாடுவதற்கும் என்றே ஏற்பட்டவை. இவற்றால் பலன் என்ன என்று திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் விளையும் பலன் பெரிது. போரிலிருந்து மீண்ட 'வீரர்'

களுக்கு, நன்றியறிவுமிக்க அரசாங்கம் நிலங்களை மானியம் விடும் போது, இப்படிப்பட்ட நிலங்களை விடுவது அளவில்லாத கேடு பயக்கும். கிராமப் பொது நிலங்களைப் பராதீனம் செய்வதை அரசாங்கத்தார் உடனே நிறுத்தவேண்டும்; நிறுத்தாமலிருப்பது, ராணுவத்துக்குக் கண்ட மாட்டையும் அடிப்பது போன்றதுதான்.

சர்க்காரும் மக்களும், மேற்கூறியவற்றையும் பிறவற்றையும் உணர்ந்து, வாயில்லாப் பிராணிகளின் உழைப்பை மதித்து நடக்கக் கற்பார்களாக.

33

"போரெலாம் காவாது வைகுக"

இனி நாம் உணவுப் பஞ்சத்தினிடம் விடைபெறவேண்டும். எப்படியோ வந்து சேர்ந்த பஞ்சத்துக்குச் செய்யவேண்டிய கிரியைகள் எல்லாம் குறைவறச் செய்து வழியனுப்பிவிட வேண்டியதுதானே? அனுப்பும்போது "நீ இனி இங்கு என்றுமே வராதிருப்பாயாக" என்று மட்டும் சொன்னால் போதும். ஊர்பேர் தெரியாத பண்டைத் தமிழ்ப் புலவரொருவர், நாட்டின் சுபிட்சம் எப்படியிருக்கவேண்டுமென்பதைச் சிலவரிகளால் அழகாகக் கூறியிருக்கிறார். நாட்டின் சுபிட்சம என்று அவர் கூறியிருப்பது, பயிர்த் தொழிலால் வரும் சுபிட்சம் ஒன்றைத்தான். அவரது கருத்தை இங்குக் கூறி முடிப்போம்.

"நல்ல பெருமழை பெய்து எங்கும் நீர்வளம் மிகுதியாக வேண்டும். பண்பட்ட மண்ணில் விதைத்த விதைகள் யாவும், விதைப் பழுது சிறிதும் இன்றி, நன்றாய் முளைத்து நாற்றாக வளரவேண்டும். வளரும் நாற்றுக் குளிர மழை மீண்டும் மீண்டும் பெய்யவேண்டும். நாற்று ஒவ்வொன்றும் பல கிளைகளாய்க் கிளைத்துத் தழைக்கவேண்டும். கிளை ஒவ்வொன்றிலும, நிறையப் பால்பிடித்துக் கதிர்விடவேண்டும். நெல்மணிகள் அடர்த்தியாய்ப் பிடித்த அக்கதிர்களின் தொகுதியால், உழவருடைய நெற்களமெங்கும் நெற்போர்களாய்க் குவியவேண்டும். இவ்வளவும் போதாது. கொள்வாருமில்லை, கொடுப்பாருமில்லை என்றதுபோல், நாட்டின் வளமும் செல்வமும் மிகுந்து, திருட்டு என்ற பேச்சே இல்லாது, நெற்போருக்கு எவ்விதக் காவலும தேவை இல்லாதிருக்க வேண்டும். வேண்டுவோர் வேண்டுவதை எடுத்துக்கொள்ளலாம் என்ற உரிமையும் இருக்கவேண்டும்" என்று நம் புலவர் கூறுகிறார்.

பெருநீரால் வாரி சிறக்க ; இருநிலத்து
இட்டவித்து எஞ்சாமை நாறுக ; நாறுர
முட்டாது வந்து மழைபெய்க ; பெய்தபின்
ஒட்டாது வந்து கிளைபயில்க ; அக்கிளை
பால்வார் பிறைஞ்சிக் கதிர்ஈன ; அக்கதிர்
ஏர்கெழு செல்வர் களம்நிறைக ; அக்களத்துப்
போரெலாம் காவாது வைகுக.

உணவுப் பஞ்சம் ஒழிவது மட்டும் போதாது. என்றென்றைக்கும் உணவைப் பற்றிய கவலையே தோன்றுதபடி, பிறர் நம் உணவை அபகரிப்பார் என்ற அச்சத்தால் காவல் எதுவும் ஏற்படுத்தும் நிலைமையே வராதபடி, நாடு செழிப்படைய வேண்டும். இதுவே நமது லக்ஷ்யம்.

" போரெலாம் காவாது வைகுக "

அனுபந்தம்

பசுவும் பாலும்

[பின்வரும் கட்டுரை, நம் நாட்டில் பசுக்களின் நிலைமையையும் அவற்றால் நாம் பெறும் குறைவான பலனையும் புள்ளி விவரங்களோடு காட்டுகிறது. பாலும் முக்கிய உணவாகையால் இக்கட்டுரையை இங்குச் சேர்ப்பது பொருத்தமாகும். இது எ. கே. செட்டியாரவர்களுடைய குமரி மலர் 14இல் (ஜூலை 1944இல்) வெளிவந்தது.]

நம்முடைய நாட்டில் பசுவை நாம் போற்றியிருப்பதுபோல் உலகத்தில் எந்த நாட்டிலும் பசுவைப் போற்றியதாகச் சொல்ல முடியாது. மிகப் புராதனமான காலத்திலே, மனிதன் நாகரிக மடையாத நிலையில் நாடோடியாக உணவு தேடிப் பல நாடுகளிலும் அலைந்து உழன்றபோது, பசு வொன்றே அவனுக்குத் துணையா யிருந்தது. பசு மேய்த்துக்கொண்டே பல நாடுகளுக்கும் சென்றான் என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். சிந்து நதியின் கரையிலும் கங்கை நதியின் கரையிலும் புல்வளத்தைக் கண்ட பண்டைய ஆரியர், தங்கள் ஆனிரைகளை மேய்த்துக்கொண்டு வந்தபோது, இந் நாடே குடியேறத்தக்க இடம் என்று கருதி இங்கேயே தங்கி விட்டார்களாம்.

அன்று முதல் இன்று வரை (ஒருகால், அதற்கு நெடுநாளைக்கு முன்னமே தொடங்கியும் இப்படி நடந்துவந்திருக்கலாம்) நம்முடைய வாழ்க்கையிலே பசுவுக்கு உயர்ந்த நிலையை அளித்துப் போற்றி வந்திருக்கிறோம். பசுவையே காமதேனு என்று கொண்டாடுகிறோம். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது புறநானூற்றுப் புலவர் கூற்று. உணவுப் பொருளைத் தரும் பசுவைப் போற்றியதில் வியப்புக்கு இடமென்ன இருக்கிறது?

பசுவானது, உணவுப் பொருளான பாலைத் தானே தருவதோடு கூட, பிற உணவுப் பொருள்களின் உற்பத்திக்கும் துணை செய்கிறது. பயிர்த்தொழிலில் மனிதனுடைய உழைப்பு ஒரு பாதி என்றால் மாட்டின் உழைப்பு மற்றொரு பாதியல்லவா? நிலத்தை உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் வேண்டிய காளைக்கன்றுகளைப் பசுவே மனிதனுக்கு அளிக்கிறது. அன்றியும், நிலத்துக்குச் சிறந்த உரமான சாண எருவையும் மாட்டினிடமாகவேதான் அவன் பெறுகிறான்.

இன்று ஒருவருடைய செல்வத்தைக் கணக்கிடுவதென்றால், அவருடைய வீடு வாசல் நிலபுலத்தைக் கணக்கிட்டுச் சொல்லுகிறோம்.

இரண்டு ஏகரா நிலமுடையவர் ஏழை; பத்து ஏகரா சாகுபடி நில முள்ளவர் சாமானிய மனிதர்; நூறு ஏகரா உடையவர் செல்வர் என்று கணக்கிடுகிறோம். இது போக, பாங்கியில் அவரவர் கட்டி வைத்திருக்கும் பணத்தைக்கொண்டு செல்வரா அல்லவா என்று தீர்மானிப்பதும் உண்டு. ஆனால், பழங்காலத்தில் மற்றொரு வகைக் கணக்கும் இருந்தது. ஆடுமாடுகளைக் கணக்கிட்டு, அதிகமான ஆடு மாடுகளையுடையவர் செல்வர் என்று கொள்வது வழக்கம் இன்றும், சாமானியமான இடையர் குடும்பங்களில் ஆடுமாடுகளையே செல்வ மாகக்கொண்டு அவரவர் தகுதியை மதிப்பிடுகிறார்கள். இதில் மிகை ஒன்றும் இல்லை. சென்ற மாசி பங்குனி மாதங்களிலே கும்ப கோணத்தை யடுத்த நீலத்தநல்லூரில் நடந்த சந்தையிலே போய்ப் பார்த்தால் இதன் உண்மை தெரியவரும். வண்டி மாடுகளின் விலை ஆயிர ரூபாய்க் கணக்கில்தான். ஒரு ஜோடிக் காங்கேயம் மாடுகள் விலை பதினாயிரம், பன்னீராயிரம் ரூபாய் என்றுகூட விற்பனை யாயினவாம். இதை யறிந்தால், மாடுகளே செல்வமென்று சொல் வதை ஒப்புக்கொள்ளத் தடையிராது.

இப்படியாக, பசு, மற்ற ஆடு முதலியனவெல்லாம் செல்வ மாகவும் தனக்கு உபயோகமாகவும் இருப்பதை யுணர்ந்து கொண்ட மனிதன், அவற்றினிடம் மிக்க நன்றி பாராட்டினான். பசு வதை மிகவும் கொடியது, அந்தப் பாவத்துக்குக் கழுவாயே இல்லை என் றெல்லாம் எண்ணினான். பசுவுக்கு வழிபாடு என்ற பழக்கத்தையும் ஏற்படுத்தினான். பயிர்த்தொழிலின் விழாவாகிய பொங்கல் விழா வையொட்டி மாட்டுப்பொங்கல் விழாவும் பிறந்தது. திருமாலே ஆயர்பாடியில் கண்ணனாக வந்து பிறந்து ஆனிரை மேய்த்தான் என்ற அழகான கற்பனை எழுந்தது. காளைமாட்டையே நம்மவர்கள் பரமேசுவனுக்கு வாகனமாகவும் கொடுத்தார்கள். பசுவையும் காளையையும் பராமரிப்பதற்காகவே நம் நாட்டில் எண்ணற்ற பசு மடங்களும் அறச்சாலைகளும் தோன்றின.

உண்மையிலேயே, நம் நாட்டில் பசுக்களும் பசுவினங்களும் பெருகியுள்ள அளவு உலகத்தில் வேறெந்த நாட்டிலும் பெருக வில்லை. உலக முழுதுமுள்ள ஆடுமாடுகளின் தொகையில் மூன்றி லொரு பங்கு நம் நாட்டிலிருக்கிறது. ஆனால், பசுவினால் நாம் இன்று அடையும் பயனோ மிகமிகக் குறைவு; பிற நாடுகள் அடையும் பயனில் ஐந்திலொரு பங்கு அல்லது ஆறிலொரு பங்குக்கூட இல்லை! இது நம்மவர் பெரிதும் வெட்கப்படவேண்டிய விஷயம். இதைக் சற்று விவரமாய்க் கீழே பார்க்கலாம்.

நம் நாட்டிலே ஜனத்தொகை 40 கோடி; ஆடுமாடுகளின் தொகையோ 22 கோடி. இந்தத் தொகை எவ்வளவு பெரியதென்பதைப் பிற நாடுகளிலுள்ள ஆடுமாடுகளின் தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் விளங்கும். $4\frac{1}{2}$ கோடி மக்களுள்ள இங்கிலாந்திலே 90 லட்சம் ஆடுமாடுகள் உள்ளன; ஜெர்மனியிலே, மக்கள் தொகை $6\frac{1}{2}$ கோடி, ஆடுமாடுகள் தொகை 1 கோடி 90 லட்சம்; அமெரிக்காவில் முறையே $12\frac{1}{4}$ கோடி, 6 கோடி; டென்மார்க் தேசத்தில் 36 லட்சம், 31 லட்சம்; ஆஸ்திரேலியாவில் 66 லட்சம், 1 கோடியே 40 லட்சம்; நியூஸீலந்துத் தீவுகளில் 16 லட்சம், 43 லட்சம்.

இந்தத் தொகைகளை வேறு வகையாகப் பார்க்கலாம். இங்கிலாந்திலே 5 பேருக்கு ஒரு பசு இருக்கிறது என்று சொல்லலாம். ஜெர்மனியிலே 4 பேருக்கு ஒன்று. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் ஏறக்குறைய 2 பேருக்கு ஒன்று. டென்மார்க்கில் ஒவ்வொருவருக்கும் ஒரு பசு. ஆஸ்திரேலியாவில் ஒருவருக்கு இரண்டு பசு; நியூஸீலந்தில் ஒருவருக்கு மூன்று பசு. அதாவது நம் நாட்டில் இருக்கும் வீதத்தைப்போல் ஆறு பங்கு!

இந்தக் கணக்கைப் பார்க்கும்போது நமக்கு ஒரு வகையிலே திருப்தி ஏற்படுகிறது. ஆடுமாடுகள் வைத்திருப்பதிலே நாம் அமெரிக்காவுக்குச் சமமாக இருக்கிறோம்! அதாவது அமெரிக்காவைப்போல இங்கும் இரண்டு பேருக்கு ஒரு பசு வீதம் இருக்கிறது. மேலே கண்ட கணக்கைப் பார்த்தால், இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் வீதம் இதைவிடக் குறைவுதான் என்பதிலே நமக்குத் திருப்தியல்லவா?

ஆனால், இந்தக் கணக்கு உண்மையைக் காட்டவில்லை. மாடு வைத்திருந்து என்ன பயன்? அதனால் சரியான பலன் கிடைக்கிறதா என்பதுதான் முதன்மையான கேள்வி. பிற நாடுகளில் ஒரு பசு ஒருவருக்கு எவ்வளவு பலன் தருகிறதோ அவ்வளவு பலன் நமக்கும் கிடைக்கிறதா என்பதே இங்கு ஆராயவேண்டிய விஷயம்.

உலகத்திலேயே பசுக்களின் கறவை இந்தியாவில்தான், அதுவும் தமிழ் நாட்டில்தான், மிக மிகக் குறைவாம். உதாரணமாக, இந்தியாவில் ஒரு பசுவானது ஆண்டொன்றுக்கு 890 பவுண்ட் பால் கறக்கிறதாம். அதாவது, ஒரு நாளைக்கு $2\frac{1}{2}$ பவுண்ட்; இது நமது நாட்டுப்புறத்துச் சேர்க்கணக்குப்படி தினம் 4 சேர் பால் கறப்பதற்குச் சமம். இவ்வளவு குறைவான கறவை வேறெந்த நாட்டிலும் இல்லையாம். இங்கிலாந்திலே நாளொன்றுக்குச் சராசரி பால் வீதம் 14 சேர்; ஜெர்மனியில் 20 சேர்; அமெரிக்காவில் 19 சேர்;

ஆஸ்திரேலியாவில் 18 சேர்; நியூஸீலந்தில் 25 சேர்; டென்மார்க்கில் 31 சேர்!

இந்தியாவில் ஒரு மாடு சராசரி நான்கு சேர் பால் கறக்கிற தென்பது, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மிக மிக அதிகம் என்றுதான் சொல்லவேண்டும்; தமிழ்நாட்டில் கறவை சராசரி ஒரு சேர்தான். நம்முடைய தேசமும் தமிழ்நாடும் நமது மொழியும் சமயமும் நாகரிகமும் எவ்வளவோ பழமையானவை, எவ்வளவோ மேலானவை என்று நாம் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறோம். நேற்றுத்தான் தோன்றிய அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நியூஸீலந்திலும் மாட்டைப் போற்றிவைத்திருப்பதையும் மாடுகள் அங்கெல்லாம் கறப்பதையும் எண்ணும்போது, நாம் பெருமை கொள்ள என்ன இருக்கிறது? நாம் வெட்கித்தான் தலைகுனிய வேண்டியவர்களா யிருக்கிறோம்.

வெள்ளைக்கார சோல்ஜர்கள் நம் நாட்டில் இப்போது ஏராளமாய் நடமாடுகிறார்கள். பிரிட்டிஷ்காரன், அமெரிக்கன், ஆஸ்திரேலியன், கனடியன் என இவர்கள் பல வகையினர். யாரைப் பார்த்தாலும் இவ்வாட்கள் அனைவரும் கொழுகொழுவென்று 'கொட்டாப்புளி' போல் கொழுத்திருக்கிறார்கள். பிற நாடுகளை வெள்ளைக்காரன் அடிமைப்படுத்தி ஆளுகிறான் என்றால், அவனுக்கு இவ்வாறு ஏற்பட்டுள்ள உடல் வலிமையும் அதற்கு ஒரு காரணம். இந்த உடல் வலிமை அவனுக்கு எவ்விதம் ஏற்பட்டது?

மேற்சொன்னநாடுகளிலெல்லாம் பால் தயிர் நெய் முதலியவற்றை மக்கள் ஏராளமாய் உபயோகிக்கிறார்கள். பாலும் பாலிலிருந்து செய்யப்பெறும் பொருள்களும் தங்கள் நாடுகளிலேயே போதிய அளவு உற்பத்தியாகாவிட்டாலும், மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளுகிறார்கள். சில உதாரணங்களை இங்குப் பார்க்கலாம். இங்கிலாந்தில் உற்பத்தியாவது, ஆளொன்றுக்குத் தினசரி 14 அவுன்ஸ்தான் வரும்; ஆனால் தினசரி ஒருவர் உபயோகிப்பது சராசரி 39 அவுன்ஸ். இதில் அதிகமாயுள்ள சராசரி 25 அவுன்ஸ் வீதம் பிற நாடுகளிலிருந்து தருவித்துக்கொள்ளுகிறார்கள். தங்கள் உடல் வலிமையைப் பாதுகாப்பதில் ஆங்கிலேயர் இவ்வளவு கவனம் செலுத்துகிறார்கள்.

ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும்-அவரவர்களுக்குத் தேவையான அளவுதான் பால் முதலியன கிடைக்கின்றன. ஜெர்மனி தேசத்தில் சராசரி ஓராளுக்குத் தினசரி உற்பத்தியாவது 34 அவுன்ஸ்; உபயோகம் 35 அவுன்ஸ். அமெரிக்காவில் இவை

முறையே 37; 35. நமது நாட்டிலோ, இந்த அளவுகள் மிகவும் குறைவு; முறையே 7, 6 அவுன்ஸுகள்!

டென்மார்க் முதலிய தேசங்களில் உற்பத்தி அதிகம்; உபயோகமாவது போக மீதியுள்ளது பிறநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. டென்மார்க்கிலே உற்பத்தியும் உபயோகமும் முறையே 148, 40; ஆஸ்திரேலியாவிலே 69, 45; நியூஸீலந்திலே 244, 46.

இந்தியாவில் ஆடுமாடுகளின் தொகை மிக்க அதிகமாயிருந்த போதிலும், அவை கறப்பதும் குறைவு, நம்மவர்கள் பால் முதலியன உண்பதும் குறைவு என்பது மேலே காட்டிய உதாரணங்களால் தெரியவரும். இந்த நிலைமையைப் பரிகரிக்க வேண்டுமானால், பசுக்கள் அதிகமாய்க் கறப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலே நாடுகளில், பசுவை வளர்ப்பதில் எத்தனையோ புதிய முறைகளைக் கையாண்டு புதிய ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். அவற்றின் பயனாக அவர்கள் இன்று மேற்கொண்டுள்ள முறைகள் முழுமையும் நம் நாட்டுக்குப் பொருந்தும் என்று கருத முடியாது. ஆயினும், அவற்றுள் முக்கியமானவை யாவை என்று அறிந்துகொள்வது நமக்கு உபயோகமாயிருக்கும்.

முதலாவதாக, பசுக்களை மேயவிடுவது தவறு என்கிறார்கள். இது நமக்கு வியப்பாய்த் தோன்றலாம். பசு என்பது ஓர் யந்திரம் போல. கரும்பாலை ஓர் இயந்திரம்; கரும்பை அதில் கொடுத்தால், சாறு பிழிந்து கொடுக்கிறது. நெசவாலை ஓர் யந்திரம்; பருத்தியை அதில் கொடுத்தால், நூலாக நூற்றுத் தருகிறது. நூலைக் கொடுத்தால், துணியாக நெய்து தருகிறது. அப்படியே பசுவும் ஓர் யந்திரம். புல், பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு போன்ற தீனியைக் கொடுத்தால், அது இவற்றைப் பாலாக நமக்கு மாற்றித் தருகிறது. கரும்பாலையையும் பஞ்சாலையையும், கரும்பு வயலுக்கும் பருத்தி வயலுக்கும் கொண்டுபோவதில்லை. ஆலைகள் ஒரே இடத்தில் நிலையாக இருக்கின்றன; வயல்தோறும் அவற்றை நாம் கொண்டு போவதில்லை. ஆனால், ஆலைக்கு வேண்டிய கரும்பையும் பஞ்சையும் ஆலையைத் தேடிக் கொண்டுவருகிறோம்.

பசு விஷயத்திலும் இப்படியேதான் செய்யவேண்டுமென்று மேலே நாட்டார் சொல்லுகிறார்கள். பால் செய்யும் இயந்திரமாகிய பசுவைப் புல் இருக்கும் இடமெல்லாம் ஓட்டிக்கொண்டு போய் மேய்த்தலாகாது. எவ்வளவோ அருமையான பாலைத் தரும் பசு, தனக்கு வேண்டிய புல்லைத் தானே தேடிக்கொள்ளும்படி விட்டுவிடலாமா? எவ்வளவு தூரம் அது அலையவும் திரியவும் வேண்டி

யிருக்கும்? மலைச்சாரலா யிருந்தால், நிலத்தில் எவ்வளவு ஏற்றம் இறக்கம்? இதிலெல்லாம் பசுவின் உடல் வலிமை வீண் விரயமாகாதா? எனவே, பசுவை மேய விடாதபடி கட்டிவைத்து, அதற்கு வேண்டிய புல்லைக் கொண்டுவந்து அது இருக்குமிடத்தில் தர வேண்டும். அல்லது, நல்ல புல்லாக உயர்ந்து வளர்ந்துள்ள இடத்தில் பசு உண்ணும்படி நடுவில் ஒரு முளையடித்து அதில் அதைக் கட்டிவைத்துச் சுற்றிலும்மட்டும் மேயும்படி செய்தல் நல்லது. பசுவைக் கட்டிப் போட்டுவிட்டால், அதற்கு உடற்பயிற்சி இராது, நடந்தால்தான் கொஞ்சம் உடற்பயிற்சி இருக்கும் என்பது உண்மை. ஆனால், நாள் முழுவதும் புல் மேய்வதற்காக ஓடித்திரிவது, களைப்பைத் தருமேயொழிய, உடற்பயிற்சியாகாது.

புல்வெளிகளில் பசுக்கள் தாமாகவே திரிந்து மேய்வதில் மற்றொரு கெடுதியும் நேர்கிறது.

நம் நாட்டிலோ வெப்பம் மிகுதி. மழை பெய்வது குறித்த ஒரு பருவ காலத்தில்; பெய்யும் மழையும் இரண்டொரு மாதங்களில் ஏராளமாய்ப் பொழிந்து விடுகிறது. மற்ற மாதங்களில் ஆறுகளிலும் வாய்க்கால்களிலும் ஓடும் நீரைத் தவிர, புல்வெளிக்கு வேண்டிய மழை நீர் கிடைக்காது. இக்காரணங்களால் புல்வெளிகளிலே புல் வளர்வது அருமை. மழைக் காலமாகிய இரண்டொரு மாதங்களில்தான் புல் வளரமுடியும். மற்றச் சமயங்களில், நிலம் ஈரமின்றி வறண்டிருக்கும். ஆகவே, இப்படி வறண்டுள்ள நிலத்தில் போய் மேயும் பசுக்கள், புல்லைக் கடித்துக் கடித்து வேர் வரையில் அடியோடு பிடுங்கிவிடுகின்றன. வளர வகையின்றிக் குன்றியிருக்கும் புல்லை இவ்வாறு பிடுங்கியவுடனே, கொஞ்சநஞ்சம் இருப்பதும் அடியோடு காய்ந்துபோகிறது. ஆங்காங்குள்ள மரங்களிலிருந்து விதைகள் விழுந்து இளஞ் செடிகள் முளைத்திருந்தால், மேய்கிற மாடுகள் அவற்றையும் தின்றுவிடுகின்றன. இதனால், வரவரப் புல்வளமும் மரவளமும் குறைந்துகொண்டே வருகின்றன. நிலத்தின் மேல்மண்ணோடு கலக்கக்கூடிய தழைச்சத்தும் நாளடைவில் குறைந்துபோகிறது. தவிர, ஆடுமாடுகளின் காற் குளம்பின் ஓரம் கூர்மையா யிருக்கிறது. ஆடுமாடுகள் வெளிகளில் நடமாடும்போது, அவற்றின் குளம்பு, ஏற்கெனவே உலர்ந்து போயுள்ள மண்ணைத் தூள்தூளாக்கி விடுகிறது. ஒரு மழை பெய்தவுடனே, இம்மண்ணிலுள்ள தழைச்சத்தும் புல் விதை முதலியனவும், ஓடும் மழைநீர்ப் பெருக்கோடு கரைந்து போய்விடுகின்றன. எனவே, அடுத்த ஆண்டில் புல் முளைப்பது இன்னும் அரிதாய்ப் போகிறது.

ஆகவே, மாடுகளைப் புல்வெளிகளில் ஓட்டி மனம்போனபடி மேயவிடாமல், கட்டிவைத்துப் புல்லை அறுத்துக் கொண்டுவந்து போடவேண்டுமென்பதற்கு இந்தக் காரணம் மிக்க முக்கியமானதாகும்.

அடுத்தபடியாக, மாடுகளிலே உயர்ந்த தரத்தை மட்டுமே வைத்து வரவேண்டுமென்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஒரு

சேர் பால் கறக்கிற பசுக்கள் பத்தை வைத்துப் பராமரிப்பதைவிட, பத்துச் சேர் கறக்கிற பசு ஒன்றை வைத்துப் பராமரிப்பது எவ்வளவோ அநுகூலமானது. ஒரு மாட்டுக்குத் தீனிச் செலவு குறைவு, மேய்க்கிற செலவும் பராமரிக்கிற ஆட்செலவும் குறைவு. அதற்காக வேண்டிய கொட்டகை முதலியனவும் கொஞ்சம். வண்டி மாடுகள், உழவு மாடுகள் விஷயத்திலும் இப்படித்தான்.

ஆகவே, சொற்ப அளவில் கறக்கும் மாடுகளை விட்டு விட்டு அதிகம் கறக்கும் மாடுகளையே ஒவ்வொருவரும் வைத்துக் கொள்ளவேண்டும். பசு உயர்ந்த சாதியாக இருந்தால், அதைக் கண்டபடி மந்தையில் சேர்த்து மேய்த்து, மட்டரகமான காளையுடன் கூடிச் சினைப்பட்டு, பிறகு மட்டரகமான கன்று ஈனும்படி விட்டுவிடுதலும் தவறு. ஒரு மந்தை மாடென்றால், அம்மாடுகள் யாவும் உயர்ந்த ரகமாகவே இருத்தல் வேண்டும். அதற்கேற்ற உயர்ந்த சாதிப் பொலிகாளையைத்தான் அந்த மந்தையில் வைத்திருக்கலாமே யொழிய மட்டசாதிக் காளையை வைத்து வரக் கூடாது. உயர்ந்த சாதிக் காளையானது ஒருவர் பராமரிப்பிலிருக்கலாம்; அல்லது பலருடைய கூட்டுப் பராமரிப்பில் ஊருக்குப் பொதுவாகவும் இருக்கலாம். இப்படி வைத்துவரும் உயர்ந்த சாதிக் காளையால் ஊர் முழுவதுக்குமே நன்மையுண்டு. பொலி காளைக்காக, ஒவ்வொரு பசுவுக்கும் கட்டணம் இவ்வளவு என்று தனியே வசூலிக்கவும் செய்யலாம்.

பசுக்களின் இனப்பெருக்கம் சம்பந்தமாகவும், அவற்றின் தீனி சம்பந்தமாகவும் மேற்சொன்ன முறைகளைக் கையாண்டு மேலை நாட்டினரும் அமெரிக்கரும் சிறந்த பலன் பெற்றிருக்கிறார்கள். மேய்ச்சல் வசதி மிகுதியாயுள்ள ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இம்முறைகளே வழக்கத்திலுள்ளன. இயன்ற அளவு நம் நாட்டில் இவற்றைக் கையாண்டால, இங்கும் பசுக்களும் மாடுகளும் விருத்தி யடையும், நாட்டின் செல்வ நிலையுமே விருத்தியடையும் என்பதில் தடையில்லை.

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க
அறம் வளர்ந்திடுக மறம்மடி வுறுக
நன்மைவந் தெய்துக தீதெலாம் நலிக
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக
நந்தே யத்தினர் நாடோறும் தழைக
வந்தே மாதரம் வந்தே மாதரம்.